திருவரங்கம் திருக்கோயில்

ஸ்ரீ :

திருவரங்கம் திருக்கோயில்



வெளியீடு

அருள்மிகு அரங்கநாதஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீரங்கம். 2011

இணை ஆணையர் / செயல் அலுவலர்

விலை : 20.00

வரலாற்றினாலும், வைணவ வழிபாட்டில் தனக்குள்ள தனித்துவத்தாலும், ``திருவரங்கம் திருக்கோயில்'' தென்னகத்தின் பெருமையை உலகளாவ உணர்த்தியுள்ளது! சிற்பங்கள், வடிவமைப்பு, வழிபாட்டு முறைகள், விழாக்கள், தொன்மையான நிர்வாகம் இப்படி எத்தனையோ தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்வோருக்கெல்லாம் அபூர்வ தகவல்களை அளித்துவரும் 'கலாச்சார கருவூலம்' நம் ``திருவரங்கம் திருக்கோயில்''.

தென்னக மன்னவர் பலர் இன–மத–மொழி–பேதம் இன்றி அன்புடன் வளர்த்த திருக்கோயில் இது நால்வேதப் பொருளுக்கும் நல்விளக்கம் தந்து பாடிய ஆழ்வார்கள் மட்டுமின்றி வைணவத்தை 'வேத–சாரம்' என்ற பொருளில் 'விசிஷ்டாத்வைதம்' என்னும் தனிப்பெயரில் உலகுக்கு அளித்த இராமானுஜரும், அவருக்குப்பின் ஆச்சாரியர் பலரும், உகந்து உறைந்த உன்னதம் கொண்டது 'திருவரங்கம் திருக்கோயில்'!

இத்திருக்கோயிலின் திருவிழாக்களும் வைபவங்களும் – இருப்போர், இல்லாதோர், கற்றோர், கல்லாதோர் – அனைவருக்கும் பொதுவான அகமகிழ்வு அளிப்பதாகும்! ஏனென்றால், இவ்வைபவங்கள் எல்லாம் ஐம்புலங்களுக்கும் ஆன்மீக விருந்து படைப்பவை! வேத பாசுரங்களைப் பண்ணோடு கேட்கையில்– தெய்வத் திருமேனியை வண்ணமிகு வடிவில் வணங்குகையில் – நாமணக்க நைவேத்தியங்களைச் சுவைத்திடுகையில் – இன்னும் இறைத் திருவிழாவிற்கே உரித்தான தூப, தீப, புஷ்ப, கந்த நறுமணங்கள் வந்து நாசியை நிறைத்திடுகையில் – நம்மையும் அறியாமல் 'நாராயணா' என்ற திருநாமம் நம் நாவில் பிறந்து, நாபியில் இறங்கி, மெய்யெங்கும் பரவிச் சிலிர்க்கையில் நாம் பெறும் பேரானந்தம்.... உற்சவங்கள் கண்டு வந்த ஒவ்வொருவரும் பெறுகின்ற விவரிக்க இயலா அனுபவம் அன்றோ?

பெருமைமிகு ஸ்ரீரங்கம் திருக்கோயில் வரலாறு மற்றும் ஆட்சிமுறைகளை யுனெஸ்கோ நிறுவனத்தில் சார்பில் மிஸ்.ஜினைன் அவ்பாயர் அம்மையாரால் Sri Renganatha Swamy. A Temple of Vishnu in Srirangam'' என்றெழுதிய ஆங்கில நூலை தமிழ்நாடு இந்து சமய அறநிலை 'ஆட்சித்துறை திருக்கோயில்' திங்கள் இதழின் முன்னாள் ஆசிரியர் திரு ந.ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்களால் தமிழாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்பட்டதை மீண்டும் வெளியிட முனைந்து ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயில்களின் வரலாற்றினை ஸ்ரீரங்கம் அறையர் திரு.எஸ்.நாதமுனி மற்றும் அம்மாள் ஸ்ரீ.உ.வெ. கிருஷ்ணமாச்சாரியர் ஆகியோர் தொகுத்துதவி இந்நூல் 'திருவரங்கம் திருக்கோயில்'என வெளியிடப் படுகிறது.

தமிழறிந்தோர் அனைவரிடத்தும் இந்நூல் தவழ்ந்து திருவரங்கன் திருவருளை பெற்றிட வேண்டுகிறேன்.

இணை ஆணையர்/ செயல் அலுவலர்
அமி. அரங்கநாதசுவாமி திருக்கோயில். ஸ்ரீரங்கம்.

பொருளடக்கம்

		பக்க எண்
1.	முன்னுரை	1
2.	தலச் சூழலின் வரலாறு	4
3.	மரபு நெறிச் செய்தி	9
4.	வரலாறு	11
5.	கோயிலின் அமைப்பு	23
6.	கோயிலின் ஆட்சி நடைமுறை, வரலாற்றுப் பின்னணி	35
7.	இன்னாளைய மரபுகளும், சடங்குகளும்	60
8.	ஸ்ரீபுண்டரீ காட்க்ஷப் பெருமாள் கோயில், திருவெள்ளரை	65
9.	அ மி கமலவல்லி நாச்சியார் திருக்கோயில், உறையூர்	70
10.	அ / மி பிரும்மபுரீஸ்வரர் திருக்கோயில், கீழ அன்பில்	73
11.	அ / மி சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில், மேல அன்பில்	73
12.	அ / மி மாரியம்மன் திருக்கோயில், கீழ அன்பில்	75
13.	அ / மி காட்டழகிய சிங்கர் திருக்கோயில், ஸ்ரீரங்கம்	76
14.	அரங்கனின்பால் ஆழ்வார்கள் அமுத மொழிகளில் சில................	77
15.	இத் திருக்கோயிலைப் பற்றிய சில தகவல்கள்	79

திருவரங்கம் திருக்கோயில்

முன்னுரை:

திருவரங்கத்திலுள்ள திருவரங்கநாதசுவாமி கோயில் வைணவ மரபு நெறிக்கு உரியதாகும். மகாவிஷ்ணுவுக்கென அமைக்கப்பட்டுள்ள திவ்விய தேசத்துக் கோயில்கள் பலவற்றில், தொன்று தொட்டு இன்றுவரை இடையறாது புகழ்பெற்றுத் திகழும் கோயில்களுள், இக்கோயில் மிகவும் தலைசிறந்து விளங்கி எடுத்துக்காட்டான நிலையில் இணையற்று இயங்கி வருகின்றது. இவ்வொரு காரணத்திற்காகவே கூட, திருவரங்கம் கோயில் நம் ஆர்வத்தையும் ஆவலையும் தூண்டுவதாய், மதித்துப் போற்றத் தக்கதாய் திகழ்கின்றது.

இந்திய சமய வரலாற்றில் இடைக்காலத்திலும், புதிய அண்மைக்காலத்திலும் மட்டுமேயன்றி, இன்னும் இக்கோயில் இணையற்ற நிலையில் சிறந்து விளங்கி வருகின்றது. இதனாலும், இக்கோயில் நம் உள்ளத்தைக் கவர்ந்து இழுக்கும் மாண்புடையதாக இருந்து வருகின்றது. இஃது உயிர்ப்பாற்றலுடன் இயங்கி வருகின்றது. இதன் வரலாறு 1000 ஆண்டுகளுக்கும் முற்பட்டுச் செல்லுகின்றது. எண்ணற்ற யாத்திரிகர்கள், நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து, இங்கு இடையறாது வந்து கொண்டேயிருக் கின்றனர். எதிர்கால மக்களுக்காக இது தனது வரலாறுகளையும், பண்பாட்டு மரபு நெறிகளையும் சிறப்புறப் போற்றிப் பாதுகாத்து வருகின்றது.

வைணவ சமயநெறியின் சூழ்நிலைகளுக்கு இடையிலேயே, இதன் முதன்மையும் சிறப்பும் இயக்கமும் பற்றி உணர்ந்து கொள்ள முடியும். இச்சமய நெறியின் நுண்ணிய பேரறிஞர்களுக்கு, மகாவிஷ்ணுவே இவ்வுலகத்திற்கும், இதன்கண் உள்ள எல்லாப் பொருள்கட்கும், மூலப் பிறப்பிடமாக விளங்குகின்றார். அவர் திருப்பாற்கடலின் நடுவில் உறைவிடம் கொண்டு, ஆயிரம் பணாமுடிகளை உடைய ஆதிசேஷனாகிய பாம்பணையில் சாய்ந்து பள்ளிகொண்டு இருக்கின்றார். அவரது திருவுந்திக் கமலத்திலிருந்து தோன்றிய பிரமதேவர், உலகத்தைப் படைக்க முற்பட்டபோது, மகாவிஷ்ணுவானவர் தெய்வீக உலகத்தின் மேற்பகுதியாகிய வைகுண்டத்தினை ஆட்சி செலுத்துவதற்காகத் தமது அறிதுயிலின்று எழுந்தார். புள்ளரையன் ஆகிய கருடன், அவருடைய புனித வாகனமாகும். மகாலட்சுமி என்னும் திருமகள். அவருடைய முதன்மையான சிறந்த துணைவியாவார்.

மகாவிஷ்ணு பத்துமுறை, இவ்வுலகத்தில் திரு அவதாரம் புரிந்திருக்கின்றார். ஒவ்வொரு முறையும் விலங்குவடிவத்திலோ அல்லது ஒரு மனித வடிவத்திலோ தோன்றியுள்ளார். அவ்வவதாரங்கள் முறையே, மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), நரசிம்மம் (ஆள் அரி), வாமனர், (குள்ளர்), பரசுராமர், இராமர், கிருஷ்ணர், பலராமர், கல்கி என்பனவாகும்.

கிருத்துவ சகாப்தத்தின் தொடக்கத்திலிருந்தே, மகாவிஷ்ணுவின் தனிப்பெரும் சிறப்புடைய தோற்றமாகிய கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்ட அடியார்கள், வைணவ சமயத்தின்கடவுள் நெறிக் கொள்கையை உருவாக்கி அமைத்தனர். இடைக் காலத்தில் இக்கொள்கை நெறியானது, ஒரு தத்துவ ஞானத்தை ஏற்றது. கடவுள் கொள்கையானது தமிழர்கள் இடையிலேயே முழுநிறைவான வெளிப்பாட்டு நிலையை எய்தியது. பண்டைய நூல்களில் மிகவும் புகழ்ந்து சிறப்பித்துக் கூறப்பெறும் அன்பு அல்லது பக்தி என்பது, வெறும் உணர்ச்சியளவில் இல்லாமல், தெய்வத் திருவுருவத்திற்குச் செலுத்தும் அளவற்ற மதிப்பின் அடையாளமாக அமைந்தது. கடவுள், எல்லாம் கடந்த நிலையில் மட்டுமேஅல்லாமல் எல்லாவற்றிலும் கலந்து விளங்குதலையும், அவர் மனிதனிடம் கொண்டுள்ள எல்லையற்ற ஆழ்ந்த அன்பினையும், அதே நிலையில் பாகவதன் ஒருவன் அவரிடம் செலுத்தும் ஆழ்ந்த பக்தியையும் பற்றித் தமிழ் நூல்கள் விரிவாகப் பேசுகின்றன. இந்திய சமயச்சிந்தனையின் வரலாறு முழுவதிலும், இந்தக் கருத்துதான், கிருஸ்துபெருமானின் இரக்க இயல்பிற்கு மிகவும் நெருங்கிய நிலையில் அணித்தே வருவதாக உள்ளது.

கி.பி.8,9–ஆம் நூற்றாண்டுகளில் விளங்கியிருந்த ஸ்ரீ சங்கராச்சாரியர், இப்பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவர் தம்நெறியில் பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1017 –1137) வாழ்ந்திருந்த சான்றோராகிய ஸ்ரீ ராமாநுஜர், அவ்வியக்கத்தை மேலும் தொடர்ந்து வளர்த்தருளினார். வைணவ சமயத்தில் ஸ்ரீ ராமநுஜர் மிகவும் முதன்மை வாய்ந்த ஒரு பெரும் சான்றோராவார். அவர் திருவரங்கத்தில் திருவரங்க நாதர் கோயிலில் உள்ளபடியே வாழ்ந்திருந்து, உபதேசங்கள் புரிந்து, அதன் அடிப்படை அமைப்பைத்திருத்திச் செம்மையுற அமைத்தவர் ஆவர். சமய அனுட்டானங்களைக் கடைப்பிடிக்க வேண்டியதன் இன்றியமை யாமையையும், பக்தியோகத்தின் வாயிலாக முத்தி பெறும் நெறியையும், சரணாகதி நெறியையும், இறையருள் பெறுவதில் உறுதியான நம்பிக்கையையும், அவர் எங்கும் பரப்பி, அறிவுறுத்தினார். கடவுள் மனித வடிவத்தில், அன்பும் அருளும்

நிறைந்தவராக விளங்குகின்றார்; மனிதனுக்கு இறைவன் இன்றியமையாதவாறு போலவே, இறைவனுக்கும் மனிதன் இன்றியமையாதவனாக இருக்கின்றான்; இறைவன் தன்னுடைய, தன்னிடமிருந்து கூறாகவே சீவான்மாவைத் தோற்றுவித்தான். அது முடிவில் இறைவனுடனே திரும்பி, அவனோடு முழு நிறைவான தொடர்பு கொண்டு அவனின் வேறாக, அவனுடன் வாழ்கின்றது என்பவற்றையெல்லாம் இராமநுஜர் விளக்கினார்.

இராமநுஜரின் கொள்கை, இந்தியா முழுவதும் பரவிப் படர்ந்து வளர்ந்துள்ளது. எண்ணற்ற பல கொள்கைப் பிரிவுகளைத் தோற்றுவித்துள்ளது. அதுவே திருவரங்கம் கோயிலில் வழங்கப் பெற்றுவரும் வைணவ சமய நூல்களின் கருத்திற்கும், நடைமுறைக்கும் அடிப்படையாக அமைந்து விளங்கி வருகின்றது. விஷ்ணுவை வழிபடுபவர்கள், அவர் ஐந்து வகையான நிலைகளில், வடிவங்களில் இருந்து வருவதாக நம்புகின்றனர். எல்லாம் கடந்த பரத்துவ நிலையில், அவர் பரவாசுதேவர் அல்லது பரமபத நாதர் என்னும் பெயருடன், நித்திய விபூதி என்னும் வைகுண்டத்தில் ஸ்ரீதேவி, பூதேவி என்னும் துணைவியருடன், நித்திய சூரிகளும், முத்தர்களும் வணங்க வீற்றிருக்கின்றார்.

வியூக நிலையில், திருப்பாற்கடலில் மகாவிஷ்ணுவாக, ஆதிசேடனாகிய பாம்பணையின் மீது பள்ளிக் கொண்டு, ஸ்ரீதேவி பூதேவிகளுடன் நித்திய சூரிகளும், முத்தர்களும் வணங்க எழுந்தருளியிருக்கின்றார். ஆயினும், அவர் நம் கண்களால் காண்பதற்கு அரியவர். அவர் விபவம் ஆகிய தம்முடைய அவதாரங்களிலேயே மனித குலத்திற்கு நெருங்கி வருகின்றார். ஆயினும் அவைகள் எல்லாம் இறந்த காலத்தின் ஒரு பகுதியாகும். பக்தியும் விசுவாசமும் உள்ளவர்கள் அவரை வழிபட்டு, எதிர்காலத்தில் அவர் எடுக்க இருக்கும் கல்கி அவதாரத்தினை நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருத்தல் வேண்டும். அந்தர்யாமி நிலையில் அவர் ஒவ்வொரு சீவான்மாவினுள்ளும், நிலத்தின் அடியில் உறையும் நீர் போலக் கலந்து விளங்குகின்றார். ஆயினும் சீவான்மாவினால் அவருடைய இருப்பைத் தெளிவில்லாமல் ஒரு சிறிதுதான் உணர முடியும். அவனால் ஆட்கொள்ளப்பட்ட பக்குவம் மிக்க பக்தர்களும் ஞானிகளுமே அவனை முழுதாக உணர்வார்கள். தெய்வத் திருவுருவங்களாகிய அர்ச்சாவதார மூர்த்திகளில் தான், அவர் திவ்விய தேசங்களை உறைவிடமாகக் கொண்டு நமக்குக் காட்சி அளித்தருள்கின்றார். இந்தத் திவ்விய தேசங்கள் தொன்று தொட்டு வரும் மரபின்படி 108 ஆகும். அவர்தம் தமிழ்நாட்டு அடியவர்கள், திருவரங்கம்தான்

அவரது தலைசிறந்த திவ்ய தேசம் என்று மதித்து போற்றி வருகின்றார். அதனால் கோயில் என்னும் சொல், வைணவ சமயத்தில், திருவரங்கம் கோயிலையே காரண இடுகுறிப் பெயராகச் சிறப்பாகக் குறிக்கும்.

நாம் கடவுளை அடைதல் இயலாது. காணுதல் இயலாது. அவருடைய வருங்காலத் தோற்றத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதற்கு மட்டுமே நம்மால் முடியும். ஒரு சிலரைத் தவிர, அவரை நாம் முழுதாக அறிந்துகொள்ளல் இயலாது. ஆனால் அவரைக் கோயிலில் தரிசித்து வணங்குதல் மட்டுமே நமக்கு இயலும். இதுவே திருவரங்க யாத்திரை செய்வதின் ஆழ்ந்த தத்துவமாகும்.

தலச் சூழலின் வரலாறு:

திருவரங்கம் திருவரங்கநாத சுவாமிகோயில், வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பகுதியில் அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்து, பண்பாடும் நாகரி கமும் மிக்க பொருந்தித் திகழும் சிறந்ததொரு தலம் இது. இப்பகுதியின்கண், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆரியர்கள் குடியேறுவதற்கு முன்னரே வாழ்ந்திருந்த இந்தியப் பழங்குடி மக்களைப் பற்றிய, மிகத் தொன்மை வாய்ந்தனவும், உண்மையானவையும், தெளிவுற அறியக்கூடியனவுமான, அறிகுறிகள் காணப்படுகின்றன. காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை முதலிய எத்தனையோ பல பெரிய இந்துக் கோயில்கள், இந்தப் பகுதியிற் காணப்படுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் விட மிகப் பெரியது திருவரங்கம் கோயிலேயாகும்.

இந்தப் பகுதியானது, முன்னொரு காலத்தில் சோழ மண்டலக் கடற்கரையினைச் சார்ந்து இருந்தது. நிலப்பரப்பைச் சார்ந்ததும், அரசியலைத் தழுவியும், இப்பகுதி முழுவதும் தட்சிணப் பிரதேசத்தோடு தொடர்புருத்தப் பட்டிருந்தது: சீன நாட்டோடும், ஐரோப்பாக் கண்டத்தோடும், வாணிபத் தொடர்புகள் கொண்டு மிகவும் புகழோங்கியிருந்தது. இதன் வரலாறானது, இப்பகுதியின் முதன்மையான மையங்களிலிருந்து அரசாண்டு வந்த அரசகுலத்தினரின் போராட்டங்களோடு, மிகவும் நெருக்க மாகப் பிணைந்து கிடந்தது. கி.மு. 3 நூற்றாண்டில் விளங்கிய மௌரிய குலத்தைச் சேர்ந்த அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்து, இப்பகுதியைச் சோழர்களும், பாண்டியர்களும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அப்போது அவர்கள் முழு நிறைவான வளர்ச்சியும், ஆற்றலும், இக்காலத்திற் போலப் பெற்றிருந்திலர்

ஆயினும், மௌரிய அரசர்களின் ஆதிக்கத்தைத் தென்னகத்தில் பரவிப் பெருகவிடாமல், அவர்கள் அப்போதே பெரிதும் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தனர்.

குப்த அரசர்களும், அவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களும் கூட, தென்னகப் பகுதியில் இருந்துவந்த அரசர்களைத் தங்களுடைய அரசாட்சியின் கீழ் இணைத்துக்கொள்ள முயன்றனர். கி.பி. 6–ஆம் நூற்றாண்டின் நடுவில், குப்தர்கள் அரசியல் வீழ்ச்சியடைந்த பிறகு தென்னகப் பகுதியானது வாதாபியில் இருந்து அரசு செலுத்தி வந்த சாளுக்கிய அரச மரபுகளின் ஆட்சிக்கு உட்பட்டது. அவ்வரசர்களுள் இரண்டாம் புலிகேசி (கி.பி. 608–642) கன்னோசி நாட்டை ஆண்டு வந்த ஹர்ஷ வர்த்தனர் (605–647) என்பவரின் ஆதிக்கப் படையெடுப்பை முறியடித்தார். சீனநாட்டுப் பௌத்த யாத்திரிகள் ஆகிய இயூன்சியாங் என்பவர் எழுதிய குறிப்புகளின் மூலம், இவ்விரண்டாம் புலிகேசி மிகவும் புகழ்பெற்றுத் திகழ்கின்றார். ஆயினும் கி.பி. 4–ஆம் நூற்றாண்டு முதல் ஆற்றல் மிக்க காஞ்சி நகரத்துப் பல்லவ மன்னர்களால் இரண்டாம் புலிகேசி என்பவர் போரில் தோற்கடிக்கப்பட்டார். பல்லவர்களின் ஆட்சியானது மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி என்பன போன்ற சமயச் சார்பான பல கலைப் படைப்புகளால், மிக்க சிறப்பும் புகழும் பெற்றுத் திகழ்கின்றது. தென்னிந்தியாவில், அதிலும் மிகவும் குறிப்பாகக் கருநாடகப் பகுதியில் பல்லவ மரபினர், ஆரியக் கலாசார அமைப்புகளுக்கு மிக்க ஆற்றலும், ஊக்கமும் அளித்தனர். கி.பி. 9–ஆம் நூற்றாண்டு வரையில், அவர்கள் தமது ஆட்சித் தலைமையை நிலைநிறுத்தி வந்தனர். தஞ்சையில் ஆண்டு வந்த தமிழ் மரபைச் சார்ந்த சோழ அரசர்கள், பல்லவமன்னர்களின் அரசை அதன் பின்னர்க் கைப்பற்றிக் கொண்டனர்.

பல்லவ மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ்ச் சோழ மன்னர்கள், பல நூற்றாண்டுகள் அடங்கி இருந்து வந்தனர். சோழ மண்டல கடற்கரைப் பகுதியிலும், கிழக்குத் தென்னகத்தின் பெரும் பகுதியிலும், சோழர்கள் சுமார் 300 ஆண்டுகள் வரை அரசு செலுத்தினர். இந்துக் கலைப் பண்பாட்டின் வளர்ச்சி செழித்தோங்குவதற்குச் சோழ அரசர்கள் பெரிதும் உதவி புரிந்தனர். நாடு முழுவதிலும் ஏராளமான கோயில்கள் அவர்களால் எழுப்பப்பட்டன. அவைகளுள் இலங்கைத் தீவினை வெற்றி கொண்ட முதலாம் இராசராசசோழன் (கி.பி.985 – 1014) எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலும், கங்கைக்கரை வரையில் படையெடுத்துச் சென்று வெற்றிகொண்டவனும், பர்மா,

மலேயா, சுமத்ரா முதலிய கடல் கடந்த நாடுகளையும் தனது கப்பற்படை வன்மையால் கைப்பற்றி ஆண்டவனும் ஆகிய அவனது புதல்வன் முதலாம் இராசேந்திரசோழன் (கி.பி.1014 – 1042) கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் கோயிலும், மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவனவாகும். கி.பி.12–ஆம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியில், சோழர்களின் ஆட்சி வீழ்ச்சி அடையத் தலைப்பட்டது. அப்போது மதுரையில் பாண்டியர்கள் வளர்ந்தோங்க முற்பட்டனர். காஞ்சிபுரம், தஞ்சாவூர் ஆகியவை, சோழர்களின் அறிவாற்றல் மிக்க ஆட்சியின் கீழ்ப் பல நலங்களைத் தொடர்ந்து பெற்றுவந்தன. அவைகளின் கலையியல் பொருளியல் வளர்ச்சிகட்குக் கல்வெட்டுக்கள் பல சான்று பகர்கின்றன. திருவரங்கநாதர் கோயிலில், சோழர்கள் மிகப் பல கல்வெட்டுக்களை நிறுவிச் சென்றுள்ளனர்.

கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் இந்தச்சோழ மன்னர்கள், மதுரைப் பாண்டிய அரசர்களும், மைசூர் ஒய்சள மன்னர்களும் இணைந்து செய்த முயற்சியினால் தோற்கடிக்கப்பட்டனர். ஒய்சள மன்னர்கள் திருவரங்கம் கோயிலில் மிகுந்த ஈடுபாடு கொண்டனர். அக்கோயிலிற் பெரும்பகுதியான கட்டிடங்கள் அவர்களால் கட்டப்பெற்றன என்று தோன்றுகின்றது. ஒய்சளர்களின் கட்டிடங்களும் கல்வெட்டுக்களும் இங்குக் காணப்படுகின்றன. கி.பி 14– ஆம் நூற்றாண்டின் முற்பகுதியின் பாண்டிய மன்னர்களால், ஒய்சளர்கள் ஸ்ரீரங்கத்தினின்று வெருட்டப் பெற்றனர். வட இந்தியத் தலைவர்களாகிய முகம்மதியர்களும், தென்னகப் பகுதியின் மீது அடிக்கடி படை எடுத்துவந்து தாக்க தலைப்பட்டிருந்தனர்.

முகம்மதியப் படைகள், தென்னகத்தின் வலிமை மிக்க எதிர்ப்பையும் புறங்கண்டு வெற்றி பெற்றன. விஜய நகரத்தில் கி.பி.1336–ஆம் ஆண்டில் தனியுரிமையுள்ள ஓர் இந்தியப் பேரரசு அமைக்கப்பெற்றது. அது, தென்னகத்தின் வடபகுதியை ஆண்டு வந்த பாமினி சுல்தான்களின் தாக்குதல்களை முறியடித்து, கிருஷ்ணையாற்றின் தெற்குப்பகுதியிலுள்ள நிலப்பரப்பு முழுவதிலும், தன்னுடைய ஆட்சியை நிலை நிறுவியது. இந்தப் பேரரசு, தனது தனியாட்சியுரிமையினைச் சுமார் 200 ஆண்டுகள் நிலைநாட்டிப் பாதுகாத்துக் கொள்வதில் வெற்றிகண்டது. கி.பி.1565–ஆம் ஆண்டில், அதன் அரசராகிய இராமராஜர், தலைக்கோட்டைப் போரில் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டார். இத்தோல்விக்குப் பிறகு மூன்றாவது பரம்பரை ஒன்று ஆளத் தலைப்பட்டது. ஆனால், அது ஒரு சற்றும் வலிமையோ, பயனோ உடையதாக இல்லை. ஆதலின்

அதன் கீழ் ஆளுநர்களும் தலைவர்களுமாக இருந்து வந்த மதுரை நாயக்க மன்னர்களும், தஞ்சாவூர் நாயக்க மன்னர்களும், தாமே தனியரசர்களாகக் கி.பி.1602-ஆம் ஆண்டு முதல் ஆட்சி செலுத்தத் தொடங்கினர். அவர்கள் திருவரங்கம் கோயிலுக்கு ஏராளமான மிகப் பெரிய அறக்கொடைகளை அளித்துள்ளனர்.

இந்நிலையில், தென்னிந்தியாவில், ஐரோப்பியர்கள் வந்து தோன்றலாயினர். கி.பி.16-ஆம் நூற்றாண்டில், வாஸ்கோடகாமா விற்குப் பிறகு (கி.பி.1498), குறிப்பாக ஆல் புக்கர்க் என்பவருடன், போர்ச்சுகீசியர்கள் கோவாவில் வந்து குடியேற முற்பட்டனர். அவர்கள் விஜயநகரப் பேரரசரோடு வாணிபம் செய்வதற்குரிய செய்திகளில் மட்டுமேயன்றி, வேறு எதிலும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. விஜயநகரப் பேரரசுடன் வாணிபம் நடத்திய போர்ச்சுகீசியர்கள் அதுபற்றிய பல செய்திகளை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர். அவர்களுக்குப் பின்னர், டச்சுக்காரர்கள் வந்தனர். ஆயினும். அவர்களின் ஆர்வம் முழுவதும் இலங்கையிலும், மலாக்காவிலுமே இருந்தது. கி.பி.1600-ஆம் ஆண்டில் ஆங்கிலேயரின் கிழக்கு இந்திய வாணிகக் குழுவும் கி.பி. 1664-ஆம் ஆண்டில் பிரஞ்சுக்காரர்களின் வாணிபக் குழுவும் அமைக்கப் பெற்றன.

தொடக்கத்தில் ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் பொருளியல் துறையில் ஒருவருக்கொருவர் அமைதியான போட்டிகளில் மட்டுமே ஈடுபட்டு வந்தனர். பிரேங்கோ மார்ட்டின் என்பவரது முயற்சிகளின் பயனாக, கி.பி.1674ல் பிரஞ்சுக்காரர்கள், சோழ மண்டலக் கரையில் புதுச்சேரியில் ஒரு வாணிக நிலையத்தை அமைத்தனர். டச்சுக்காரர்கள் அதனைக் கி.பி. 1693-ல் கைப்பற்றி, 1697-ல் பிரஞ்சுக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டனர்.

கி.பி. 1680-ஆம் ஆண்டில் முகலாயப் பேரரசின் இறுதி அரசனாகிய அவுரங்கசீப் (1658-1707), தென்னகத்தின் மேற்குப் பகுதியில் ஒரு படையெடுப்பை மேற்கொண்டான். அது அவனுக்கு அளவற்ற பேரிழப்பை விளைவித்தது. நெடுங்கால முற்று கைக்குப் பிறகு. ஏராளமான வீரர்கள் இறந்த பின்னர்தான், பிஜப்பூர் கோல்கொண்டா கோட்டைகள் வீழ்ந்தன. இம்முற்றுகையானது, அவுரங்கசீப் இறக்கும் வரையிலும் நீடித்திருந்தது.

ஐரோப்பாவில் ஆஸ்திரிய நாட்டு வாரிசுப் போரும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த ஏழாண்டுப் போரும். ஆங்கிலேயரையும். பிரஞ்சுக்காரரையும் ஒருவரோடொருவர் கொடிய பகைவர்கள் ஆக்கின. அவர்களின் பூசல்களும், போரும் இந்திய ஆட்சிப்

பகுதிக்கும் பரவின. அதன் விளைவாக வாணிகக் கப்பல்களுக்கு அரசர்களின் படைகள் வழித்துணை புரிவது இன்றியமையாததாயிற்று. லாபோர்டனே என்பவரின் உதவியினால், டியூப்ளே சென்னையைக் கைப்பற்றினார். (1745). ஆயினும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஆங்கிலேயர்களுக்கு அது திருப்பி அளிக்கப்பெற்றது. கர்நாடக நவாப் ஆகிய சந்தாசாகிப் என்பவருடன் சேர்ந்து, ஆங்கிலேயர்களையும், அவர்களின் படைத் துணைவர்களையும், கி.பி.1749–ஆம் ஆண்டில் டியூப்ளே தோற்கடித்தார். 1750–ல் டியூப்ளே, தென்னிந்திய நவாப் ஆனார். ஆயினும் அவருடைய அதிகாரம் சிறிது காலம் மட்டுமே இருந்தது. இராபர்ட் கிளைவ் என்பவரால் தூண்டிச் செயற்படுத்தப்பட்டு, ஆங்கிலேயர் சந்தாசாகிபினிடமிருந்த ஆற்காடு நகரத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டனர் (1751). திருவரங்கம் தீவில் இருந்த பிரஞ்சுக்காரர்களை, லா என்பவரின் தலைமையில் சுற்றிச் சூழ்ந்து கொண்டனர். அதனால் பின்வாங்கிய பிரெஞ்சுக்காரர்கள், ஜம்புகேசுவரம் கோவிலுக்குள் புகுந்து ஒளிந்து கொண்டு பின்வாங்கினர். கி.பி.1752–ல் பிரெஞ்சுக்காரர்கள் தம்மிடம் சரணாகதி அடையுமாறு ஆங்கிலேயர்களால் செய்யப்பட்டனர். பிரஞ்சுக்காரர்களின் ஆளுநராக இருந்த டியூப்ளே பதவியிலிருந்து நீக்கப்பட்டு 1754–ல் பிரான்சுக்குத் திரும்ப அழைக்கப்பெற்றார்.

கி.பி.1760–ல் லாலிடோல்ண்டால் என்பவரின் தலைமையில், பிரஞ்சுக்காரர்கள் மேலும் ஒரு சிறு முயற்சி செய்து பார்த்தனர். ஆனால் அது வெற்றி பெறவில்லை. அதன் விளைவாக கி.பி. 1763–ல் பிரஞ்சு வாணிக நிலையங்கள் கலைக்கப்பட்டன. அதிலிருந்து, ஆங்கிலேய வாணிகக் குழுவினர் படிப்படியாக இந்திய நிலப்பரப்பு, முழுவதையும் கைப்பற்றுக் கொண்டனர். இருந்த போதிலும், கருநாடகப் பகுதியில் பிரஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் அவ்வப்போது தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். மகாராஷ்டிரர், பிரெஞ்சுக்காரர் ஆகியவர்களின் உதவிகளைப் பெற்று, சப்ரன் என்பவரின் கப்பற்படைத் துணையைக் கொண்டு, ஐதர்அலி ஆங்கிலேயர்களை வெற்றி கொள்ளக்கூடிய நிலையை ஓரளவு பெரிதும் அணுகினர்.

கி.பி.1798–ல் வெவ்லஸ்லி என்பவர் பிரஞ்சு இந்தியக் கூட்டுப் படையை இறுதியாக முறியடித்தார். மைசூரின்மீது படையெடுத்து கி.பி.1799–ல் ஸ்ரீரங்கப்பட்டினம் கோட்டையைக் கைப்பற்றினார். அதன் பிறகு தென்னிந்தியா முழுவதும் இங்கிலாந்தின் தலைமையின்கீழ்ச் செல்வதாயிற்று. கருநாடகப்

பகுதியானது. சென்னை மாநிலத்தின் நேரடி ஆட்சிக்குள் சேர்க்கப்பட்டது.

மரபுநெறிச் செய்தி:

திருவரங்கம் கோயிலின் விமானம், பிரமதேவனின் தவ நலத்தால் திருப்பாற் கடலிலின்று வெளிப்பட்டுத் தோன்றியதாகும். அதனைப் பிரமதேவர் தேவருலகில் நெடுங்காலம் பூசித்து வந்தார். திருவரங்கநாதருக்கு நித்திய பூசை புரிந்து வரும்படி, பிரமதேவர் சூரியனை நியமித்தார். பின்னர் சூரிய குலத்தில் தோன்றிய இட்சுவாகு அரசன். இவ்விமானத்தினைத் தனது தலைநகராகிய அயோத்திக்கு வழிபடக் கொண்டு வந்தான். இக்குலத்திலேயே திருமாலின் அவதாரமாகத் தோன்றிய இராமபிரான், இவ்விமானத்தினை இலங்கை யினின்று தனது முடிசூட்டு விழாவைக் காணவந்த விபீஷணது க்கு அன்புடன் அளித்தார். இதனை அவன் மிக்க பக்தியுடன் தனது தலையின்மேல் இலங்கைக்கு எடுத்துச் சென்றான். வழியில் காவிரியாற்றின் கரையை அடைந்த அவன் களைப்பின் மிகுதியினால் விமானத்தினைக் கீழே இறக்கி வைத்துவிட்டுச் சிறிதுநேரம் தங்கி இளைப்பாற்றினான். பின்னர் அவன் மீண்டும் புறப்பட நினைத்து அதனை எடுப்பதற்கு எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆயினும் அவனால் பெயர்த்து எடுக்க முடியாதபடி, அஃது அங்கேயே அழுந்திப்பதிந்து நிலைகொண்டு விட்டது. அதுகண்டு, அவன் கலங்கிக் கவலைக் கொண்டு கதறியழுதான். ஆனால் அப்பகுதியை ஆண்டுவந்த சோழன் தர்மவர்மன் என்பவன், அவனுக்கு ஆறுதல் கூறினான். அரங்க நாதரும் காவிரிக் கரையிலேயே தங்கியிருக்க வேண்டும் என்பது தமது விருப்பம் என்று தெரிவித்தார். விபீஷணைத் தேற்றும்பொருட்டு, அவர் தாம் விபீஷணன் இருக்கும் ``தென்திசை இலங்கை நோக்கி'' பள்ளிகொண்டருள்வதாக உறுதி மொழிந்தார். பின்னர் தர்மவர்ம சோழன் அவ்விமானத் தினைச் சுற்றிக் கோயில் எழுப்பி, வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்தான்.

ஆனால், தர்மவர்மசோழன் கட்டிய கோயில், காவிரியின் வெள்ளப்பெருக்கினால் அலையுண்டு மண்ணில் மறைந்தது. அடர்ந்து வளர்ந்த காடுகள், அதனை எவரும் காணாவகையில் மூடிவிட்டன. அதனால் நெடுங்காலம் வரையில் அதனை மக்கள் மறந்தே போயினர். தர்மவர்மச் சோழனின்மரபில் வந்த கிள்ளிவளவன் என்னும் அரசன் ஒருவன், காட்டில் வேட்டையாடச் சென்று, ஒரு மரநிழலில் தங்கி இளைப்பாற்றிக் கொண்டிருந்த

பொழுது, ஒரு கிளியானது "வைகுந்தத்திலுள்ள மகாவிஷ்ணுவின் கோயிலாகிய திருவரங்கம் இருந்த இடம் இது தான். அக்கோயிலை இப்போதும் காணலாம்" என்று பொருள்தரும் புராணச் செய்யுட்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது. அக்கிளியின் சொற்களில் இருந்து உண்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத கிள்ளி வளவன் என்னும் அவ்வரசன், தனக்கு நிழல்தந்த அம்மரத்திற்கு மேற்குத் திசையில், ஒரு கோயிலுக்கு அடிப்படையிட்டான். தனக்கு மேல் சுவர் எழுப்பிய பிறகு, மகாவிஷ்ணு அவ்வரசனது கனவில் தோன்றி, பழைய கோயில் மறைந்திருந்த சரியான இடத்தைக் காட்டியருளினார். அரசன் அளவிலா மகிழ்ச்சி அடைந்தான். அக்கோயிலை மறைத்திருந்த காடுகளை வெட்டினார். மணலை எல்லாம் அகற்றினான். கண்டுபிடிக்கப்பட்ட கருவறையைச் சுற்றிக் கோயிலைக் கட்டினான். தெருக்களை அமைத்தான். மதில்களை எழுப்பினான். நந்தவனங்களைத் தோற்றுவித்தான். திருவரங்கத்தீவைச் சூழ்ந்து ஓடுகின்ற காவிரி கொள்ளிடம் என்னும் இரண்டு ஆறுகளின் கரைகளைத் திருத்திச் செப்பனிட்டான். அக்கோயிலில் நித்திய நைமித்திக பூசைகளையும், விழாக்களையும் ஏற்படுத்தினான்.

இதுவே சம்பிரதாயப்படி, திருவரங்கம் கோயிலின் தோற்றமும், படிப்படியே அதன் வளர்ச்சியும் பற்றிய வரலாறாகும். புராண இதிகாசங்களை தழுவிச் சம்பிரதாயத்தின்படி, படைப்புக்காலத்தில் இக்கோயிலானது திருப்பாற்கடலினின்று தோன்றியதாகக் கூறப்படுகிறது. இக்கோயில் தேவர்களுக்குரியது. சிறப்பாக, இராமாயண காவியநாயகராகிய இராமபிரானுக்கு உரியது. இராமாயணத்திலும், கருநாடக அரசியல் வரலாற்றிலும், ஒரு முதன்மையான பெரும் பங்குகொண்டு இயங்கிய இலங்கைத் தீவுடன், விபீஷணர் வாயிலாக இது தொடர்பு பெற்றிருக்கின்றது.

ஆற்றுவெள்ளம், மணல்மேடுகள், காடுகள் ஆகியவற்றினால் இக்கோயில் மறைந்திருந்தது என்பது வரலாற்றுண்மைக்குப் பொருத்தமுடையதே ஆகலாம்; உண்மையாகவே நடந்த நிகழ்ச்சிகளை அது குறிப்பதாக அமையலாம். எனினும் கோயிலின் இப்போதைய நிலைமையானது, பண்டைக்காலத்தில் ஒரு கருவறை இருந்ததென்றும் கொள்கைக்கு அரண் செய்யக் கூடிய தொல்பொருளியற் சான்றுகள் எதனையும் அளித்திலது. சோழப் பேரரசர்கள் நிகழ்த்தியிருக்கக்கூடிய அகழ்வு ஆராய்ச்சிகளை, ஒரு வகையில் இந்தக் கதை குறிப்பிடுகின்றது எனலாம். மிகவும் போற்றி வழிபடப்படுகின்ற ஒரு பெரும் கோயிலை, எவ்வளவு

முடியுமோ அவ்வளவு பழமைவாய்ந்த தாகச் சொல்ல முயலுவது, உலகளாவிய இயல்பானதொரு விருப்பமேயாதலின், அத்தகைய முறையிலும் இப்பழைய வரலாற்றுக் கூற்று அமைந்திருக்கலாம்.

இக்கதையில் சோழ மன்னர்கள் நிகழ்த்தியனவாகக் கூறப் பட்டவை, வரலாற்று நெறிக்கு இணங்காத காலமுரண் (Anachronism) என்னும் வழுவுடையனவாகும். ஏனெனில் இக்கோயிற் கருவறையானது வரலாறு தோன்றாத காலத்திற்கும் மிகமிக முற்பட்டதாகக் கருதப்படுகிறது. மேலும் தர்மவர்மன், கிள்ளிவளவன் என்பவர்களைப் பற்றி வரலாற்று நூல்களில் விவரம் ஏதும் தெரிந்திலது. ஆயினும் இக்கோயிலிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மிகப் பழங்காலத்துக் கல்வெட்டுக்கள், கி.பி. பத்தாம் நூற்றாண்டில் விளங்கியிருந்த சோழ மன்னர்களால் செதுக்கப்பட்டவை என்பதும், இச்சோழகுலத்து அரசர்கள் நீண்ட நெடுங்காலமாக இக்கோயிலுக்குப் பற்பல தானங்களை வழங்கியுள்ளரென்பதும், திட்டவட்டமாகத் தெரிகின்றன. சோழ அரசர்கள் பழைய அடிப்படைகளின் மீது, இக்கோயிலைக் கட்டியிருக்கலாமென்பது, தற்போது செய்யப்படும் அகழ் வாராய்ச்சிகளினால் ஒரு சிறிது புலனாகின்றது.

வரலாறு:

இந்தியச் சமயவரலாற்றில் திருவரங்கம் கோயிலானது, மிகவும் முதன்மையான சிறப்பிடத்தைப் பெற்றிருக்கின்றது. கி.பி.7–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரையில், தென்னிந்தியாவில் மிகவும் செழிப்புற்று விளங்கிய வைணவ சமயத்தின், மிகப் பெரிய மையத் தலைமைச் செயலகமாகத் திருவரங்கம் திகழ்ந்திருந்தது. தலைசிறந்த வைணவப் பெருஞ்சான்றோராகிய புகழ்மிக்க ஸ்ரீராமநுசர் பரப்பிய விசிஷ்டாத்துவைதம் என்னும் தத்துவக் கொள்கை நெறிக்குத் திருவரங்கம் நிலைக்களமாகத் திகழ்ந்தது.

காலவரன் முறைகளைப் பொறுத்தவரையில் இந்தியாவில் எப்பொழுதுமே வரலாற்று ஆராய்ச்சிகளில், எதையும் தெளிவாக வரையறுத்துச் சரியாக நுனித்துக் கூறுதல் என்பது இயலாததாக இருக்கின்றது. ஏனெனில் உண்மை வரலாற்றுச் செய்திகளும், சம்பிரதாயக் கருத்துக்களும், ஒன்றோடொன்று இங்கு மிக நெருக்கமாகப் பின்னிப்பிணைத்து வைக்கப்பட்டுள்ளன. அதனால் காலவரன்முறை பற்றிய ஆராய்ச்சிகள், இங்கு மிகவும் அபாயமான நிலையில் தவறான நெறியில் கொண்டு செல்லப்பட்டு விடுகின்றன.

இக்கோயிலின் தோற்றம்பற்றிய செய்திகள், புராண இதிகாச முறையில் சொல்லப்படுகின்றன. முதன்முதலில் ஏற்பட்ட இதன் கட்டிட வடிவம் சோழ மன்னர்களால் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அக்கூற்றுக்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதும் கிடைக்க வில்லை என்பதை நாம் முன்னரே கண்டோம். இனி இங்கு இதற்குப் பின்னே வரும் காலத்தைப் பற்றிய செய்திகளிலும், இத்தகைய தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது. கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரையில் இலக்கிய ஆதாரங்கள் மட்டுமே இக்கோயில் இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன. ஆனால் அவற்றிலும் வரலாற்று முறையில் அமைந்த விவரங்கள் குறைவாகவே உள்ளன. இக்கோயில்பெரும் புகழ் பெற்றிருந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சங்க இலக்கியமாகிய சிலப்பதிகாரத்திலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களிலும், இக்கோயிலைப் பற்றிய விவரமான அழகிய சிறந்த சொல்லோவிய வருணனைகள் காணப்படுகின்றன. "விரிந்த அலைகளோடு கூடிய மிகப் பெரிய காவிரியாற்றின் இடைக்குறையில், திருமகள் விரும்பி உறையும் மார்பை உடையவரும், நீல நிறம் கொண்டவரும் ஆகிய திருமால், ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் என்னும் சிறந்த பாம்பணையாகிய பள்ளியின் மீது அழகுறச்சாய்ந்து கொண்டிருக்கும் தன்மை, நீல நிறமுடைய ஒரு மேகமானது பொன்மலையினைச் சூழ்ந்து படிந்திருக்கும் பான்மையில் திகழ்கின்றது" என்னும் கருத்து அமைய,

"நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந்து அகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழுது ஏத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்"

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

திருவரங்கத்தில், திருமால் மகாலட்சுமியுடன், ஆயிரம் பணா முடிகளை உடைய ஆதிசேடனாகிய படுக்கையின்மீது, அரங்க நாதர் என்று தென்கலையினரும், சேஷசயன மூர்த்தி அல்லது அனந்தசயன விஷ்ணு நாராயணர் என வடகலையினரும் குறிப்பிடும் முறையில், உலக முழுமுதற்பொருள் எழுந்தருளி விளங்கி வருதலை,

"கங்கையிற் புனிதம் ஆய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்,
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்!
ஏழையேன் ஏழை யேனே!"

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்,
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்டு,
உடல் எனக்கு உருகு மாலோ!
என் செய்கேன்? உலகத்தீரே!"

என்பன போன்றுவரும் நாலாயிரத்திவ்யப் பிரபந்தப் பாடல்கள் தெரிவிக்கின்றன. திருவரங்கநாதரின் திருவுருவம் வைணவ பக்தி நெறிக்குரிய சிறப்பான உருவத் திருமேனிகளுள் ஒன்றாகும். இத்திருவுருவம் பற்றிய கருத்து, மிகப்பழைய இருக்கு வேதத்திலும் கூடப் புகழ்ந்துரைத்துப் போற்றப்பட்டுள்ளது.

இக்கோயிலையும், இதனது பிராகாரங்கள் பலவற்றையும், இதனது பல சிறப்புக் கூறுகளையும், ஆழ்வார்களின் பாடல்கள் குறிப்பிடுகின்றன. ஆழ்வார்கள் சிலரின் வரலாறுகளும், இக் கோயிலுடன் தொடர்புறுத்தப்படுகின்றன. கோயில் ஒழுகு என்னும் இத்தல வரலாற்று நூல், இக்கோயிலின் நான்காம் திருமதிலை கி.பி. ஏழாம் நூற்றாண்டில் விளங்கியவராகக் கருதப்படுகின்ற புகழோங்கிய திருமங்கையாழ்வார் கட்டியதாகக் கூறுகின்றது. நமது நற்பேறின்மை காரணமாக, இதனை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவும் இக்கட்டிடங்களில் காணப்படவில்லை. பெரியாழ்வார் அருளிய பாடல்கள், அவர் அன்புடன் எடுத்து வளர்த்த பெண்கொடியாகிய கவித்திறம் மிக்க ஆண்டாள் நாச்சியார், திருவரங்கத்திலுள்ள அழகிய மணவாளப் பெருமாள் மீது காதல் கொண்டதும், அவரது மனைவியானதுமாகிய வரலாற்றை உட்கொண்டுள்ளன. ஏழாம் திருமதிற் பிரகாரத்தில், பாண்டிய மன்னர்களின் பாணியில் (கி.பி.12–14 நூற்றாண்டு) தென்மேற்கு மூலையினருகே ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாருக்குச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. நான்காம் திருமதிற் பிரசாரத்திலும்

ஸ்ரீரங்கநாச்சியார்

`சூரியபுஷ்கரணி` என்னும் திருக்குளம் இருக்கிறது. அதன் அருகில் ஊர்வலம் செய்வதற்குரிய, பொன் வெள்ளித் தகடுகளால் அமைந்த வாகனங்களும், பல்லக்குகளும் வைக்கப் பெற்றுள்ள பல கொட்டகைகள் உள்ளன.

இரண்டாம் பிரகாரமாகிய குலசேகரன் திருவீதியை அடைவதற்குத் தெற்கேயுள்ள ஆரியபடாள் கோபுர வழியாகச் செல்லுதல் வேண்டும். அது பதினான்காம் நூற்றாண்டில் முஸ்லீம் படையெடுப்பால் எரித்து அழிக்கப்பெற்றது. 15–ஆம் நூற்றாண்டில் முதற்பாதியில் சோழர் காலத்துப் பாணியில் மீண்டும் புதிதாகக் கட்டப்பெற்றது. இக்கோபுரத்தின் வரிசை ஒழுங்கிற்கேற்பக் கோயிலின் மிகப்பெரிய துவஜஸ்தம்பத்தின் உச்சியில் கருடாழ்வாரின் திருவுருவம் அமைந்திருக்கின்றது. அக் கம்பம் கூரையை ஊடுருவிக் கொண்டு விமானத்திற்கு எதிரில் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது. இந்தக் கொடிக் கம்பம் முதன் முதல் சுந்தரபாண்டிய மன்னரால் (கி.பி. 1251 – 1268) நிறுவப்பெற்றது. அது முஸ்லிம்களால் அழிக்கப்பெற்றது. பின்னர், கி.பி. 1461 – ஆம் ஆண்டில், மல்லிகார்ச்சுனராயர் அவர்களால் செம்பினால் செய்து தங்கத் தகடுகள் வேய்ந்த கொடிக்கம்பமாக அமைக்கப்பெற்றது. செல்வ வளம் மிக்க பக்தர்களால், இப்பிரகாரத்தின் பகுதி கி.பி. 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொன் முலாம் பூசப்பெற்ற செப்புத் தகட்டு ஓடுகளால் கூரை வேயப்பெற்றது. பண்டைக்காலத்தைப் போல இப்போதும் இங்கிருந்து தான் பக்தர்கள் சந்நிதிக்குச் செல்வதற்கு முன்பு வருகைதந்து, பெருமாளுக்குச் சேவைசெய்யத் தொடங்குகின்றார்கள். இந்த இரண்டாம் பிரகாரம் முழுவதும் ஏனையவற்றை நோக்க மிகவும் குறுகலாக உள்ளது. இடையறவுபடாமல் தொடர்ந்து செல்லும் பல மண்டபங்கள் இருப்பதனால், இப்பகுதி அரை வெளிச்சமாகவே இருந்து பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றது. கருப்பக் கிரகத்தைச் சுற்றியுள்ள முதலாம் பிரகாரத்தில், வெளிப்புறச் சுவர்களில் பக்கவாட்டத்தை ஒட்டிப் பதிக்கப்பெற்றிருக்கும் சில தூண்களில், இக்கோயிலுக்கு நன்கொடைகள் பற்பல வழங்கிய நாயக்க மன்னர்களின் உருவங்கள் உடைப்புச் சிற்பமாக இயற்கையளவில் செதுக்கப்பெற்று அழகுற்றுத் திகழ்கின்றன. துவஜஸ்தம்பம் மட்டுமேயன்றி இந்தத் தென்புச்சிறகில் சரஸ்வதி, அயக்கிரீவர்ட, விஷ்ணுதசமூர்த்தி ஆகியோரின் சந்நிதிகள் பல அமைந்திருக்கின்றன.

இரண்டாம் திருவீதியின் மேற்குப்புறம், நீளவாட்டத்தில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. இரண்டாம் பிரகாரத்தின்

உட்புறச்சுவரை ஒட்டியுள்ள பகுதியானது உயர்ந்த மேடையாக அமைந்து, ஒரு பொதுத் தாழ்வாரத்தில் தொடர் வரிசையாக அமைந்துள்ள அறைகள் பலவற்றைக் கொண்டுள்ளது அம்மேடைக்குக் கீழே, பாண்டியர் காலத்துப் பாணியில் அமைந்த இருவரிசைத் தூண்களுடன், ஒரு குறுகலான இடைவெளி உள்ளது. அவ்விடைவெளி வழி ஒரு பெரிய மண்டபத்தை நோக்கிச் செல்கின்றன. அஃது உயரமாகச் சதுரவடிவில் எழுப்பப்பெற்ற மேடையின் மீது அமைந்திருக்கின்றது. அதன்கண் ஒன்றினுள் ஒன்றாக அமைந்து இரண்டு விதானங்கள் இருக்கின்றன. இந்தக் கட்டிடத்திரள் 'துரைமண்டபம்' என்று வழங்கப்படுகின்றது. இது இத்திரு வீதியின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள உள்கோடை என்னும் மண்டபத்தை அடுத்து அணித்தாகவுள்ளது. வடகிழக்கு மூலையை நோக்கிப் பெருமாளின் திருமடைப்பள்ளிகள் இருக்கின்றன. பழங்காலத்தில் இங்குதான் யாத்திரிகர்களுக்கு வழங்குவதற்காகப் பாலும், உணவு வகைகளும் வைக்கப் பெற்றுவந்தன.

இத்திருவீதியின் கிழக்குச் சிறகிலேயே, இத்தகைய பல கட்டிடங்கள் உயரிய மேடைகளின் மீது, வழக்கொழிந்த பழைய சோழர் காலப் பாணியில் நிறுவப்பெற்ற தூண்களுடன் கட்டப் பெற்றுள்ளன. இச்சுவர்கள் மகரவடிவில் அமைந்த வளைவு களைக் கொண்ட பல. சிறு, சிறு, மாடங்களால் அழகு செய்யப் பெற்றுள்ளன.

இனி, இறுதியாகப் பார்வையாளர்கள் இராஜமகேந்திரன் திருவீதி எனப்படும் முதற் பிரகாரத்தை அடைகின்றனர். இரண்டாம் பிரகாரத்தைப் போலவே, இதற்கும் தெற்குப் பகுதியிலுள்ள வாயிலின் வழியாகச் செல்லும் பாதை ஒள்றே ஒன்று மட்டும் தான் உள்ளது. நாழி கேட்டான் கோபுரம் கருவறையின் நேர்ச் செங்கோட்டிற்குக் கிழக்கே சிறிது தள்ளி அமைந்திருக்கின்றது. வாயிலின் வெளிப்புற முகப்பின் இருபக்கங்களிலுமுள்ள மாடங்களில் பத்திரர், சுபத்திரர் என்னும் துவார பாலகர்கள் இருவர் உள்ளனர். உட்புற முகப்பில் சந்நிதியை நோக்கி மகாவிஷ்ணுவிற்கு உரியனவாய் முறையே சங்கு வடிவத்திலும், தாமரை மலரின் வடிவத்திலும் உள்ள சங்கநிதி, பதுமநிதி என்பவற்றின் திருவுருவங்கள் இருபக்கங்களிலும் இருக்கின்றன, முதற்பிரகாரம் முழுவதும் பெரும்பாலும் மேலே மூடப் பெற்றிருக்கின்றது. மேலும் அதன் கூரை மிகவும் தாழ்வாக உள்ளது. முதலில் இங்கு ஏனைய பிரகாரங்களைக் காட்டிலும் மிகவும் இருள் அடர்ந்துள்ளமை பெரிதும் புலனாகின்றது.

கோபுரத்தின் மேற்பகுதி அமைப்பினைக் காண்பதற்கு, நாம் கூரையின் மேலேயே ஏறிச் செல்லுதல் வேண்டும். இங்ஙனம் இருள் அடர்ந்திருப்பினும் கதவுகளில் பதிக்கப் பெற்றிள்ளனவும், படிக்கட்டுகளின் மீதும் சுவர்களின் மீதும் வாயில்களிலும் பதிக்கப்பட்டுள்ள ஒளி மெருகு பூசிய செப்புத் தகட்டின் மேற்பகுதிகள், பளபளப்புடையனவாய் ஒரு சிறிது ஒளி நல்குகின்றன. இத்தகைய செப்புத் தகடுகள் தரையின் சில பகுதிகளில் மட்டுமேயன்றிச் சிறப்பாகக் கருவறைச் சந்நிதியின் முன்பும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இத்திருவீதியின் தெற்கிலும் மேற்கிலும் சுவரை ஒட்டி நெடுக மேடைகள் கட்டிச் சரக்கு அறைகள் ஆக்கப் பெற்றுள்ளன. சுவாமி புறப்பாட்டின் போது திருவுருவம் தெரிவதற்கு மிகப் பெரிய நிலைக்கண்ணாடிகள் மூலைகளில் வைக்கப் பெற்றிருக்கின்றன. மேற்குப் பக்கத்து மேடையில் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் விசயரங்கசொக்கநாத நாயக்கர் (கி.பி. 1706–1732), அவருடைய மனைவி, புதல்வன், மருமகள் ஆகியவர்களின் உருவங்கள், தந்தத்தால் இயற்கை அளவில் செய்து, வண்ணந்தீட்டி வைக்கப்பெற்றுள்ளன. மேடைகளின் முன்னேயுள்ள நடைபாதையில் ஒவ்வொன்றிலும் 20 தூண்களாக இரு வரிசைகள் அமைந்துள்ளன. தெற்கில், மூலைத் தூண்களுட ஒவ்வொன்றிலும் கைகூப்பித் தொழுது வழிபடும் முறையில் நாயக்க மன்னர்களின் சிற்பங்கள் செதுக்கப்பெற்றிருக்கின்றன.

தென்மேற்கு மூலையில் சுவாமி புறப்பாட்டின் போது பயன் படுத்தப்பெறும் அணிகலன்களும் கொடிகளும் தொகுத்து வைக்கப்பெற்றுள்ளன. இக்கருவூலத்தில் மிகப் பெரிய அளவில் பொற்பாத்திரங்களும் இடம்பெற்றுள்ளன. இங்கிலாந்தின் ஏழாம் எட்வர்டு அரசர் 1875 ஆம் ஆண்டில் அளித்த பொற்பாத்திரமும் இடம் பெற்றுள்ளன. பொன் அணிகலன்களில் விலை உயர்ந்த அழகிய நவமணிகளால் செய்யப் பெற்றனவும், சுவாமி புறப்பாட்டின் போது அணிவிக்கப் பெறுவனவுமாகிய முடி அங்கி, உடை அங்கி, முதலியனவும் மற்றும் பற்பல வகையான விலை உயர்ந்த அணிகலன்களும் பாதுகாப்பாக வைக்கப்பெற்றுள்ளன.

முதற் பிரகாரத்தின் வடமேற்கு மூலையின் யாகசாலையும், தொண்டைமான் மண்டபமும் உள்ளன. அவற்றின் கூரைகள். வண்ண ஓவியங்களால் அழகுபடுத்தப்பெற்றுள்ளன. ஆயினும் இச்சந்நிதியை ஜடாவர்மன் முதலாம் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251–1268) அமைந்ததாக இக்கோயிலின் தலவரலாறு கூறுகிறது.

இப்பிரகாரத்தின் கிழக்குப்பகுதி, வடக்கும் தெற்குமாக அமைந்துள்ள இருமண்டபங்களை உட்கொண்டு உள்ளது. வடக்கே இருப்பது அர்ச்சுன மண்டபம், இவ்விரண்டினுள்ளும் இதுவே உயரம் மிக்கது. தெற்குப் பகுதியில் உள்ள மண்டபம் தரையில் ஒரு செப்புத் தகடு பதிக்கப்பெற்றுள்ளது. யாத்திரிகளர்கள் இவ்விடத்தில் நின்று கொண்டு விமானத்தையும், சுவாமியையும் காணலாம். தெற்கில் சிறிது தாழ்ந்த மட்டத்தில் கிளி மண்டபம் உள்ளது. அங்கே ஒரு கூண்டில் கிளி வைக்கப்பெற்றுள்ளது. இது முன்னொரு காலத்தில் இக்கோயிலானது ஒரு கிளியினாலேயே மீளக் கண்டுபிடிக்கப்பட்டது என்னும் கதையினை நினைவுப்படுத்துகின்றது. ஒன்றையொன்று அடுத்துள்ள இவ்விரு மண்டபங்களும் மல்லிகார்ச் சுனராயர் (கி.பி. 1447 - 1465) காலத்தில் வாழ்ந்திருந்த உத்தம நம்பி என்பவர் கட்டியனவாகச் சொல்லப்படுகிறது.

இப்போது நாம் கோயினின் இருதயப்பகுதியாகிய முதன்மை யான இடத்துக்கு வந்துவிட்டோம். வட்டவடிவமாக உள்ள மூலத்தானம் மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய திசைகளில் சூழப் பெற்றுள்ள சதுரமான திருவுண்ணாழியைக் கொண்டுள்ளது. அதன் கண் நாம் முறைப்படி பிரதட்சணை அல்லது வலம் வரலாம். புனிதத்திற் புனிதமிக்க கோயிலின் கருவறைப்பகுதி, மிகவும் தெய்வீக நலம் வாய்ந்த மூலவர் அல்லது அசல மூர்த்தியை உட்கொண்டுள்ளது. ஆதிசேடனாகிய அரவணையின் மீது வலப்பக்கமாகச் சாய்ந்து கொண்டு ஸ்ரீரங்கநாதசுவாமி இங்கு எழுந்தருளி விளங்குகின்றார். இத்திருவுருவம் குழைகாரை யில் (Stucco) 6.40 மீட்டர் (21 அடி) நீளமுடையதாய் புனுகு சட்டம் என்னும் ஒரு தனிச் சிறப்பான தைலம் பூசி, ஒளியும் மெருகும் ஊட்டப்பெற்று விளங்குகின்றது. அஃது இத்திரு உருவத்தை நன்கினிது போற்றிப் பாதுகாக்கும் இயல்புடையதென்று கோயில் அலுவலர்கள் கூறுகின்றனர். திருவரங்கநாதரின் திருவடிகள் ஒரு செந்தாமரை மலரின் மீது வைக்கப் பெற்றுள்ளன. அவற்றின் அருகே, இக்கோயில் இங்கு ஏற்படுவற்குக் காரணமாக இருந்த விபீஷண ஆழ்வார் இருக்கின்றார். அவருக்க அருகே இக்கோயில் முஸ்லிம்களின் காலத்தில் மூலப்படிமம் கிடைக்காதபோது வழிபடப்பெற்ற யோகபேரர் ஆகிய திருவரங்க மாளிகையார் என்னும் உருவ நேர்படிமம் உள்ளது. அரங்கநாதரின் முன்னால் சந்நிதியின் வாயிலுக்கு அருகே உற்சவமூர்த்தி ஆகிய அழகிய மணவாளர் (நம்பெருமாள்) பொற்சிலை உள்ளது. சிறப்புத் திருநாட்களில் இப்படிமம் வலம் செய்விக்கப்படுவதற்காக வெளியில்

எடுக்கப் பெறும். பெருமாளின் இருபுறத்தும் இத்தகைய ஊர்வலச் சடங்கு நிகழ்ச்சிகளில் பூதேவியும், ஸ்ரீதேவியும் உடன் எழுந்தருளுவர். இந்தக் கருவறையின் மேலேயும் பொன்மயமான விமானம் உள்ளது. அதன் கவிகைமாடம் ஓடுகளால் வேயப்பெற்றுள்ளது. தாமரையின் இதழ்களிலிருந்து வெளிவரும் நிலையிலுள்ள நான்கு பொற்கலசங்கள் சூட்டப்பெற்றுள்ளன. விமானத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் மகரவடிவில் உள்ள பலகணியில், தெற்கில் பரவாசுதேவர், மேற்கில் அச்சுதர், வடக்கில் அனந்தர், கிழக்கில் வேணு கோபாலர் அல்லது கிருஷ்ண கோவிந்தர் ஆகிய திருமாலின் திருவுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

ஏனைய பிற பெரும்பாலான கோயில்களைப் போலவே முஸ்லிம் படையெடுப்பிற்கு முற்பட்ட எல்லா கட்டிட அமைப்பும் மறைந் தொழிந்து போயின. அவைகள் மீளவும் பாண்டியர்களால் வழக்கொழிந்த பழைய சோழர்காலப் பாணியிலிருந்து எடுத்துக் கருத்துடன் அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். திருவரங்கம் கோயிலானது பற்பல மாறுதல்களை அடைந்துள்ளது. எத்தனையோ பல நூற்றாண்டுகள் கழிந்தும் தப்பி நிலை பெற்று விளங்கும் ஒரு சிறந்த கோயிலுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது. ஒரு பார்வையாளர் கலையின்பத்திற்காக மட்டுமேயல்லாமல் தொடர்ச்சியாக வளர்ந்து பொலிந்து சிறந்து திகழும் நிலையிலேயே இக்கோயிலை மிகுதியும் ஆராய்ந்து கண்டு மகிழ்தல் வேண்டும்.

கோயிலின் ஆட்சி நடைமுறை, வரலாற்றுப் பின்னணி:

மேலே குறிப்பிட்டபடி, தென்னிந்தியப் பெருங்கோயில்கள் சமய நிலையங்களாக மட்டும் இல்லாமல், பண்பாட்டு நிறுவனங் களாகவும் விளங்கின; அவைகள் அறிவு வளர்க்கும் நிலையங் களாகத் திகழ்ந்தன. சமுதாய வாழ்க்கைத் துறையிலும், கலையியல் வாழ்க்கைத் துறையிலும், அவைகள் மிகவும் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தன; இந்தியத் தத்துவ வளர்ச்சியில் அவைகள் மிகப் பெரிய பங்கு பெற்று இயங்கிவந்தன.

தம்முடைய சொந்த வளர்ச்சிகளைப் பெருக்கிக் கொள்ளவும், தம்முடைய தனி இயக்கத்தை நடத்தி வரவும், பலதரப்பட்ட பெருவாரியான மக்களைத் தொண்டுகளில் ஈடுபடுத்துவது, அவற்றிற்கு மிகவும் இன்றியமையாததொன்று ஆயிற்று.

அவர்களுள் சிலர் தாமாகவே முன்வந்தும், மற்றும் சிலர் ஊதியம் பெற்றும் பணி புரிந்தனர். அவர்கள் எல்லோரும் சேர்ந்து கல்வியைப் பரப்பவும், கோயிலைச் செழிப்பான சிறந்த நிலையில் வைத்திருக்கவும், கோயிலைப் பலப்படுத்துவதற்குதிய ஆட்சியின் அமைப்பை மென்மையான நன்முறையில் இயக்கி உறுதிப்படுத்தவும், கோயிலுக்கு அளிக்கப்பெற்ற பல்வேறு சொத்துடைமைகளைத் திறம்பட நடத்தவும், வெவ்வேறான பணியாளர்கள் எல்லோருடைய வேலைப் பயிற்சி, வாழ்க்கை நலம் ஆகியவற்றை மேற்பார்க்கவும் பெரிதும் துணை செய்தனர். இவற்றால் கோயிலின் நடைமுறை ஆட்சியானது எத்தனையோ பலவகையான சிக்கல்களை உட்கொண்டிருந்தது. ஓர் உண்மையான செயலாட்சி ஒழுங்கு முறை இதற்குத் தேவையாக இருந்தது. அஃது அவ்வப்போது பல சிக்கல்களை உடையதாக இருந்தது அவற்றை தவிர்ப்பதற்கு எல்லா நிலைகளிலும் முதன்மையான செயற்றிறம் வேண்டியிருந்தது. மூலத்தானத்திலும் பிற சந்நிதிகளிலும் வழிபடப் பெறுகின்ற கடவுள் அல்லது கடவுளாரின் கைங்கரியத்திற்கு உரிய தேர்ச்சியும் செயற்றிறமும் கூட இதில் உள்ளடங்கி இருந்தன. கோயில் உள்துறைப் பணியாளர் குழு மட்டுமேயன்றி யாத்திரிகர்கள், மூலத்தானத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள், வேலைக்காரர்கள், கோயிற் பணியாற்றும் கைவுனைக்கம்பியர்கள், இசைவாணர்கள், பாடுநர், ஆடுநர், ஆகிய அனைவரையும் ஒரு சேரத் தழுவியதாக விளங்கியது.

கோயிலின் ஆட்சி நடைமுறையானது பலவகைப்பட்ட அமைப்புகளையுடைய ஓர் பேரவையினரிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. அதன் உறுப்பினர்கள் சிலர் மதிப்பியற் பதவி களுக்கும், மற்றும் சிலர் பரம்பரை அலுவல்களுக்கும் நியமிக்கப் பெற்றிருந்தனர். வேறுசிலர் கிராம சபையாலும், வணிகன் குழுவாலும், கோவில் அர்ச்சகர்களாலும், தேர்ந்தெடுக்கப்பட்டனர், எப்போதேனும் சில சமயங்களில், அமைதியான காலங்களில் படைத்துறையினர் பொறுப்பு ஏற்றனர். இச்செயல்களில் ஒன்றிற்கும் ஊதியம் அளிக்கப்படவில்லை.

இப்பேரவையில், செயலியல் அடிப்படை முதன்மையுடையதாய் அமைந்து இருந்தது. கோயில் அர்ச்சகர்கள், கருவூலர்கள், கணக்கர்கள் மற்றும் கோயிலின் நடைமுறை ஆட்சியில் பங்குகொள்ளும் ஊழியர்கள் ஆகிய அனைவரையும், அப்பேரவை தன்னோடு இணைத்துக் கொண்டது. அதன் ஆய்வுக் கூட்டங்களில் அரசு அலுவலர்கள் வருகை தந்து இருந்தனர்.

பணியாளர்களின் பலதிறப்பட்ட படிநிலையில் உள்ளவர்களுக்கு வழங்குதற்குரிய ஊதியத்தை ஆய்ந்து முடிவு செய்வதற்குங் கூட இவ்விணைப்பு முறை மேற்கொள்ளப்பெற்றது. கிராம சபை, பிராமணர்கள், திவ்வியப்பிரபந்தம் ஓதுவோர், கோயில் அலுவலர்கள் ஆகியோர், இதுபற்றித் தொடர்புடைய பலரையும் அழைத்து, அவர்களும் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பளித்து, அவர்களின் முன்னிலையிற் கலந்து பேசி முடிவெடுத்தனர். சாதி வேறுபாடு பற்றிச் சிறிதும் கருதாமல் தனி மனிதரின் பொறுப்புக்கும், திறமைக்கும் ஏற்ப ஊதிய அளவுகள் படி முறையில் வகுக்கப்பெற்றன. ஒரு பெரிய கோயிலின் பணியாளர் குழு பெரியதாக இருந்தது. அதன் பட்டியல், அவர்களிடமிருந்து எதிர்க்கப் பெற்ற கைக்காரியங்களின் வகையினைப் பற்றிய சிறப்புமிக்க குறிப்பினைச் செவ்விதற் புலப்படுகின்றது. முதலாவதாக, கருவூலர்களையும், கணக்கர்களையும் உள் அடக்கிய ஆட்சியாளர்கள் இருந்தனர்; அவர்கள் ஒரு முதன்மையான இன்றியமையாத நிலையில் பணியாற்றினர். கருவூலர்கள் கோயிலில் கருவூலத்தை மேற்பார்த்து வந்தனர். கணக்கர்கள் கணக்குகளைச் சரிவர வைத்துக் கொள்வதற்குப் பொறுப்பாளர்களாக விளங்கினர். அவர்கள் உரிய வரிகளை வசூலித்தும், வேலையாளர்களுக்கும், கம்மியர்களுக்கும் அனுமதிக்கப்பெற்ற படித்தரங்களைப் பணமாகவோ, தானியமாகவோ வழங்கியும் வந்தனர். இக்ககணக்கர்கள் கிராம சபைகளால் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

பணியாளர் குழுவில் பிராணர்களும், உதவியாளர்களும் கூட இருந்தனர். அவர்கள் நித்திய நைமித்திக பூசைகளைச் செய்து வந்தனர். தனிச்சிறப்பாக, கடவுள் அல்லது கடவுளரின் திருமஞ்சனம், நித்திய பூசை, ஊஞ்சல், விழா முதலியவற்றிற்கு உரியவர்கள் இருந்தனர். சுவாமிக்குத் திருமஞ்சன நீரை உரிய பாத்திரங்களில் கொணர்வதற்கும், குடைகள் பிடிப்பதற்கும் உதவியாளர்கள் பொறுப்புடையவர்களாக விளங்கினர். சுவாமிக்கு உரிய நிவேதனத்தைச் செய்யும் திருமடைப் பள்ளியாளர்களும், இவ்வுதவியாளர் பட்டியலில் சேர்ந்தவரேயாவர்.

நித்திய நைமித்திக பூசைகளிற் கலந்துகொள்ளுபவர்களும், இசைவாணர்கள், கூத்தர்கள், நடனமகளிர் அடங்கிய தொகுதியும் சேர்ந்ததாகும். இத்தொகுதியில் வடமொழி வேதங்களை ஓதுபவர்களும், செந்தமிழ் மாலைகளைப் பாடுபவர்களும், பலவகை வாத்தியங்களை வாசிப்பவர்களும் இடம் பெற்றிருந்தனர். நடனமகளிரின் எண்ணிக்கை, பெரும்பாலும் மிக அதிகமாக

இருந்தது. இராஜஇராஜசோழர் அமைத்த தஞ்சைப் பெரிய கோயிலில் மட்டுமே, நானூறு நடன மகளிர் இருந்தனர். முதன்மையான விழாக்களில் கூத்தர்கள் பங்கு பெற்றனர். மிக முக்கியமான, ஆண்டின் பெருவிழா நிகழ்ச்சிகளுள், ஒரு கோயிலில் ஒரு குறிப்பிட்ட காலத்தில், அவர்கள் தங்கள் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். ஆண்டில் மற்றைய காலங்களில் வேறு இடங்களில் எங்கேனும், அவர்கள் தமது கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்கு உரிமை பெறறிருந்தனர்.

மேற்குறித்த அலுவலர்களுக்கு மேலும், கோயில் வழிபாட்டின் தொடர்புடையவர்கள் வேறு சிலரும் இருந்தனர். கோயிலுக்கு ஊழியம் செய்யும் கைவினைஞர்களும், கலைஞர்களும் அவ்வகையைச் சேர்ந்தவராவர். நாள்தோறும் பயன்படுத்திப் பிறகு உடனே உடைக்கப்பெறும் மட்பாண்டங்களைச் செய்யக் குயவர்களும், நிலையாகப் பயன்படும் செப்புப் பாத்திரங்களைச் செய்யும் கன்னார்களும், கடவுளரின் ஆடைகளைத் தூய்மைப்படுத்த வண்ணார்களும், கோயில் பிராமணர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும் குறிப்பாக சவச் சடங்குகளில் முடிகளைய நாவிதர்களும் நியமிக்கப் பெற்றிருந்தனர். கடவுளரின் உடைகளையும், பூசை செய்யும் அருச்சகர்களின் உடைகளையும் கவனித்துக் கொள்ளத் தையற்காரர்களும், கடவுளரின் நகைகளையும், அணிகலன்களையும் புதிது புனையவும், பழுதுபார்க்கவும் பொற்கொல்லர்களும், வாகனம் தேர் முதலியன செய்வதற்குத் தச்சர்களும் கோயில்களில் இருந்து வந்தனர்.

மற்றும் கோயிற் பணியாளர் குழுவிற் கோவிலைக் காவல் புரியும் சேவகர்களும், அதனை நன்னிலையில் போற்றிவரும் பாதுகாவலர்களும் இருந்தனர். கோயிலுக்குப் புறம்பேயுள்ள கட்டிடங்களையும், பல்வேறு இடங்களில் சிதறிக்கிடந்த நில புலன்களையும் காக்கும் பொறுப்பு இவர்கள் பால் இருந்தது. கிராமசபையால் இவர்கள் நேரடியாக நியமிக்கவும், ஊதியமளிக்கவும் பெற்றனர்.

இறைவன் திருவுலா எழுந்தருளும் திருவீதிகளில் தண்ணீர் தெளிக்கவும், இறைவனுக்குச் சாத்துதற்குரிய அருச்சனைமலர்கள் தயாரிக்கவும், வகை வகையான பூமாலைகள் கட்டவும், திருவுலாக்காலங்களில் அவற்றறை ஏந்தவும், இருந்த பணியாளர்கள் பலரையும் பற்றிக் கூட இங்குக் குறிப்பிடுதல் வேண்டும்.

கோயில்களின் முதன்மையான அலுவலர்களுள், கோயிலைச் சார்ந்திருந்த ஆசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் உள்ளடங்

கியவராவர். ஆசிரியர்களும், அவர்களின் உதவியாளர்களுமே மிக உயர்ந்த ஊதியம் பெற்றனர். கோயில் கல்லூரி அல்லது கல்லூரிகளில் போதிய அளவு கணிசமான எண்ணிக்கையுள்ள மாணவர்கள் இருந்தனர். ஒரு கல்லூரிக்கும், மற்றொரு கல்லூரிக்கும் இடையே மாணவர்களின் எண்ணிக்கை சிறிது சிறிது வேறுபட்டது.

கோயிலைச் சார்ந்த ஒரு மருத்துவப் பணியமைப்பும் கூட இருந்தது. அது பொதுவாக ஒரு மருத்துவர், ஒரு அறுவையர், ஒரு உதவியாளர், பல செவிலியர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தது. கல்லூரிகளில் வசித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், கோயில் பணிபுரியும் பொறுப்புள்ள அர்ச்சகர்களுக்கும் பயன்படும்படி, அதன் கண் 15 படுக்கைகள் ஏற்பாடு செய்யப் பெற்றன. ஏராளமான மருத்துவப் பொருள் தொகுதிகள் அம் மருத்துவச் சாலையில் தொகுத்து வைக்கப்பெற்றன.

பெரும்பாலான இப்பதவிகள், பொதுவாக பரம்பரையாக வந்தன. ஆனால் தண்ணீர் தெளிப்போர், திருஅலகிடுவோர், காவல் புரிவோர் முதலியவர்களுக்குத் தனிச் சிறப்பான திறமையும், பயிற்சியும் தேவைப்படாமையால், அவர்களைத் தவிர்த்த ஏனைய பதவியார்கள் அனைவரும், தத்தமக்குரிய துறைகளில் மிகவும் உயரிய தகுதிப்பாடுகளைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாக இருந்தது. வழிபாட்டுக் கிரியைகள் புரிவதற்கு நம்பிகள் என்போர் மட்டுமே தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்கள் தொன்றுதொட்டு வரும் சைவாகமங்கள் அல்லது வைஷ்ணவ சம்ஹிதைகள் முதலியன போன்ற பல தாந்த்ரிகத்திறன்களிலும், பயின்று இருத்தல் வேண்டும். இவ்வாறே ஒரு புதிய கோயில் கட்டப்படும்பொழுது, ஏற்கனவே வேறு ஒரு கோயிலில் நல்ல அனுபவம் பெற்றுள்ள தொழிலாளர்கள் அழைக்கப்படுவர்.

அலுவல் எதுவாயினும், அந்தந்த துறைகளில் தனிப்பெரும் பயிற்சித்திறனைப் பெற்றிருத்தல் ஒரு முதன்மையான நிபந்தனையாக இருந்தது. உதாரணமாக, கோயிலில் ஒரு பதவிக்குக் குறிப்பிட்ட ஒருவரைக் கிராம சபை பரிந்துரை செய்யுமாயின், அவர் தம் தொழிலில் தேர்ச்சி மிக்கவராக இல்லையாயின், தேர்ச்சி பெற்ற வேறு ஒருவரை ஊதியம் கொடுத்து அவர் தமக்குப் பதிலாகப் பணியாற்ற அமர்த்தலாம். அங்ஙனம் பதிலிகள் அமர்த்தப்படுங்கால் பணியாளர்களின் புதல்வர்கள் அல்லது நெருங்கிய உறவினர்களுக்கு முதன்மை கொடுக்கப்படும். ஓர் அலுவலர் இறந்து போனாலோ அல்லது தமது

பதவியை விடுத்து வேற்றிடம் சென்றுவிட்டாலோ, அல்லது நீண்ட காலமாக வராமலிருந்தாலோ பரம்பரைச் சட்டம் செயற்படும். அப்போது அப்பணியாளருக்குப் பதில், அவர் தம் மரபுவழி உரிமையர் போதிய தகுதிகளைப் பெற்றிருந்தால், நியமிக்கப்பெறுவர். அதன்படி அவர் அப்பணியாளரின் மூத்த மகனாகவோ, மருமகனாகவோ, உடன் பிறந்தாரின் மூத்தமகனாக வோ அல்லது மிக நெருங்கிய உறவினராகவோ இருக்கலாம்.

சில பணியாளர்கள், உதாரணமாக, நடன மகளிர் கோயிலில் தமக்கென ஊதியப் பங்கு பெறுவர். அவர்களில் சிலர் முக்காற் பங்கு பாகம் பெறுவர். ஏனையோர் கால்பாகம் ஒன்றே பெறுவர். இந்தப் பங்குகள் அவர்களுடைய சொத்துரிமையில் ஒரு பகுதியாகும். அதனால் அது தமது மரபுரிமையர்களுக்கும், பிற்சந்ததியினருக்கும் உரியதாக மாற்றி அளிக்கப்படலாம். எல்லோருமே இதற்கு உரிமை பெற்றவர்கள் அல்லர். பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தின் அளவு, ஒரு கோயிலுக்கும் மற்றொரு கோயிலுக்கும் வேறுபட்டிருந்தது. பொதுவாக ஊதியங்கள் பொன் நாணயங்களாகவோ, தானிய வகைகளாகவோ வழங்கப்பெற்றன. பாகங்களைப் போலவே இவ்வூதியங்களும் அலுவலரின் இறப்பிற்குப் பிறகு அவர் தம் குடும்பங்களுக்கு அளிக்கப்பெற்றன. ஆனால் அக்குடும்பத்தின் உறுப்பினர்கள் கோயிலிலோ, அல்லது அதற்குப் புறம்பேயுள்ள கட்டிடங்களிலோ தொடர்ந்து பணியாற்றி வருபவர்களாக இருத்தல் வேண்டும்.

தற்காலிகப் பணியாளர்களைவிட, கோயிலுக்கு வாழ்நாள் முழுவதும் நிரந்தரச் சேவை செய்வதாகச் சூளுரைத்துத் தம்மை ஒப்படைத்துக் கொண்டவர்கள், மிகுதியான ஊதியம் பெற்றனர். சில பணியாளர்கள் கூடுதல் ஊதியங்கள் பெற்றிருந்தனர். உதாரணமாக திருமடைப்பள்ளியர், மெய்காவலர், மற்றும் பிறர், ஒரு குறிப்பிட்ட அளவு சாதம், காய்கறிவகைகள், வெண்ணெய் முதலிய உணவுப் பொருள்கள் பெறுவர். கிராம சபையின் மூலம் நேரடியாகவே ஊதியம் பெறும் காவலர்கள், கிராம மக்களிடமிருந்து ஆண்டுக்கு ஒருமுறை எத்தகைய குறைப்பும் இன்றித் தமக்குரிய தினப்படியை ஒருசேர அளிக்கப்பெறுவர். இயல்பாக ஊதியம் என்பது, ஆண்டிற்கு ஒரு முறை அளிக்கப்பெறும். அது பெரும்பாலும் பணி ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது வரையறுக்கப்பெற்றபடி பலகைத் தானியங்களாகவோ அல்லது அறுவடை நிலையின் அளவுக்கு ஏற்றபடியோ வழங்கப்படும். அவற்றுடன் பணியாளர்களின் துணிமணி வகைகளுக்காக, ஒரு சில பொற்காசுகளும்

வழங்கப்படுவதுண்டு. வேதாந்தம், மீமாம்சம், வியாகரணம் என்பவற்றைக் கற்பிப்பவர்கள் தவிர, ஏனைய ஆசிரியர்கள் மட்டும் தம்முடைய ஒவ்வொரு தொழில் நிலைப்போக்கு அல்லது ஆராய்ச்சிகளுக்கு ஏற்பப் பொன் நாணயங்களை ஊதியமாக வழங்கப் பெறுவர்.

கோயிற் பணியாளர்களால் அனுபவிக்கப்பெற்ற நன்மைகளுள், வீட்டு வசதிகள் வழங்கப்பெற்றாமை, குறிப்பிடத்தக்கனவாகும். அதுபற்றிக் கல்வெட்டுகளில் அடிக்கடி குறிப்பிடப் பெற்றுள்ளன. இராஜராஜ சோழன் தஞ்சாவூரில் ஒரு பெரிய குடியிருப்பையே அமைத்தான். அக்கோயிலின் நானூறு நடன மாதர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான வீடுகள் வழங்கினான். இதனைக் கூறுகின்ற கல்வெட்டு, அவ்வீடுகளின் உரிமையாளர் பெயர்கள், முறையே அவரவர்க்குரிய வீட்டின் எண்கள், அங்ஙனம் அவை அமைக்கப் பெற்ற தெருக்களின் பெயர்கள் ஆகியவற்றைப் பதிவு செய்துள்ளது. மற்றும் பலவகை நிலையினரான அலுவலர்களும் இத்தகைய நன்மைகளைப் பெற்றிருந்தனர்.

எத்தகைய திண்ணமான முடிவுகளுக்கு வரவிரும்பி முயலாமல், ஊதிய அலுவர்கனின் படிநிலை அமைப்பை, ஓரளவு குறிக்கும் வகையில், ஒரு விளக்க அட்டவணை கீழே தரப்பெறுகின்றது.

ஆண்டுக்கு ஒருமுறை	அலுவல்கள்
400 கலம் நெல்	வேதாந்தம் கற்பிக்கும் ஆசிரியர்கள்
300 கலம் நெல்	மீமாம்சம், வியாகரணம் கற்பிக்கும் ஆசிரியர்கள்
200 கலம் நெல்	தலைமைக் கணக்கர்
200 கலம் நெல்	சோதிடர்கள்
200 கலம் நெல்	கூத்தர்கள்
200 கலம் நெல்	நடனக்கலை ஆசிரியர்கள்
170 கலம் நெல்	குழல் வாசிப்போர்
150 கலம் நெல்	தையற்காரர்
150 கலம் நெல்	தலைமைத் தச்சர்
150 கலம் நெல்	அணிகலப் பொற்கொல்லர்
150 கலம் நெல்	சிறுபறைகள் வாசிப்போர்
150 கலம் நெல்	வடமொழி, தென்மொழி மறைகள் ஓதுவோர்

120 கலம் நெல்	வைகாசித் திருவிழாவில் நாடகங்கள் நடிப்போர்
100 கலம் நெல்	ஏனைய ஆசிரியர்கள்
100 கலம் நெல்	தலைமைப் பொற்கொல்லர்
100 கலம் நெல்	நாவிதர்
100 கலம் நெல்	வண்ணார்
100 கலம் நெல்	தலைமைக் குயவர்
100 கலம் நெல்	தண்ணீர் கொணருவர்
100 கலம் நெல்	குடை பிடிப்போர்
100 கலம் நெல்	சங்கு முழங்குவோர்
100 கலம் நெல்	நடன மகளிர்
100 கலம் நெல்	காவலர்கள்
75 கலம் நெல்	இவர்களின் உதவியாளர்கள்

ஊழியர்களுக்கு ஊதியமும், வீட்டு வசதியும் அளிப்பது மட்டுமேயன்றி, கோயிலானது தனது பணியாளர்களுக்குப் பஞ்ச காலத்திலும் அல்லது அவர்களுக்கு ஏதேனும் எதிர்பாராத இடுக்கண் ஏற்பட்டபோதும், மிகவும் தேவை ஏற்பட்ட போதும் உதவிபுரிய முன்வந்தது. மிகவும் தேவை ஏற்பட்ட நெருக்கடியான காலங்களில் கோயிற் கிராம மக்கள் கோயிற் கருவூலத் தினின்று மிகக் குறைந்த விலை மதிப்புள்ள உலோகச் சிலைகள் அல்லது அணிகலன்கள், வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியவற்றை உணவுக்குத் தேவைப்படும் தானிய விதைகளை வாங்குவதற்கு உதவும் வகையில், கடன்பெற முடியும். கோயில்களின் செல்வச்செழிப்பு வளம், இருவகை வழிகளில் அமைந்தது. முதலாவது, நன்கொடைகள், அதுகோயில் கருவூலத்தைச் செழிப்பித்ததுடன், அதன் மூலதனத்தை மிகுதிப் படுத்தியது. தந்தத்தால் ஆன மேடைகள், தூக்கிச் செல்லக் கூடிய நாற்காலிகள், பலவகைப் பேழைகள், படிமங்கள், வைரம், மாணிக்கம், முத்து, பவளம் முதலியவற்றால் இயன்ற அணிகலன்கள் கடவுள் வழிபாட்டிற்குரிய பொற்கலங்கள், முத்துக்கள், முதலிய விலை உயர்ந்த உலோகங்களால் அமைந்த கடவுள் படிமங்கள், பொற்பாத்திரங்கள், பொற்குடைகள், கொடிகள், விளக்குகள் முதலியன அளிக்கப்பட்டதனைச் சொத்துப்பதிவேடுகள் அறிவிக்கின்றன. நிலங்கள், கிராமங்கள், பண்ணைகள், ஆடுமாடுகளின் தொகுதிகள் ஆகியவை வழங்கப்படுவது கோயிலின் செல்வச் செழிப்பிற்கு இரண்டாவது மூலாதாரமாக விளங்கியது. அதன் விளைவாகக் கோயில்கள் வாழ்ந்ததுடன் வளமடைந்தன.

நன்கொடைகள் வழங்குபவர்கள் தெரிவித்த விருப்பங்களுக்கு ஏற்ப, அவர்கள் அளித்த குறிப்பிட்டதொரு விலைப் பொருட் பணத் தொகையைக் கொண்டு, பெரும்பாலும் இத்தகைய சொத்துக்கள் கோயிலால் முழுதும் வாங்கப் பெற்றன.

இந்தச் சொத்துக்கள், கோயில் பணியாளர்களுக்கும், அருச்சகர்களுக்கும் உரிய ஊதியம் வழங்குவதற்கும், கடவுளின் நிவேதனத்திற்கும், நித்திய நைமித்திக வழிபாடுகளுக்கும் வழிவகைகள் செய்தன. பெருஞ்செல்வர்கள், அரசர்கள், அரசிளகுமரர்கள், வள்ளல்கள், -பெருமக்கள், பக்தர்கள் ஆகியவர்களால், இத்தகைய நன்கொடைகள் வழங்கப் பெற்றன. இங்ஙனம் ஏற்கப்பெற்ற நன்கொடைகளின் நுணுக்கமான விவரங்கள் கோயிற்சுவர்களில் லழங்கியவர்களின் பெயர்களுடன் செதுக்கப்பெற்று நமக்குக் கிடைத்திருக்கின்றன.

அதே சமயத்தில், கோயிலானது இடையறாது பலவகைகளில் புதுப்பித்தும், அழகுபடுத்தப்பெற்றும் வந்தது. கட்டிட வேலையும், பழுதுபார்க்கும் வேலையும் ஒரு போதும் நின்றதில்லை. அழிந்து போன அல்லது சிதைக்கப்பெற்ற கட்டிடங்கள், அவ்வப் போது புதியனவாக மாற்றப்பெற்று வந்தன. கட்டிடங்களின் சில பகுதிகள் பித்தளைத் தகடுகள் வேயப்பெற்றன. மற்றவைகள் அக்கறையுடன் புதிய தள வரிசைகள் அமைக்கப்பெற்றன. திருக்குளம் அகழப்பெற்றது. முதன்மையான திருவிழாக்களுக்காக அழகிய முகப்பு மண்டபங்களும், தற்காலிக பந்தல்களும் வேயப் பெற்றன. பிற்குறிப்பிட்ட பந்தல்கள் விலையுயர்ந்த பொருள்களாலும் முத்துக்களாலும் அமைக்கப்பெறுவதும் உண்டு.

பண்டைக்காலத்தின் ஆட்சி நடைமுறைத் தன்மைக்கு இந்தக் கோயில் ஒரு முழு நிறைவான சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகிறது. உடையவர் எனப்படும் ஸ்ரீ இராமாநுசர் ஆகிய பெரும் சீர்திருத்தக்காரருக்கு முற்பட்ட காலத்தில், இக்கோவிலில் ஐந்து வகையான அலுவற்பதவிகள் மட்டுமே இருந்தன. இராமாநுசர் அவற்றைப் பத்தாக உயர்த்தினார். அவர்களின் வேலைகள் 'கோயில் ஒழுகு' என்னும் தல வரலாற்று நூலில் விரிவாகக் கூறப்படுகின்றது. மேலே சுருக்கமாகக் கூறிய செய்திகளைவிட, அது மேலும் பல செய்திகளைத் தெரிவிக்கின்றது. ஆதலின் அது பற்றி இங்கு ஆராய்தல் நலம் பயக்கும்.

(1) கோயில் அலுவலர்களுள் திருப்பதியார் என்பவர்கள், முதல் வகையினராவர். இவர்கள் இராமாநுசரைத் தங்கள் ஆன்மிகக் குருவாகத் தேர்ந்துகொண்டவர்கள்: மூலத்தான ஊழியத்திற்கு

இவர்கள் பொறுப்பு உடையவர் ஆவர். இவர்களின் தலைவர் தண்டு என்னும் முத்திரைக்கோல் ஏந்திச் செல்வர். கோயிலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை, இவர் அவ்வப்போது உசாவி அறிந்து வைத்துக் கொள்வார். கோயிற்பணியாளர்கள் எல்லாரையும் போவலே, இவ்வூழியர்களும் முறைப்படி நீராடிய பிறகு, வைகரைக் காலம் முதல் தமது கடமைகளைச் செய்யத் தொடங்குவர். கோயிலின் மூலத்தானக் கதவு திறந்த உடனேயே, இவர்கள் முகப்பு மண்டபத்தையும், பித்தளை பதித்த• திருவாயிலையும், பிரதட்சிணப் பிரகாரத்தையும், திருவல கிட்டுத் தூய்மை செய்வர். வழிபாட்டில் பயன்படுத்தப்பெறும் திரு விளக்குகள் அனைத்தையும், நெய்வார்த்துத் திரியைத் துடைத்தும் அல்லது மாற்றியிட்டும், தம் உதவியாளர்களாகிய ஏகாங்களிகளால் அளிக்கப்படும் நெய்யை வார்த்தும், போற்றிப் பராமரிப்பர். வழி பாட்டுக் காலங்களில் இவர்கள் திருவிளக்குகளை ஏற்றி, பூசை புரியும் அர்ச்சசகர்களிடம் அவற்றை முறையே எடுத்துக் கொடுப்பர். அருச்சகர் ஓமம் புரியும்பொழுது, இவர்கள் விளக்குகள் ஏந்துவர். மற்றும் தூபங்கள் இடுவர். பக்தர் களுக்குச் சுண்டல் முதலிய பிரசாதங்கள் வழங்குவர். சுவாமிக் காகச் செய்யப்படும் பலவகையான பிரசாதங்கள் முதலியன வற்றைப் பிறரிடமிருந்து பெறுவதும், பெற்று எடுத்துச் செல்வதும், இவர் தம் பணிகளில் ஒன்று.

முஸ்லிம்களின் படைப்பற்றாட்சிக்கும் பின்னர், இவர்களின் பணிகளில் ஏற்பட்ட மாறுதல்களைக் கோயிலொழுகு குறிப்பிடு கின்றது. பிற்காலத்தில் சிறப்புத் திருநாட்களில் வேதம் ஓதுதலும், பிரபந்தம் பாடுதலும் கூட, இவர்களின் கடமையாயிற்று. இவர்களின் சிலர் சிறப்புரிமைகள் பெற்று, எம்பெருமானுக்குரிய நிவேதனம் விளைபொருட் காணிக்கைகள் என்பவற்றுடன் தொடர் புடையவற்றில், காசாகவும் ஏராளமான செல்வம் தொகுத்தனர். மிகவும் சமீப காலத்தில் இவர்கள் சந்தனம் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றனர்.

(2) இரண்டாவது வகையினர் திருப்பணி செய்வார் எனப்படுவர். இவர்கள் திருமஞ்சனத்திர்குத் தண்ணீர் கொணருவர். வழிபாட்டுச் சடங்குகளில் தண்ணீர் மிகவும் முதன்மையாக மதிக்கப்பெற்றது,. இவர்கள் ஆன்மீகத் தலைவர்களாக விளங்கித் துறவிகள் ஆகிய ஞானாசிரியர்களின் வழி வழிச் சந்ததியினரிலிருந்து, பரம்பரை முறையில் தேர்ந்தெடுக்கப்படுவராவர். இவர்கள் எண்ணிக்கையில் ஐந்துபேர் மட்டுமே யாவர். புனித இடங்களில் தண்ணீர் தெளிப்பதும், திருவிழாக்களிலும், ஊர்வலங்களிலும்

இறைவனுக்குக் குடை பிடிக்கப்படும் போது தண்ணீர் வார்ப்பதும், வாசனைப் பொருள்கள் இட்ட பரிமளத் தண்ணீரை இறைவனுக்கு நறுமணம் கமழும் பொருட்டு உயரச் சிதறுவிப்பதும், இவர்களின் பணியாகும். சுவாமி புறப்பாட்டுக்கு முன்னர் திருவுலாச் செல்லும் திருவீதிகளில், தண்ணீர் தெளிக்கப்படுமாறு மேற்பார்த்துக் கொள்வதும், இவர்களின் கடமையாகும். வேதமும், பிரபந்தமும் ஓதுபவர்களுக்கு முன்னர் குடைபிடித்தலும், ஊர்வலத்தினை முன் நின்று நடத்துதலும், பக்தர்கள் கொணரும் வெற்றிலை, தேங்காய், பழம், காணிக்கை முதலிய வற்றைக் கோயிலின் சார்பில் பெறுதலும், அவற்றைப் பல்வேறு வகையான கோயில் அலுவலர்களுக்கு முறையே வழங்குதலும், இவர்களுக்குச் சிறப்புரிமையாகும். சமய சம்பிரதாய வரன்முறைகளையும் அல்லது கோயில் தொடர்புடைய எந்தச் செய்தியையும் ஆராய்ந் துணர விரும்பும் பக்தர்களின் குழுவைக் கூட்டுவிப்பதும், அவர்கள் நிகழ்த்தும் ஆராய்ச்சி விவாதங்களை விசாரித்துத் தீர்ப்பளிப்பதும் கூட, இவர்களின் கடமையாகும்.

இராமாநுசரின் காலத்தில் இவர்களுக்க வழங்கப்பெற்ற சிறப்புரிமைகளுள், வீதிகளை மேற்பார்வையிடக் கோயில் யானைகளின் மீது அமர்ந்து செல்லும் உரிமையை இவர்கள் தமக்கென அமைந்து வைத்துக்கொண்டார்கள். ஆனால் இந்தக் கடமைகள் மிகுதிப்பட்டபோதும், முஸ்லிம்களின் குடியிருப்பிற்குப் பிறகும், இவர்கள் தங்களுடைய உரிமைகளில் சிலவற்றைப் பிராமணர்களுக்கு ஏதேனும் ஒன்றிற்குப் பதிலாகவோ அல்லது நன்கொடையாகவோ விட்டுக்கொடுத்துவிட்டனர்.

(3) பட்டியலில் அடுத்திருப்பவர்கள், இராமாநுசரால் ஒரு தொகுதியாக மாற்றி அமைக்கப்பெற்ற பிராமணர்கள் அல்லது நம்பிகள் என்போர் ஆவர். இவர்கள் நேரடியாக சுவாமி கைங் கரியத்திற்கும், அவரை பூசிப்பதற்கும், மூன்றாம் பிரகாரத்தி லுள்ள பற்பல சிறுசிறு சந்நிதிகளிலுள்ள சுவாமிகளைப் பூசிப் பதற்கும், நியமிக்கப்பெற்றனர். நாள்தோறும் கருவறையில் செய்யப்படும் பூசையின் போது, இவர்கள் தூப தீபங்கள் ஏந்துவர் நாள்தோறும் கருவறையில் ஆடை அணிகலன்களைக் கழற்றியும், மாற்றியும் அணி செய்வர், சுவாமிக்காக் கொணரப்பெரும் வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், பாயாசம் முதலிய வழிபாட்டுப் பொருட்களை ஏற்பர். நாள் தோறும் நடைபெறுகின்ற திருமஞ்சனங்களிலும், விசேட காலங்களிலும் நிகழும் அபிசேகங்களிலும், அருகேயிருந்து அந்தந்த சடங்கிற்குத் தேவைப்படும் பொருள்களை இவர்கள் எடுத்துக் கொடுப்பர்.

உதாரணமாக, சுவாமி தந்தசுத்தி செய்து கொண்டு பிறகு, இவர்கள் கண்ணாடி எடுத்துக் கொடுப்பர். கொடிக் கம்பத்தில் கொடியேற்றுவதும், கதாயுதம், சங்கு, சக்கரம், விருதுக்கொடி என்பவற்றைப் பாதுகாத்து எடுத்து அளிப்பதும்கூட இவர்களின் கடைமையாகும்.

சுவாமி திருவுலாச் செல்லப் புறப்படுங்கால் அவரை வாகனங்களில் ஏற்றி அமர்ந்ததும், இவர்களின் கடமையாகும். இவர்கள் சுவாமிக்கு புதிய சிறந்த பூமாலைகள் சாத்துவர். சுவாமியின் மீதிருந்து களைந்த பழைய பூமாலை களைச் சுவாமியின் பிரசாதத்தை கோயிலில் ஆட்சித் தலைவருக்கு அளிப்பர். சுவாமிக்கு மேலே குடைப்பிடிக்கும் உரிமையும் கூட, இவர்களுக்கு வழங்கப்பெற்றிருந்தது.

மாலைவேளைகளில், சுவாமி கருவறைக்குத் திரும்பும்போதும், காவலர்கள் சென்று விட்ட பின்னர் இவர்கள் திருவரங்கத்திலேயே பிறந்த பக்தர்களாகிய உள்ளூராார்களுடன் சேர்ந்து, பூட்டி முத்திரையிடப்பெற்ற பொற்கதவு வாயிலைக் காவலிருந்து பாதுகாப்பர். சுவாமிக்கு உரிய அணிகலப் பேழைகளைப் பத்திரமாக வாங்கி வைத்திருந்து, அவற்றின் பொறுப்பிர்குரிய அணிகல அலுவலர்களின்பால் திரும்ப ஒப்படைப்பர்.

சுவாமி வரும்போது வேதங்கிளலிருந்து சில பகுதிகளை பாராயணம் செய்து ஓதுவதற்கும், சுவாமியின் வாகனத்தைப் புற்றிய புகழுரைகளாக உள்ள பாடல்களை ஓதுவதற்கும், இவர்கள் உரிமையுடையவர்களாவர். இவர்களில் வயது முதிர்ந்த வரும், அறிவு மிகுந்தவருமாக உள்ளவர்கள், பரமேஸ்வர சம்மி தையின் நுண்பொருள்களை மாணவர்களுக்குக் கற்பித்துப் பயிற்சி அளிப்பர்.

(4) அடுத்து வருபவர்கள், திருவரங்கத்திலேயே பிறந்த உள்ளூரார் எனப்படும் பிராணர்கள் ஆவர். இவர்கள் இராமாநுசரின் சிஷ்யர்கள். இவர்கள் மூலவருக்கும், புறவுலா வரும் உற்சவ மூர்த்திக்கும், கைங்கரியம் செய்ய அமைக்கப் பெற்றவர்களாவர். சுவாமி பூசைக்குரிய புனித பாத்திரங்கள், சுவாமியின் பட்டாடை, பருத்தியாடைகள், விசிறி, குடை அணிகலன்கள், தோரணங்கள், பஞ்சணைகள், உலாக்காலங்களில் உடனெடுத்துச் செல்லப்பெறும் வெற்றிலைப்பேழை, வளைந்த கூர்வாள் முதலிய பலவற்றைப் பாதுகாத்தும், எடுத்துப் பயன்படுத்துவதும், இவர்களின் பொறுப்பாகும். நாள்தோறும் எல்லாச் சடங்குகளிலும், பயணங்களிலும், உலாக்களிலும் இவர்கள் சுவாமிக்குச் சந்தனம்,

ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

சுவைமிக்க இனிய பலவகைப் பணியாரங்கள் முதலியன வழங்குவர். திருமஞ்சன நீரில் நறுமணம் கலப்பர். ஆலவட்டப் பணிபுரிவர். சுவாமியின் திருவடிகளில் நீர் சொரிந்து பூசிப்பர். சுவாமியின் நெற்றியில் வைஷ்ணவச் சின்னமாகிய புனித நாமம் தரிப்பதற்கு முன்னர் சுவாமிக்குத் தாம்பூலம் வழங்குவர். திருமடைப் பள்ளியிலிருந்து பலவகை நிவேதனங்களைக் கொணர்ந்து சுவாமிக்கு படைத்து உண்பிப்பர். புதிதாகத் தோய்த்த ஆடைகளும், துளசி மாலைகளும், சந்தனக் கலவையும் சமர்ப்பிப்பர். வேதமும், திவ்வியப்பிரபந்தமும் ஓதுபவர்களின் முன்பு, ஒரு புதிய பாத்திரத்தில் தேங்காய்ப்பால் வைப்பர். சுவாமிக்கு ஆன பிறகு, புனித விளக்குகளை மாற்றி அமைப்பர்.

உறையூரில், ஆண்டுக்கொருமுறை சுவாமியும், தாயாரும் சேரும்போதும், இருவரும் உடன் எழுந்தருளி வீற்றிருக்கும்போதும், அணி வகுத்துத் திரளாக நின்று வணக்கம் செலுத்தி, ஆலவட்டப் பணிபுரிவர். சில சிறப்பியல் நிகழ்ச்சிகளின் போது, கோயிலின் தலைமை ஆட்சியாளரைக் கௌரவிக்கும் கடமையும்கூட இவர்களுக்கு இருந்தது. அப்போது இவர்கள் வழிபாட்டிற்குரிய பொருள்களை வழங்கிக் கௌரவிப்பர். அவர் பொருட்டுச் சுவாமிக்கு அர்ச்சனை முதலிய செயல்களைப் புரிவர். சந்தனம், தாம்பூலம் முதலிய பிரசாதங்களை அளித்து வாழ்த்துவர்.

பிற்காலத்தில், மற்றைய பல கோயில் அதிகாரிகளைப் போல, உள்ளூரார் என்பவர்கள் தமக்குரிய பணிகளைத் தாமே செய்யாமல், ஏனைய ஊழியர்களிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் அவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பையும், தம்முடைய கௌரவப் பணிகளையும், தாமே வைத்துக் கொள்வர்.

(5) இசைவாணர்களும், திருப்பதிகம் பாடுபவர்களும் ஐந்தாம்வகை ஊழியராக விளங்கினர். இவர்கள் விண்ணப்பம் செய்வோர் எனப்படுவர். வீணை (சிதார்) வாசித்தல், வேதம் ஓதுதல், பிரபந்த பாராயணம் செய்தல், இசைபாடுதல் ஆகியவற்றை, இறைவனின் முன்பு இவர்கள் எல்லாச் சமயங்களிலும் செய்வார்கள். பாடலும், இசையும், தெய்வ கைங்கரியத்தில் மிக முதன்மையான பங்கு பெற்றிருப்பதனால், இவர்களின் தொண்டு, கோயிலில் மிகப் பெரிதும் நிகழ்ந்து வந்தன. இவர்கள் இசைக் கலையில் தேர்ச்சியும், சாத்திரங்களில் சிறந்த பயிற்சியும் பெற்றிருந்தனர். அதனால், கோயிற் கைங்கர்யங்களில் மிகச் சிறப்பான உயர்விடத்தை இவர்கள் பெற்றிருந்தனர். சுவாமியின் திருமுன்னிலையில் விறலியர்

நடனமாடும் போதும் இவர்கள் பாடுவது உண்டு. "விண்ணப்பம் செய்வார்" எனப் பெறும் இவர்கள் கோயிலில் தனி மரியாதைகள் பெற உரிமை உடையவர்களாவர்.

(6) திருக்கரகக்கையார் என்பவர்களும் சுவாமி பூசையில் நேரடியாகவும், நிலையாகவும் தொடர்புடையவராக விளங்கினர். சரக்கறைக்குப் பக்கத்திலுள்ள சேம அறையிலிருந்து, வைகறையாகிய விடியற் காலையிலேயே தீர்த்த பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சென்று, இரண்டு நாட்களுக்குத் தேவையான தீர்த்தங்களைக் காவிரி நதியிலிருந்து அவற்றில் முகந்து கொண்டு, யானையின் மீது வைத்துக் கோயிலுக்குக் கொணர்வது இவர்களின் கடமையாகும். பின்னர், ஒரு நாள் முழுவதும் செய்யப்பெறும் எல்லா பூசைகளிலும் பயன்படுத்தப்பெறும் ஐந்து பாத்திரங்களில், இவர்கள் நீர் நிரப்பி வைத்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும், விடியற்காலையில் சுவாமி முகங்கழுவித் தந்தசுத்தி செய்து கொள்ளும் சடங்கின் போதும், பிறகு அவருக்குத் தாம்பூலம் வழங்கும் போதும், பாத பூசை புரியும் போதும், தீர்த்த பாத்திரங்களை இவர்கள் ஏந்தி நிற்பர். திருவிழாக்களுக்குப் பூமாலைகள் தொடுத்து அளிக்கும் பொறுப்புள்ள அலுவலரின் கைகளுக்கு தண்ணீர் வார்ப்பதும், சுவாமிக்குப் பூமாலைகள் தொடுப்பதும், நறுமணம் ஊட்டப் பெற்ற விதைகளால் ஆரங்கள் புனைவதும், முற்காலத்தில் இவர்களின் கடமையாக இருந்தது. முஸ்லீம்களின் உட்குடியிருப்பு நேர்ந்ததற்குப் பின்னர், இப்பணிகள் பிராமணர்அல்லாத ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

(7) பணியாளர்களின் வரிசையில் ஸ்தானத்தார் என்பவர்கள் ஏழாம் வகையினராவர். சுவாமி பூசையோடு தொடர்புடைய எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வது, இவர்களின் கடமையாகும். சிறப்பாக, சுவாமி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எழுந்தருளும்போது, அவரது பல்லக்கை சுமத்தலும், வாகனங்களைத் தாங்குதலும், திருவீதி உலாக்களின்போது தீர்த்தக் கலசங்களுக்கு குடைபிடித்தலும், சுவாமி எழுந்தருளும் பல்லக்கிற்குப் பக்கத்தில் ஏதேனும் அசம்பாவிதங்கள் நேராதபடி உடன் செல்லுதலும், இவர்களுக்குக் கடமையாகும். சுவாமிக்குப் பால், தயிர், வழங்குதலும், உயர் அலுவலர்களுக்குச் சில பிரசாதங்களை அளித்தலும், கோயிலின் தலைமை ஆட்சியருக்குப் பூமாலைகள் சூட்டுதலும், சுவாமியின் விலைஉயர்ந்த மணி, பொன், வெள்ளி அணிகலன்கள் வைக்கும் பாதுகாப்பறைக்குக் கருட முத்திரை பொறித்தலும், இவர்களுக்குரிய

சிறப்புரிமையாகும். முஸ்லீம்களின் உட்குடியிருப்பு நிகழ்ச்சிக்குப் பின்னர்த் திருவீதி உலாக்களை நடத்துதலுக்கும், சுவாமி பிரசாதங்களை விநியோகித்தலுக்கும் பொறுப்புள்ளவர்களாக, இவர்கள் தொடர்ந்து இருந்து வந்தனர். பிற்காலத்தில், குறிப்பாக நம்பிகளுக்கு, இவர்கள் தம்முடைய உரிமைகளில் சிலவற்றை விட்டுக் கொடுத்தனர். கருட முத்திரையைப் பொறிக்கும் உரிமை, நாச்சியார் சந்நிதியை நிர்வாகித்து வந்த அலுவலரிடம் இறுதியாக மாறியது. ஆயினும், இது பற்றி நெடுங் காலம் வழக்கீடுகள் இருந்து வந்ததனை கோயிலொழுகு குறிப்பிடுகின்றது.

(8) அடுத்து, வருபவர்கள், பட்டர்கள் எனப்படுபவராவர். இவர்கள் நாள்தோறும் பூசையின்போது கர்ப்பக்கிரகத்தில் இருந்து, வேதமந்திரங்கள் முதலியவற்றை ஓதும் கடமையும், பொறுப்புமுடைய ஒரு தனித் தொகுதியினராவர். இவர்கள் நித்தியப்படி பூசை, சிறப்பியல் நிகழ்ச்சிகள், ஆகிய எல்லாவற்றிலும் உடனிருந்து கலந்துகொள்வர். பரிவட்டம், சந்தனம், தனிமாலைகள், தாம்பூலம் முதலிய சுவாமி பிரசாதங்களைப் பெறுவர். ஸ்ரீ இராமாநுசர் செய்து வந்த சீர்திருத்தங்களுக்கு பின்னர், திருவரங்கம் கோயிலின் தலைமை அர்ச்சகராகிய நம்பிகள் ஒருவரே, இதற்கு முன் செய்து வந்த பல பணிகள், இவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாகப் பிரித்தளித்து ஒப்படைக்கப்பட்டது.

(9) இப்பணியாளர் திரளில், இறுதியாகக் குறிப்பிடத்தக்கவர், ஆரியபட்டர்கள் என்னும் பிராமணர்கள் ஆவர். இவர்களுடைய முதன்மையான வேலை, கோயிலையும் சுவாமியையும் கண்ணும் கருத்துமாக இருந்து பாதுகாப்பதாகும். இவர்கள் மூன்றாம் பிரகாரத்தில் வடக்கு வாயில், தெற்கு வாயில் முகப்புகளில் காவலாக நியமிக்கப்பெற்றிருப்பர். முதல் இரண்டு பிரகாரங்களிலிருந்து உள்ளேவருதல், வெளியே செல்லுதல் ஆகிய எல்லாச் செயல்களையும், இவர்கள் இரவிலும் பகலிலும் கூர்ந்து கவனித்துக் கண்காணிப்பர். சுவாமி வெளியே திருவுலா எழுந்தருளும் போதும், உள்ளே மீண்டும் திரும்பும் போதும், பல்லக்கின் பின்புறத் தண்டுகளை இவர்கள் சுமப்பர். இரவு நேரங்களில் கோயில் வாயில்களுக்கு அருகிலுள்ள தாழ் வாரங்களில் உறங்குவர். வைகறை விடியலில், சுவாமியை வழிபடவரும் திருப்பதியாருக்கும், யாத்திரிகளுக்கும் கோயிற் கதவுகளைத் திறந்து விடுவர். அரசமுத்திரை இவர்களின் பொறுப்பிலேயே இருக்கும். அதன் நோக்கம் யாதெனில், இவர்கள் தங்கள் பணிகளைச் செய்யும்போது இவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும்.

(10) கோயிற்பணிகளின் இறுதிவகையினராக இருப்போர், தாசநம்பிகள் எனப்படும் குழுவினர்களாவர். இவர்கள் முற் காலத்தில், கோயிலுக்குப் பூமாலைகள் முதலியன தொடுத்து. வழங்கிவந்தவரின் வழி வந்தவர்களாவர். இவர்கள் சுவாமிக்காகத் திருநந்தவனங்கள் அமைப்பர். கர்ப்பக்கிரகத்தின் உள்ளேயும், வெளியேயும், சுவாமியின் திருமுன்னிலையில் ஒளி விளக்குகள் ஏந்துவர். கோயிலின் ஏழு பிரகாரங்களிலும் சுவாமி திருவுலா எழுந்தருளும் சிவிகையைப் பூமாலைகளால் அழகுபடுத்திப் பணிபுரிவர்: மற்றும் பற்பல திருவுலா நிகழ்ச்சிகளுக்குரிய எல்லா வகையான பூமாலைகளையும் இவர்கள் தொடுத்து அளிப்பர். இவர்கள் ஆழ்வார்களின் சந்நிதிகள், ஸ்ரீ இராமநுசரின் சந்நிதி முதலியவற்றிலும்கூடப் பணிபுரிவர், அதற்காக பெரும் மரியாதைகளையும் பெறுவர்.

இப்பத்துவகையான கோயிற் பணியாளர்களாகிய அந்தணர் குழுவினருடன், ஸ்ரீ இராமாநுசர், ஏகாங்கிகள் என்னும் மற்றும் நான்கு உதவியாளர்களையும் சேர்த்தருளினார். இவர்கள் சந்நிதியின் வாயிற்படியிலிருந்தும், விசேட காலங்களில் பக்தர்கள் காணாதபடி மறைக்கும் திரைச்சீலையின் அருகில் இருந்தும். கர்ப்பக்கிரத்தைப் பாதுகாக்க நியமிக்கப் பெற்றனர். அனுமதி பெறாத மனிதர்களைச் சந்நிதியின் உட்புகாதபடி தடுத்து நிறுத்துவது, இரவிலும் பகலிலும் இவர்களின் கடமையாகும். நித்திய நைமித்திக பூசைகளுக்குரிய நிவேதனப் பொருள்கள், நறுமணப் பொருள்கள் முதலிய எல்லாவகையான பொருள் களையும் பாதுகாப்பதும்கூட, இவர்களின் கடமையாகும்.

இவர்களை மட்டுமேயன்றி மற்றும், ‘சாத்தாத முதலிகள்’ எனப்படும் எட்டு வைணவத் துறவிகளையும்கூட ஸ்ரீ இராமநுசர் நியமித்தார். இவர்கள், சுவாமிக்குக் கொடி பிடித்தல், பொன் வெள்ளி விளக்குகள் ஏந்துதல், இராமாநுசரின் வாட்படையைத் தாங்குதல், அருச்சகர்களுக்கு மெய்காவல் புரிதல் என்பனவற்றிற்குப் பொறுப்புடையவர்களாவர்.

அடுத்து வருபவர்கள், வேத்திரபாணிகள் எனப்படுவர். இவர்கள் கோயிலுக்கு வெளியே இருந்து எடுத்துச் சேர்க்கப் பெற்றவராவர். சுவாமி கர்ப்பக்கிரகத்திலிருந்து புறப்பட்டுத் திருவுலா எழுந்தருளும்போது ஒழுங்கும், அமைதியும் நிலவும் படி பார்த்துக் கொள்வது. இவர்களின் கடமையாகும். திரு விழாக்காலங்களில் சுவாமி திருவீதிஉலா புறப்படுவதற்கு முன்னர், இவர்கள் வாழ்த்தியற் பாராட்டு ஒலிகள் எழுப்புவர். வேதபாராயணம் முதலியன

நிகழும்போது அமைதியை நிலைநாட்டுவர். சுவாமியின் பூசைக்காக நியமிக்கப்பெற்றுள்ள திருப்பதிகம் ஓதுபவர்களுக்கு, மக்கள் திரளில் வழி ஒதுக்கி விடுவர்.

(1) அந்தணர்களாகிய இவ்வெல்லாக் குழுவினர்களுக்கும் கூடுதலாக, ஸ்ரீ இராமாநுசர் உழுதொழில் புரியும் வேளாளர் களையும் நியமித்திருந்தார். கோயிலின் நித்தியப்படித் தேவைக்குரியன ஆகிய தானியங்கள் அளப்பவர், இவர்களுள் முதலாமவர் ஆவர். அடுத்து நிற்பவர், முதற் பிரகாரத்தின் காவலர்களும், கோயில் கணக்கர்களும் ஆவர். இவர்களுக்குரிய சிறப்புரிமைகள் இன்னின்ன என்பது குறித்து, மிகுதியான சர்ச்சைகள் இருந்து வந்தனவாகத் தெரிகின்றது. கருவூலத்தின் தலைமை அலுவலர் ஒரு வேளாளரால் வகிக்கப் பெறுதல் வேண்டும் என்று, நெடுங்காலமாக ஒப்புக் கொள்ளப்பெற்றது. ஆனால் தலவரலாறு கூறுகின்றபடி, பிற்காலத்தில் ஸ்ரீ இராமாநுசர் வேறு ஒரு பதவியையும் தோற்றுவித்து, அதனை ஒரு பிராமணருக்கு அளித்தார். அதன் விளைவாகப் பதவியாளர்களுக்குள் அடிக்கடி பூசல்கள் நிகழ்ந்தன. அதனால் மீண்டும் அப்பதவி பார்பனரல்லாத ஒரு கருவூலராலேயே வகிக்கப் பெறுவதாயிற்று எனத் தலவரலாறு கூறுகின்றது.

(2) மற்றும் பல சிறு சிறு பதவிகளும், பார்பனரல்லாதவர்கள் பால் ஒப்படைக்கப்பெற்றன. இரண்டாவது பகுதியாக அமைந்த இவர்களுடைய கடமைகள். வழிபாட்டிற்குரிய பொருள்களை எல்லாம் தொகுத்துச் சேமித்து வைப்பதும், அவ்வப்போது எடுத்துக் கொடுப்பதும், உப்பு, மிளகு, மசாலை முதலிய பொடிவகைகளையும், கோயிற் கதவுகளில் முத்திரயிடுவதற்குரிய களிமண், அரக்கு முதலியவற்றைத் தயாரிப்பதுமாகும்.

(3) மூன்றாவது தொகுதியினர், தெய்வீக நடனமாடும் தேவதாசிகள் என்பவர்களாவர். இவ்வகையினர் தஞ்சாவூரில் 11–ஆம் நூற்றாண்டில் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. 11–ஆம் நூற்றாண்டிலிருந்து முதன்மையாக வளர்ந்து பரவி வந்த இத்தொகுதியினர், 19–ஆம் நூற்றாண்டின், இறுதியில் அறவே ஒழித்து நீக்கப்பெற்றனர். இவர்களின் கடமைகள் சுவாமியுடன் தொடர்புடையனவும், கோயிற் சடங்குகளில் மிக்க புனிதமுடையனவுமாகும். கோயிலொழுகு என்னும் இத்தல வரலாற்று நூலில், தேவதாசிகள் என்போர் மிக மதிப்பான சிறப்பிடம் அளிக்கப் பெற்று உள்ளனர். கி.பி.1323 –ஆம் ஆண்டில் முஸ்லீம்கள் திருவரங்கம் கோயிலைக் கைப்பற்றி உட்புகுந்தபோது,

தேவதாசிகளுள் ஒருத்தி, கோயிலைப் பாதுகாத்து, அளித்து, ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்கிய செய்தியினை, அந்நூல் குறிப்பிட்டு புகழ்ந்து கூறியுள்ளது.

(4,5) இவற்றிற்கு அடுத்து இருவகைப் பணியாளர்கள் கோயிலையும் அவற்றிற்கு புறம்பே அமைந்துள்ள கட்டிடங்களையும், பாதுகாப்பவர் ஆவர். தெய்வ வடிவங்களைச் செதுக்குகின்ற சிற்பிகள், கொடிகள் முதலியவற்றிற்கு வண்ணம் தீட்டுகின்ற சம்மியர்கள், சுவாமிக்கு உரிய புதிய நகைகளைச் செய்பவர்களும், பழையவற்றைப் புதுப்பித்து மெருகேற்றுபவர்களுமாகிய-பொற்கொல்லர்கள், வழிபாட்டிற்குப் பயன்படும் பித்தளைப் பாத்திரங்களைச் செய்பவர்கள் அல்லது பழுதுபார்ப்பவர்களாகிய கன்னார்கள், கோயில் மணிகள், சேமக்கலங்கள், நிலைவிளக்குகள், படிகள், பீடங்கள் ஆகியவற்றிற்குத் தகடுகள் முதலியவற்றைச் செய்கின்ற உலோக வேலைக்காரர்கள் ஆகியோர் இப்பணியாளர் தொகுதியைச் சேர்ந்தவராவர்.

(6) ஆறாவது தொகுதியாக விளங்கும் பணியாளர்கள், தையற்காரர், தச்சர், நெசவாளர் முதலியோராவர். இவர்கள் கோயிற்றூண்களிலும், பந்தல் கூரைகளிலும் தொங்கவிடப் படும் விதானங்கள், மடிப்புத் தொங்கல்கள் முதலியனவற்றைத் தைத்துச் சரிகை முதலியனவற்றால் பின்னிச் சித்திர வேலை செய்து அழகுபடுத்துவர். சுவாமிக்குரிய பலவகை ஆடைகளையும், தோரணம், கொடி முதலியவற்றையும் தயாரிப்பர். மிகப்பெரிய குடைகள், பெரிய ஆலவட்டங்கள், விருதுச் சின்னங்கள், பல்லக்கின் மேற்புறத் துகில்கள் முதலியவற்றைத் தச்சர்கள் செய்து வந்தனர். பூமாலைகள் தொடுத்தற்குரிய பட்டுச் சரிகைகள், சாமரைகள், ஒட்டடை நீக்கிகள், தொங்கற் குஞ்சங்கள் என்பவற்றை நெசவாளர்கள் தயாரித்தனர்.

(7) ஏழாவது தொகுதியாக விளங்கும் பணியாளர்கள், சலவையாளர் ஆவர். இவர்கள் சுவாமிக்குச் சாத்தப்படும் பரிவட்டம் முதலிய ஆடைகளைத் துவைத்து உலர்த்துவர். பூசையின் போது பயன்படுத்தப்படும் தட்டுகள் முதலியவற்றை மூடும் துணி வகைகளை வெளுத்துச் சுத்தம் செய்வர்.

மண்டபங்களின் கூரைகளை அழகுபடுத்தும் துணிகளை வண்ண ஓவியம் தீட்டுவர். கோயிலொழுகு நூலில் இச்சலவையாளர்களுக்குச் சிறப்பான மதிப்பிடம் அளிக்கப் பெற்றிருக்கிறது. கி.பி. 1371–ஆம் ஆண்டில், டெல்லி சுல்தான் ஒருவரின் ஏவலராகிய

சில முஸ்லிம்கள் கவர்ந்து எடுத்துச் செல்லப்பட்ட அழகிய மணவாளப் பெருமாளின் மூலத்திருபடி மத்தை, அடையாளம் தெரிந்து அறிவித்துக் கண்டுபிடித்து மீளவும் அதனைத் திருவரங்கத்திற்குக் கொணர்ந்து விசயநகர அரசர்கள் பிரதிட்டை செய்வதற்கு உதவி புரிந்தவர், கண் தெரியாத ஒரு சலவையாளரே என்று, கோயிலொழுகு மிகத் தெளிவாக விவரித்துக் கூறுகின்றது.

(8) அடுத்துவரும் எட்டாம் தொகுதியினர் குயவர்கள் ஆவர். இவர்கள் கோயில் திருமடைப்பள்ளியில் நாள்தோறும் பயன் படுத்தப்பட்டு பின்னர் உடைத்தெறியப்படும் மட்பாண்டங்களைத் தினமும் புதியனவாகச் செய்து கொடுப்போர் ஆவர்.

(9) ஒன்பதாம் தொகுதியினர் படகோட்டிகள் ஆவர். இவர்கள் காவிரியில் அக்கரையிலிருந்து கோயில் திருமடைப் பள்ளிக்குப் பால், தயிர் முதலியன போன்ற உணவுப் பொருள்களைக் கோயிலுக்குக் கொணர்ந்து தருவர்.

(10) இசைவாணர்களும், நடன ஆசிரியர்களும் பத்தாம் தொகுதியினராவர். இவர்கள் எல்லோரும் முதன்மையான விழாக்களிலும் விசேட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்பர்.

மேற்குறித்த இருபதுக்கு மேற்பட்ட தொகுதியினர் அல்லது பிரிவினர். பல்வேறு திறப்பட்ட ஓர் அரிய பெரிய குழுவினராக அமைந்திருந்தனர். இவர்கள் அனைவரையும் ஒருங்கு இசைவித்து இணைத்து, ஒழுங்கு பெறச் செலுத்த வேண்டியிருந்தது. வேறு பிற இடங்களில் காணப்படுவது போன்று இவர்களை ஆளும் ஒரு சபையையோ, அல்லது ஒரு குழுவையோ பற்றிய குறிப்பு எதுவும் கோயிலொழுகு நூலின்கண் காணப்படவில்லை. கோயிலின் நிர்வாகமானது, ஒரு பெரும் ஆட்சித் தலைவரிடத்தில் இருந்ததை குறிப்பிடுவதுடன் இராமாநுசரின் காலத்திற்குப் பிறகு, அவர் தம் பலவகைப் பணிகள் குறித்த பட்டியல் ஒன்றையும், அந்நூல் தருகின்றது.

ஒவ்வொரு நாளும் வைகறைப் பொழுதில் கோயிலுக்குச் செல்வதும், அங்கு தம்முடைய மிக நெருங்கிய உதவியாளர்களைச் சந்திப்பதும், ஆட்சித் தலைவரின் கடமையாக இருந்தது. முறையாக வைகறையில் நீராடிய பிறகு, அவர் இரண்டாம் பிரகாரத்திலுள்ள புனிதம் மிக்க கொடிக் கம்பத்தின் அடிக்குச் செல்வார். பிறகு, அவர் திருமடைப்பள்ளியையும், சரக்கு அறையையும், பூசைக்கும், பிராமணர்களுக்கும் தேவையான நறுமணப் பொருள்களையும்

பார்வையிட்டு அன்று செய்வதற்குரிய பலவேறு பணிகளையும் ஊழியர்களுக்குப் பகிர்ந்து அளிப்பர். பிறகு அவர் கோயிலின் திருநந்தவனத்திற்குச் சென்று, அன்று நிகழ்வதற்குரிய விழா அல்லது சடங்குகளில் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்ப, பல்வேறு வகையான பூக்களைத் தேர்ந்தெடுப்பார். அதன் பிறகு பூசை புரிவதற்கு அவர் செல்வார். பிறகு கோயில் ஊழியர்களின் பிரதிநிதிகள் அனைவரும் அடங்கிய கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, அவர்கள் தம்முடைய கடமைகளை ஊக்கமாகவும், உண்மை அன்புடனும் செய்வதற்கு ஏற்ற, அறிவுரைகளையும், யோசனைகளையும், கூறுவார். பின்னர்ப் பூசை புரிவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கவனித்து மேற்பார்வை புரிவார். சுவாமிக்கு நண்பகல் நிவேதனம் செய்து முடிந்த பிறகு, அவர் தம் வீட்டிற்குச் சென்று உணவு கொண்டு, சிறிது ஓய்வு எடுப்பார். பிற்பகலில் பல வேறுவகையான சடங்குகளையும், விழாக்களையும் நடத்துவார்.

ஒவ்வொரு சடங்கு அல்லது விழாவையும் ஏற்பாடு செய்தல், அது முறைப்படி சிறப்பாக நடத்தப்படுகின்றதா என்று கவனித்து மேற்பார்வையிடுதல் முதலியன, இவருடைய கடமைகளாகும். நம்பிகள், பிராமணர்கள் நீங்கலாக, இத்துறையில் மற்ற எல்லோரையும் கண்காணித்து ஏவல் கொள்ளுவதற்கு, இவருக்கு அதிகார வரம்பும் உரிமையும் உண்டு. கருவூலத்தில் வைக்கப்பெறும் எல்லாப் பொருள்களின் மீதும், இலச்சினை இடுதலும் கூட, இவரது கடமையாகும். கோயிலின் உள்துறை ஊழியத் தலைவர்கள் அனைவரும் நேரடியாக இவருடைய ஆணைக்குட்பட்டவராவர். இவருக்கு அணுக்க ஊழியம்புரிய, ஏகாங்கி ஒருவர் இருப்பார். இவ்வாட்சித் தலைவருக்கு மிக உயர்ந்த மரியாதைகள் செலுத்தப்படும்.

தலைமை ஆட்சியருக்குத் துணையாக, மற்றும் நான்கு அலுவலர்கள் இருந்தனர். அவர்கள் கோயிலின் ஆட்சிக்கும், அதன் புறம்பேயுள்ள கட்டிடங்களுக்கும், பொறுப்புடையவர்கள் ஆவர். சரக்கறையின் தலைவர், ஒவ்வொரு நாளும், வைகறைப் பொழுதில் திருமடைப்பள்ளிக்குச் சென்று பார்வையிடுவார். சுவாமியின் நிவேதனத்திற்குரிய அரிசி, கோதுமை, தானியங்கள், காய்கறிகள், தேங்காய், பழம், பால், தயிர் முதலிய உணவுப் பொருள்கள் அனைத்தும், குறித்த அளவின் படி கொடுக்கப்படுமாறு கவனித்து ஆவன செய்வார். ஒவ்வொரு நாளும் கோயில் நிலங்களிலிருந்து விளையும் நெல், வகைகள், புளி முதலிய பழவகைகள், மற்றும் விளை பொருள்கள் அனைத்தும், கோயிலின் சரக்கறைக்குக்

கொண்டு வரப்படும் எள் முதலிய எண்ணெய் வித்துக்கள் எண்ணெ அறைக்குக் கொண்டு வரப்பெற்று உடைத்தோ அரைத்தோ பயன்படுத்தப்பெறும் சரக்கறைத் தலைவரே, சுவாமி திருவீதி வலம் செல்லுவதற்குத் தேவையான வாகனங்களைத் தயாரித்தல் குடைகள், கொடிகள் என்பனவற்றைத் தூக்கிச் செல்லுவதற்குரிய ஆயிரம் கூலியாட்களை நியமித்தல், முதலிய வேலைகளையும் கவனித்துக் கொள்ளுவார்.

திருவிழாவின் போது இராக்காலங்களில் நிகழ்த்தப்பெறும் வாணவேடிக்கைகளை, அவரே ஏற்பாடு செய்வார். கூலியாட்கள் தமக்குரிய கூலியைத் தானியங்களாகப் பெறுவர். கோயிலுக்கு உரிய யானைகள், குதிரைகள், பசுக்கள், புறாக்கள், புறாக்கூடுகள், மான்கள், காட்டுப் பசுக்கள், மயில்கள், கிளிகள் ஆகியவற்றையும் சரக்கறைத் தலைவரே கண்காணிப்பார். தலைமை இடையரின் முன்னிலையில் பசுக்களைப் பால் கறத்தல், கறந்த பாலை அதற்குப் பொறுப்புடைய கோயில் ஊழியர்களிடம் ஒப்படைத்தல், என்பவற்றை மேற்பார்வை இடுதல் இவரது கடமையாகும். ஒவ்வொரு தொழுவமும் ஓர் இடையனால் கவனிக்கப் பெற்று வந்தது. தொழுவத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதும் ஒரு நாளைக்கு இரு வேளைகள் பால் கறப்பதைக் கவனித்துக் கொள்வதும் இவ்விடையனின் பணியாகும்.

கோயிற் கண்காணிப்பாளர் ஒருவர் திருமதில்களின் மீதும் கோபுரங்களின் மீதும் வளர்கின்ற புல்லுருவிகளாகிய செடி கொடிகளை நாள்தோறும் அகற்றுவதற்கு ஆட்களை ஏவுவார். அவர் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதையும் புதியவாகக் கட்டு தலையும் நெறிப்படுத்துவார். திரைச்சீலைகளும், தொங்கல்களும் அழகுற அமைக்கப்படும் வகைகளைத் திட்டம் செய்வார். நித்தியநைமித்திகத் திருவிழாக்களில் பந்தல்கள் அமைந்தலையும் அவற்றை அழகு படுத்துதலையும் கவனித்துக் கொள்ளுவார். அவருக்குத் துணையாக இரண்டு ஏகாங்கிகள் அளிக்கப் பெற்றிருந்தனர். பல்வேறு சரக்கு அறைகளுக்கும் பொறுப்பாளராக இருப்பவர்; கருவறையின் கிழக்கிலும் மேற்கிலும் அமைந்துள்ள, பூந்தோட்டங்களை கவனித்துக் கொள்ளும் கடமையுடையவராவர் கருவறையையும் சுவாமியையும் அந்தந்தப் பருவ காலத்திற்கு ஏற்பச் சாத்துபடி செய்வதற்குரிய நறுமண மலர்ச் செடிகளை வளர்ப்பதும் பாதுகாப்பதும் அவரது கடமையேயாகும். காய்கறிகள் பறித்தலையும் கரும்பு மற்றும் சாறுள்ள செடிகள் ஆகியவற்றை வெட்டுதலையும் அவற்றைத் திருமடைப்பள்ளிக்குச் சேர்ப்பித்தலையும் இவரே செய்வார். சாக்கு அறைகளில்

ஒழுங்குமுறையைப் பாதுகாத்தலும் அதற்கு தேவையானபடி தண்டனைகளோ பரிசுகளோ வழங்குததும் இவரது கடமையாகும்.

கோயில் நிலங்களின் கண்காணிப்பாளர் அந்தந்தப் பருவ காலத்திற்குரியபடி விதை விதைத்துப் பயிர் செய்தலையும், நிலத்தினின்று விளைவனவற்றையும், மற்றும் பலவகைகளில் திரட்டித் தொகுக்கப்பெற்றனவற்றையும் அவ்வவற்றிற்குரிய சரக்கு அறைகளில் சேர்ப்பித்தலையும் கவனித்துக்கொள்வார். கோவிலுக்குரிய கிராமங்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கோயிலுக்குத் தேவைப்படும் ஊழியர்களை அமர்த்துதல், இவரது பணிகளில் ஒன்று இவருக்கு உதவியாளராக வேதத்தில் தேர்ச்சி பெற்ற ஏகாங்கி ஒருவர் அமர்த்தப் பெற்றிருந்தார். முஸ்லீம்களின் உட்புகவுக்கு முன்னர் சமய நிறுவனங்களின் வரிசைப் புறத்தில் கோயிலுக்கு உள்ளே ஒரு மருத்துவமனை நிறுவப்பெற்றிருந்தது. அதன் நடைமுறையில் ஒரு கிராமம் தானாக வழங்கப் பெற்றது. அவ்வறக்கட்டளையின் மூலம் அம்மருத்துவமனை சிறப்புற நடைபெற்ற செய்தி கல்லெழுத்துக்களில் பதிவு செய்யப் பெற்றுள்ளது. இடையில் முஸ்லீம் படையெடுப்பால் இம்மருத்துவமனை நலிவுற்றது. ஆயினும் கி.பி 1493 – ஆம் ஆண்டில் மீளவும் தொடங்கி நடத்தப் பெறுவதாயிற்று.

இராமாநுசரால் முதலில் நிகழ்த்தப் பெற்ற அல்லது நிகழ்த்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற கோயிலின் சீரமைப்பும் நிர்வாகமும் சமயத் தலைவர்களின் பொறுப்பில் 14–ஆம் நூற்றாண்டின் முதற்காற் பகுதியில் நிகழ்ந்த முஸ்லீம் படையெடுப்பு வரையில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. சோழ அரசர்களும், பாண்டிய அரசர்களும் அதனைச் சிறிதும் மாற்றாமல் அதன் பாதுகாப்பாளராக மட்டும் இருந்து வந்தனர். ஆனால் கி.பி 1311, 1323 ஆகிய ஆண்டுகளில், அயலவர்கள் படையெடுத்துக் கொள்ளையிட்டுச் செய்த அழிவிற்குப் பிறகும், அதனைத் தொடர்ந்து இருந்து வந்த குழப்பக் காலத்திற்குப் பிறகும், விஜயநகர வம்சத்து அரசர்கள், தங்களுடைய சொந்த ஆட்சியாளர்களை இக்கோயிலில் திணித்தனர். அந்தக் காலம் முதல் ஆங்கிலேய ஆட்சி ஏற்படும் வரையில், இக்கோயிலின் நிர்வாகம் முஸ்லீம் ஆளுநர்களின் ஆணைக்கு அடங்கி உட்பட்டே, நடைபெற்று வந்தது. கோயிலின் சடங்கு நெறிமுறைகள், இதனால் வெவ்வேறு வகையான மாறுதல்களை அடைந்தன என்பதனைக் கோயிலொழுகு விவரித்துள்ளது. உதாரணமாக முஸ்லீம்களின் காலத்திலிருந்து கடவுள் திருவுருவங்களுக்கு

அபிசேகம் செய்யப்படும்போது, முஸ்லீம்கள் அணிகின்ற கைலி என்னும் ஒருவகைத் துணி சாத்தப்பெற்றது; சுவாமிக்கு காலை உணவாகச் சப்பாத்தி, வெண்ணெய், தயிர் ஆகியவை ஈரத்துணியில் வைத்து நிவேதிக்கப்பெற்றன. தாம்பூலத்தில் இந்துக்களின் வழக்கப்படி பின்புறத்தில் தடவப்பெறுவதற்குப் பதிலாக, உட்புறத்தில் சுன்னம் தடவப்பெற்றது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தனக்கு முற்பட்டிருந்தவர்களைப் போலவே, இந்தக் கோயிலின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது; கர்நாடகப் பகுதிக்குத் தன்னுடைய பிரதிநிதியாக ஜான்வேலஸ் என்பவரைக் கிபி 1801 – ல் நியமித்தது. தென்னகத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மிக்க ஆற்றலும் அதிகாரமும் வாய்ந்து. இந்தக் கம்பெனியானது சமய நிறுவனங்களை மேற்பார்த்திருந்தது. கி.பி 1840–ல் இந்தக் கம்பெனியின் இயக்குநர் குழு கோயில்களின் மீது அரசாணையை விட்டு விடுதல் வேண்டுமென ஆணை பிறப்பித்தது.

அதன் பிறகு இந்து மதத்தைச் சேர்ந்த ஆட்சியாளர்களிடம் கோயில்கள் ஒப்படைக்கப்பெற்றன. கி.பி. 1842 – ஆம் ஆண்டில் திருவரங்கத்தில் உள்ள திருவரங்கநாத சுவாமி கோயில் இராமாநுசரால் திருத்தியமைக்கப்பெற்ற முறையின்படி பழைய காலம் முதல் கோயிலை நிர்வகித்து வந்த ஸ்தானத்தார் என்னும் அந்தனர் குழுவினரால் நிர்வகிக்கப்பெற்றது. அவர்களின் எண்ணிக்கை சென்னையிலிருந்து பிரிட்டிஷ் அரசினரால் நியமிக்கப்பெற்ற தனி உரிமையுள்ள ஆட்சியாளர்கள் இருவரால் மிகுதிப்படுத்தப்பெற்றது.

1858– ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப் பெற்றபோது இந்திய அரசு இங்கிலாந்து மன்னரின் ஆணையின் கீழ்ச் சென்றது. கோயில்களுக்குப் பொறுப்புள்ள அதிகாரக் குழுவின் மாற்றம் தவிர வேறு மாறுதல் எதுவும் நிகழவில்லை. 1863– ஆம் ஆண்டில் சமய அறக்கட்டளைகளின் சட்டத்தின் 20–ஆம் பிரிவு இக்கோயிலுக்குத் தனி நிர்வாகக் குழு ஒன்றை நிறுவியது. அதற்கு அடுத்த ஆண்டில் திருவரங்கம் கோயிலின் ஆட்சியாளர்களுக்கு இடையே கருத்தொற்றுமையின்மை ஏற்பட்டது. சென்னை உயர்நீதி மன்றத்தில் பலமுறை அது சம்பந்தமான வழக்கு கொடுக்கப்பட்டது. 1912–ஆம் ஆண்டில் தான், கோயில் நிர்வாகத்தினரால் ஓர் ஒப்பந்தம் உருவாக்கப் பெற்று ஒப்புக்கொள்ளப்பெற்றது.

1927 – ஆம் ஆண்டு கோயிலின் ஆட்சிப் பொறுப்பு சென்னை இந்து சமய அந்நிலையக்குழுவின் பால் ஒப்படைக்கப்பெற்றது. 1942– ஆம் ஆண்டில் உறுதி செய்யப்பெற்ற இந்த ஏற்பாடு இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது. கோயிலின் உண்மையான நிர்வாகம் ஒரு தலைவரைக் கொண்ட ஐந்து அறங்காவலர்கள்பால் இருக்கின்றது. அவர்கள் அனைவரும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரால் ஆளெடுப்பு செய்து நியமிக்கப் பெறுகின்றனர். அவர்களில் ஒருவர் மட்டும் 1801–ஆம் ஆண்டில் ஜான்வேல்ஸ் என்பவரால் கோயிலின் நிர்வாகம் திருத்தம் செய்யப்பெற்ற காலம் முதல், பரம்பரையாகக் கோயிலிற் பணிபுரிந்து வந்த ஐந்து பிராமணக் குடும்ப உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று ஓராண்டிற்கு மட்டும் பதவியில் நியமிக்கப் பெறுவர்; அவர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நியமனம் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார். ஏனைய மூன்று உறுப்பினர்கள், வைணவ சமயத்தையும் நான்காமவர் சைவப் பிரிவையும் சேர்ந்தவராக இருப்பர். அவர்கள் தமது எழுபதாம் வயதில் ஒய்வு பெறுவர். கோயிலின் வருவாய் இப்போதும் ஓரளவு கணிசமாக இருந்த போதிலும், முற்காலங்களிலிருந்த அளவிற்கு ஒப்பாகச் சொல்ல முடியாது.

பல கல்வெட்டுகள் சான்று கூறுகின்றபடி இந்து மதத்தைச் சேர்ந்த பல அரசர்கள் பல நூற்றாண்டுகளாக வழங்கியிருந்த கிராமங்களையும் நிலங்களையும் தான் எடுத்துக் கொண்டு அவற்றின் மூலம் கோயிலுக்குக் கிடைத்து வந்த வருவாய்க்குப் பதிலாக சென்னை மாநிலத்தின் முன்னைய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி ஆண்டுதோறும் அளித்து வந்த சிறிய உதவித்தொகை, கோயில் வருவாயின் ஒரு பகுதியாக இருந்தது. அந்த ஆட்சி மராட்டிய ஆளுநர்களாலும், அதனை அடுத்து வந்த முஸ்லீம்களாலும் கீழறுக்கப்பெற்றது. முஸ்லீம்கள் கோயிலுக்குரிய பல கிராமங்களைப் பறிமுதல் செய்தனர்; பல நிலபுலன்களைக் கைப்பற்றிக் கொண்டனர், எஞ்சிய சிலவற்றை ஓரளவு நியாயமும் கணிசமுமான இழப்பீட்டுத் தொகை அளித்துக் கோயில்களுக்கு விடுத்தனர். கோயிலுக்குரிய பல நிலபுலச் சொத்துக்கள், கிழக்கிந்தியக் கம்பெனியின் கைகளுக்கு மாறின, பின்னர் அவர்களிடமிருந்து பிரிட்டிஷ் அரசிற்குப் போயின. பிரிட்டிஷ் அரசு ஆண்டுதோறும் ஓர் உதவித் தொகையைக் கோயிலுக்கு அளித்து வந்தது. ஆனால் அவ்வுதவித்தொகை, 1842–ஆம் ஆண்டில் பெரிதும் குறைக்கப்பெற்றது. இந்நாளைய இந்திய அரசு முந்தியதை

நோக்க, இன்னும் குறைந்த ஒரு சிறிய உதவித் தொகையை அளிக்கின்றது.

முன்பு கோயிலுக்குச் சொந்தமாயிருந்த கிராமங்களின் உரிமைத் தொடர்பு, இப்போது ஆண்டுதோறும் நிகழும் ஒரு சடங்கின் அளவிலேயே எஞ்சி நிற்கின்றது. தமிழ் ஆண்டுப் பிறப்பின் முதல்நாளன்று, பரம்பரை முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு பொருளாளர், அவ்விழாவுக்கெனத் தனியலங்காரம் செய்து வைக்கப் பெற்றுள்ள சுவாமியின் திருமுன்னிலையில் சென்று, சுவாமிக்குரிய நிலங்களையும் கிராமங்களையும் ஒரு கற்பனைக் குத்தகைக்காரருக்குக் குத்தகை விடுவது போன்ற, ஒரு கற்பனைச் சடங்கில் கலந்து கொள்ளுகின்றார். திருவரங்கநாதர் தான் மேற்குறித்த நிலங்களுக்கும், கிராமங்களுக்கும், இன்றும் இனி என்றும், உண்மையான உரிமையாளராகத் திகழவல்லவராவர் என்பதனை, உறுதிப்படுத்தும் வகையில் இக்கற்பனைச் சடங்கு நிகழ்ந்து வருகின்றது.

கோயிலின் எஞ்சிய வருவாய், கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், விளைபொருள்கள், ஆடுமாடுகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்றது. மேலும் இவற்றின் பெரும் பகுதி, திருவரங்கம் கோயிலின் ஆட்சியினரும், நிர்வாகத்திலுள்ள, மற்ற பிற கோயில்களிலிருந்தும் கிடைக்கின்றது. இம்மாதிரி ஏழு கோயில்கள் உள்ளன. இவற்றில் முதலாவது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மிகவும் புகழ்வாய்ந்ததும், மக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படுவதும் ஆகிய சமயபுரம் மாரியம்மன் கோயிலாகும். (1984 முதல் தனி நிர்வாகமாக இயங்கி வருகிறது) இக்கோயிலுக்குப் பக்தர்களும், யாத்திரிகர்களும் செலுத்துகின்ற காணிக்கையின் மூலம், ஆண்டுதோறும் கணிசமான பெருந்தொகை கிடைக்கின்றது. முஸ்லிம் மக்களும், இக்கோயிலுக்கு வந்து காணிக்கை செலுத்துகின்றனர். பொன், வெள்ளி, நாணயங்கள், ஆடுமாடுகள், கோழி முதலிய வளர்ப்புப் பறவைகள் முதலியனவும், இக்கோயிலுக்குக் காணிக்கையாகச் செலுத்தப் பெறுகின்றன. திரு வெள்ளறை என்னுமிடத்தில் இரண்டாவதும் மூன்றாவதும் ஆகிய கோயில்கள் உள்ளன. அவற்றில் முறையே புண்டரி காட்சப் பெருமாள், வடஜம்பூநாதர் எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளனர். இவற்றில் முன்னையதாகிய புண்டரிகாட்சப் பெருமாள் கோயில், சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. 1947 – ஆம் ஆண்டில் அது முழுவதும் திருப்பணி செய்யப்பெற்றது. அதன் திருமதிற் சுவர்கள், எதிரொலி எழுப்பும் தகையனவாகத் திகழ்கின்றன.

இது மட்டுமின்றி, இக்கிராமத்தில் சுவஸ்திக் வடிவத்தில், ஒரு புனித தடாகம் உள்ளது. அதன் கண் உள்ள நான்கு இயற்கைக் குளங்களின் சிறப்பான அமைப்பின் பரப்பினால், ஒரே சமயத்தில் பல மக்கள் ஒருவரையொருவர் பார்க்க இயலாத நிலையில், ஆனால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் வகையில், நீராடுதல் கூடும்.

அன்பில் என்னுமிடத்தில், ஸ்ரீ சுந்தரராஜப்பெருமாள் கோயில், ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் கோயில், சமயபுரத்து மாரியம்மனின் சகோதரியாகிய ஸ்ரீமாரியம்மன் -கோயில், ஆகிய ஏனைய மூன்று கோயில்கள் உள்ளன.

ஏழாவது கோயில் உறையூரில் உள்ளது. ஸ்ரீரங்கநாதரின் மனைவியாகிய ஸ்ரீ நாச்சியார் இங்குக் கோயில் கொண்டுள்ளார். திருவரங்கத்தின் வழிபாட்டு மரபு நெறியில், இக்கோயில் மிக்க சிறப்பிடம் பெறுகிறது. ஏனெனில், பங்குனி உத்திர 6-ம் திருநாளில், இங்குப் பெருமாள் தமது திருமண விருந்து விழாவின் பொருட்டு எழுந்தருள்கின்றார். இவ்விருந்து விழாவின் பொருட்டு, ஸ்ரீ ரங்கநாதர் கர்ப்பகிரகத்தினின்று புறப்பட்டுத் திருவுலாவாக எழுந்தருளி, உறையூர் நாச்சியார் கோயிலில், காலையில் பத்து மணிக்குவந்து சேருகின்றார். மாலையில் கோயில் மண்டபத்தின் கீழ்த் திவ்விய தம்பதிகள் இருவரும், ஒருங்கே எழுந்தருளிச் சேவை சாதித்தலைத் தரிசிப்பதற்கு பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இரவு பத்துமணிக்கு ஒளி விளக்குகளுடனும், தீவர்த்திகளுடனும், பெருமாள் திருவரங்கத்துக்குத் திரும்ப எழுந்தருள்கின்றார். அதனால்தான் பங்குனி உத்திர 6-ஆம் திருநாளில், இக்கோயிலுக்குப் பக்தர்கள் பெருங்கூட்டமாகத் திரண்டு வருகின்றனர்.

இங்ஙனம் பலவகைகளில் வரும் வருவாய்த் தொகைகளுடன் பார்வையாளர்களும், பயணிகளும், யாத்திரிகளும், கோயிலின் முதன்மையான சிறப்பிடங்களுக்குச் செல்லவும், பொருட்காட்சிக் கூடம், அணிகலன்களின் தொகுப்பு ஆகியவற்றைக் காணவும், செலுத்துகின்ற கட்டணமும் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். கோயிற் கட்டிடங்களின் அலங்காரம், நிர்வாகம் சீர்திருத்தம் முதலியவைகள், பொதுமக்களின் நன்கொடை நிதியுதவிகளினால் நடைபெறுவதற்குரியனவாக உள்ளன.

இந்நாளைய மரபுகளும் சடங்குகளும்

பண்டைக்காலத்தில் வகுக்கப்பெற்ற சடங்குமுறைகள் திருவரங்கத்தில் இப்போதும் பாதுகாத்து வரப்பெறுகின்றன. பூசை

முறைகள், மற்றுமுள்ள பல சடங்கு முறைகள் ஆகிய இரண்டும், கோயிலொழுகு நூலில் குறிக்கப்பெற்றுள்ள விதிமுறைகளைப் பெரும்பாலும் பின்பற்றித் தழுவியே நடத்தப்பெறுகின்றன. ஒவ்வொரு நாளும் கோவிலானது, காலை 6.15 மணிக்குத் திறக்கப் பெறுகின்றது. பூசை புரிபவர்களும், மற்றும் பல பணியாளர்களும், தத்தம் கடமைகளைத் தொடங்குகின்றனர். கோயிலின் கருவறைக்கு அருகே ஒரு பசுவும், கோயில் யானைகளில் ஒன்றும், சுவாமியின் திருமுன்னிலையை நோக்கியும், தம்முள் ஒன்றிற்கொன்று எதிர்முகமாகவும், நிறுத்தப்படுகின்றன. அதே சமயத்தில், இரண்டு புரோகிதர்களால் கொள்ளிடம் நதியிலிருந்து உகந்து கொண்டுவரப்படும் புனித தீர்த்தம், கோயிலின் உள்ளறையில் வைக்கப்பெற்றுள்ள ஐந்து பாத்திரங்களில் நிரப்பப் பெறுகின்றன. முன் இரவில் இடம்பெற்ற கோயிற் கர்ப்பக்கிரகத்தின் பூட்டு, பின்னர்த் திறக்கப் பெறுகின்றது. அதன் சுற்றுப்புறங்கள் மிக்க கவனத்துடன் நன்றாகத் தூய்மை செய்யப்படுகின்றன. இத்தகைய பூசைத் தொடக்கப் பணிகள் புரியப்படும்போது, இசையில் வல்ல ஒருவர் வீணை அல்லது சிதார் வாசித்து, திருப்பள்ளியெழுச்சி பாடி இறைவனைத் துயிலினின்று எழுப்புவார். அப்போது, ஒரு குறிப்பிட்ட அடையாள அறிவிப்பின்போது, திரைச்சீலை அகற்றப்படுகிறது. சுவாமி மிகவும் சிறந்த மங்கலப் பொருள்களாகிய யானையையும், பசுவையும் முதலில் காண்பதன் மூலம், தமது நாளைத் தொடங்குகின்றார். கோயிலை வலம் புரிந்து நடந்து கொண்டு கர்ப்பக்கிரகத்தின் முன் வந்து சேருகின்ற பக்தர்கள், அப்போது சுவாமியைத் தரிசிக்கக் கூடிய நிலையில் இருக்கின்றனர். சுவாமி அவர்களையே, முதன் முதலாக காண்கிறார். திரைச்சீலை மறுபடியும், கீழே விடப்படுகின்றது, பசுவும், யானையும் திரும்ப அழைத்துச் செல்லப்படுகின்றன. பின்னர்க் கோயிற் சோதிடர், சுவாமியின் திருமுன்னர் நின்று, அன்றைக்கும் மறுநாளைக்கும் உரிய திதி, நட்சத்திரம், வாரம், யோகம், கரணம் போன்ற பஞ்சாங்கச் செய்தி விபரங்களை உரத்த குரலில் வாசிப்பார்.

தினமும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பூசைள் இங்குச் செய்யப்படுகின்றன. காலையில் செய்யப்படும் பூசையே, எல்லாவற்றிலும் முக்கியமானதாகும். அப்போது நிகழ்த்தப்படுகின்ற சடங்கின் நெறிமுறைகள், பண்டைக்காலம் தொட்டுச் சிறிதும் மாறாதனவாகும், விஷ்ணுகோயில்கள் எல்லாவற்றிலும் நிகழ்த்தப்படும் பூசை முறைகளையே பெரிதும் ஒத்தனவாகவும் இருக்கும். பாகவத நம்பிகள் அல்லது பட்டர் என்போர்.

சுவாமிக்கு தந்தசுத்தி, கரசுத்தி, பாதசுத்தி, ஆகியவற்றைச் செய்வது முதல், பூசை தொடங்கப் பெறுகின்றது. ஒரு பணியாளர் சுவாமிக்கு முன்னர் கண்ணாடி ஏந்தி நின்று காட்டுவார். நண்பகல் பூசையொழிந்த மற்றைய நேரங்களில், சுவாமி வெந்நீரால் அபிடேகம் செய்யப்பெறுவார். பின்னர் சுவாமிக்கு வெண்ணெய் பூசவும், குங்குமப்பொடி, சாத்தவும் பெறும். அவரது. மார்பிலும், பாதங்களிலும், சந்தனக் குழம்பு அணிவிக்கப் பெறும். வெள்ளிக் கிழமைகளில், ஒரு சில குறிப்பிட்ட பருவங்களில், பச்சைக் கற்பூரம் கலக்கப்பெற்ற எண்ணெய் சுவாமிக்கு பயன்படுத்தப் படுகின்றது. அபிடேகம் பொது மக்கள் முன்னிலையிலோ, அல்லது கற்பகிரகத்தில் தனியாகவோ, அந்தந்தச் சந்தர்ப் பங்களுக்கு ஏற்றபடி நிகழும். பின்னர் சுவாமிக்கு தூய உலர்ந்த ஆடைகள் சாத்தவும், அவரது நெற்றியில் கஸ்தூரி நாமம் அணிவிக்கவும் பெறும். பின்னர் புதிய பூமாலைகளும், நல்ல அணிகலன்களும் சாத்துபடி செய்வர். அப்போது இசைவாணர்கள் வீணை வாசிப்பர்.

இவ்வாறு அலங்காரங்கள் செய்தானதும், கற்பக்கிரகத்தின் முன் உள்ள திரைச்சீலை, மிகவும் உயர எழுப்பப்படும். அப்போது கர்ப்பக்கிரகத்தின் நுழை வாயிலுக்கு முன்னே உள்ள மண்டபத்தில், ஒருங்கு திரண்டுள்ள பக்தர்கள் சுமார் ஒரு மணி நேர அளவுக்குச் சுவாமியைத் தரும தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

அடுத்து, சுவாமிக்குப் பிரசாத நிவேதனம் நடைபெறும். அவைகள் கோயில் திருமடைப்பள்ளியிலிருந்து, பிராமணப் பரிசாரகர்களால், கூடைகள் அல்லது தக்க பாத்திரங்களில் வைக்கப் பெற்று வரும். இதற்கு இடையில் தீபங்கள் ஏற்றப்படும். இதன் பின்னர், சுவாமிக்கு வெற்றிலை பாக்கு தாம்பூலம் அளிப்பர். அதன் பின், சுவாமி தமது வாய் கொப்பளிக்கும் முறையில், ஓர் அடையாளச் சடங்கு நிகழும். பின்னர் பக்தர்களின் சார்பில் ஊதுவத்தி, வெண்ணெய், சிறு விளக்குகள், துளசி தளங்கள், பூக்கள், பூமாலைகள் முதலியன, தோத்திரப் பாடல்களுடன் முறையே சமர்ப்பிக்கப்படும். இவைகள் பூசை நிறைவுற்று முடிந்ததனைக் குறிக்கும். அப்போது பக்தர்கள் பொதுவாக அங்கு இருப்பதற்கு உரிமையுடையவர்கள் அல்லர். ஆனால், அவர்கள் தமது அன்பியற் பூசைப் பொருள்களை வழங்குவதன் மூலம், அதிற் கலந்து கொள்ளுவர். அதன் பிறகு அவர்கள் தாராளமாக சுவாமி தரிசனம் செய்து வணங்கி மகிழலாம்.

ஸ்ரீ நம்பெருமாள் மோகினி திருக்கோலம்



ஸ்ரீ நம்பெருமாள் சேஷ வாகனத்தில்

இத்தகைய நித்திய பூசைகளுடன், அவ்வக்காலத்திற்கும், பருவத்திற்கும் உரிய நைமித்திக பூசைகள் உண்டு. அவைகள் தொன்று தொட்டே நடைபெற்று வருவதனைக் கல்வெட்டுச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. ஓர் ஆண்டில், வார-மாத-வருட-பூசைச் சடங்குகள் அல்லது விழாக்கள், மொத்தம் 322 நடைபெறுகின்றன. அவைகள் அனைத்தும் வைணவ திருவரங்க பஞ்சாங்கத்தின்படி எல்லா திருநாட்களையும் தழுவி, நடைபெறுகின்றன. இவ்விழாக்கள் எல்லாவற்றிலும் மிக்க முதன்மையும், சிறப்பும் வாய்ந்தது வைகுண்ட ஏகாதசி விழாவாகும். அது தென்னிந்தியத் திருவிழாக்களுள், மிகவும் புகழ் மிக்கதொன்றாகும். அவ்விழா மார்கழி-தை (டிசம்பர்-ஜனவரி) ஆகிய இரண்டு மாதங்களுக்கு இடையில் 21 நாட்கள் நடைபெறும். அதற்குரிய ஏற்பாடுகள் அக்டோபர் மாதத்தின் இறுதியில், ஒரு தென்னை மரத்தின் அடித்தண்டினை, அவ்விழாவிற்குரிய பந்தலின் முதற்கம்பாக நடுவதிலிருந்து தொடங்கும். அப்பந்தல் அமைத்து முடியும் போது 47 கம்பங்கள் இருக்கும். அப்பந்தல் மூன்றாவது பிரகாரத்தில் வடகிழக்கு வாயிலில், ஆயிரம் கால் மண்டபத்தின் முன்னே அமைக்கப்படும். இரண்டாம் பிரகாரத்தில் வடக்கு வாயில் வழியாக, சுவாமி அங்கே உலாப்புறமாக எழுந்தருளுவிக்கப் பெறுவர். இந்த இரண்டாம் பிரகாரத்தின் வடக்கு வாயில், ஆண்டு முழுவதிலும் மூடப்பெற்று இந்த ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே திறக்கப்படும். ஆழ்வார்களின் திருப்படிமங்களும் ஆச்சார்யர்களின் திருப்படிமங்களும், ஒன்றன்பின் ஒன்றாகச் சுவாமிக்கு அருகே, அவர் எழுந்தருளியுள்ள மண்டபத்தின் நடுவிடத்தில் கொண்டுவந்து வைக்கப்பெறும். பகல்பத்து, இராப்பத்து என்னும் இத்திருவிழா நாட்கள் முழுவதிலும், சுவாமியின் திருமின்னிலையில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் முழுவதும், ஓதவும், பாடவும் பெறும். ஆண்டிற்கு இருமுறை ஜனவரி மாதத்திலும், ஏப்ரல் மாதத்திலும், பெரும் திரளான மக்கள் கூட்டத்திற்கு இடையில், சுவாமி திருத்தேரில் எழுந்தருளித் திருவீதி வலம் வருவார்.

மார்ச்சு மாதத்தில், கோயிலுக்கு வெளியே ஏழாவது பிரகாரத்தின் மேற்கேயுள்ள திருக்குளத்தில், இரவில் தெப்பத்திருவிழா நடைபெறும், சுவாமியும் அவர்தம் இருதேவியரும், ஒளி விளக்குகள் அமைக்கப்பெற்ற தெப்பத்தில் அமர்த்தப் பெறுவர். அத்தெப்பத்தைக் கயிறுகொண்டு கட்டித் திருக்குளத்தின் நடுவேயுள்ள நீராழி மண்டபத்திற்கு இழுத்துக் கொண்டு சென்று சேர்ப்பர். அங்கே சுவாமிக்குப் பூசைகள் நிகழும். ஆண்டுக்கு ஒருமுறை மார்ச்சு, ஏப்ரல் மாதங்களுக்கு இடையில், சுவாமி தமது தேவியைச் சந்திப்பதற்காக உறையூரிலுள்ள ஸ்ரீநாச்சியார் கோயிலுக்கு ஆறாம் நாளன்று எழுந்தருள்வர் என்பது முன்னயே குறிப்பிடப்பட்டது.

அதன் பின்னர், ஒன்பதாம் திருநாளான பங்குனி உத்திரதினத்தன்று, திருவரங்கம் கோயிலின் வடமேற்கு மூலையிலுள்ள பிரதான பிராட்டியாரைக் காண சுவாமி செல்லும்போது, உறையூர் நாச்சியாரை சந்தித்து வந்ததை நினைத்து பெரிய பிராட்டி ஊடல் கொள்ள, அத்திருவூடல் நிகழ்ச்சியில் சுவாமியின் சார்பிலும் தாயார் சார்பிலும் இரு தொகுதிப் புரோகிதர்கள் வாதப் பிரதி வாதங்கள் செய்யும் முறையில் பல பாடல்களைப் பாடி அபிநயம் பிடிப்பர்.

இவ்வாறு இக்கோயிலில் மற்றும் எத்தனையோ, பல திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அவைகள் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லி விவரிப்பது இங்கு இயலாததாகும். அவைகள் அனைத்தும், திருவரங்கத்தில் நிலைபெற்று நடைபெற்று வருகின்ற விஷ்ணு வழிபாட்டு நெறிமுறையில், தனிப்பெரும் சிறப்பான தெய்வீகப் புனித ஆற்றலுக்குச் சான்று பகர்கின்றன. இவ்வாற்றல் திருவரங்கமானது, இந்தியா முழுவதுமே பெருமிதமுற்று மகிழ்தற்குரிய சிறப்புமிக்க மரபு நெறிக்கும், சிறந்த பல செயல் நிகழ்ச்சிகளுக்கும் உரிய ஓர் அரும் பெரும் நிலையாக, இன்றளவும் மாட்சிமை மிக்கு விளக்கி வருகின்றது.



பங்குனி உத்திர திருநாளில் ஸ்ரீ நம்பெருமாள் ஸ்ரீ ரங்கநாச்சியார்

ஸ்ரீ நம்பெருமாள் கற்பகவிருட்ச வாகனத்தில்



ஸ்ரீ நம்பெருமாள் ரத்னங்கி



ஸ்ரீ நம்பெருமாள் குதிரை வாகனத்தில்

திருவெள்ளறை
ச்வேதகிரி க்ஷேத்திரம்

பெருமாள்	:	புண்டரீகாக்ஷன் – கிழக்கே திருமுக மண்டலம் நின்ற திருக்கோலம்
தாயார்	:	பங்கஜவல்லி (செங்கமலதாயார்)
விமானம்	:	விமலாக்ருதி விமானம்
தீர்த்தங்கள்	:	குச, மணிகர்ணிகா, சக்ர, திவ்ய, புஷ்கல, பத்ம, கந்த, க்ஷீர, வராஹ தீர்த்தங்கள்
பிரத்யக்ஷம்	:	அயோத்தியை அரசாண்ட சிபிசக்ரவர்த்தி பூதேவி, மார்கண்டேயர் – கருடன்.
மங்களாசாசனம்	:	பெரியாழ்வார் திருமங்கை ஆழ்வார் (நிகமாந்த மஹா தேசிகன்)

1. இந்த சன்னதி சுமார் 50 அடி உயரத்தில் உள்ளது. முன் கோபுரம் பூர்த்தி ஆகாத நிலையில் உள்ளது. வெண்மையான பாறையால் ஆகிய ஒரு குன்றின்மீது பெருமாள் இருக்கிறபடியால் சவே தாத்ரி – அல்லது வெள்ளறை என்று பெயர் உண்டாயிற்று – ஸ்ரீதேவியாகிற பங்கஜவல்லி இந்த இடத்தில் தவம் செய்து இந்த ஸ்தலத்தை தன்னுடையது ஆக்கிக்கொண்டபடியாலும், (ஸ்ரீ) திருவெள்ளரை என்று ஆகிறது.

2. புராண வரலாறு

திருபாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலுடன் மஹாலக்ஷ்மி உல்லாஸமாக வார்த்தையாடி கொண்டிருக்கும்போது – லக்ஷ்மியின் கருணையால் ஸகல ஜீவராசிகளும் மிகவும் சந்தோஷமாக இருப்பதையும் கருத்தில் கொண்டு பகவான் அன்பு மிகுதியால் தேவியை நோக்கி "உனது கருணையால் – யாவரும் சந்தோஷமாக இருக்கின்றனர். துக்கம் என்பதே தெரியாமல் மிகவும் தேஜசுவுடன் இருக்கின்றனர். அதனால் மிக்க சந்தோஷமாக உள்ளது. தேவியே இப்போது உமக்கு வேண்டிய வரம் இருந்தால் கேட்பீராக" என்றார். அதற்கு மஹாலக்ஷ்மி. பிரபுவே, தங்களது திருமார்பில் நித்யவாசம் செய்யும் அடியேனுக்கு என்ன குறை இதைவிட மேலான பாக்யம் வேறு ஏதுமில்லை.

இருந்தாலும் தேவரீர் வரம் தரவேணும் என்று இச்சை பட்டுவிட்ட படியால் எனக்கு இந்த பாற்கடல் பிறந்தகம். இவ்விடத்தில் தேவரீரை காட்டிலும் அதிகமான ஆதிபத்யம் வேண்டும்" என்று வரம் கேட்டாள். அதற்கு பகவான்: தேவி, உமது விருப்பத்தை இங்கே நித்யசூரிகள் வாழும் வைகுண்டத்தில் நிறைவேற்ற முடியாது. இங்கு நானே சகலமும், ஆனாலும் எனக்கு மிகவும் பிரியமான பூலோகத்தில் அர்சாவதாரமாக எழுந்தருள போகிறேன். அப்போது உன் இஷ்டத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நான் திருவெள்ளரையில் பிரத்யட்சமாகி சிபி சக்கரவர்த்திக்கு தரிசனம் தரும்வேளை வரையில் அங்கே போய் தபசை பண்ணு. உமது இஷ்டம் நிறைவேறும் என்றார்.

ஸ்ரீதேவி அதன்படியே இந்த ஸ்தலத்தில் தற்காலம் 'பூங்கிணறு' என்று அழைக்கப்படும் கிணற்றில் உள்ள குகையில் தவம் செய்து கொண்டு இருந்தாள்.

இது இவ்வாறு நடக்கையில் அயோத்திமா நகரில் சிபி என்ற அரசன் அரசு புரிந்து வந்தான். ஒரு நாள் தனது குலகுருவான வஸிஷ்டரை தண்டம் சமர்பித்து (நமஸ்காரம்) மோக்ஷம் அடையும் உபாயத்தை உபதேசம் செய்யும்படி வேண்டினான். வஸிஷ்டர் அதற்கு "அரசே அவரவர் தனது தர்மத்தை குறைவர நடத்தி வந்தால் எல்லா இஷ்டங்களும் நிறைவேறும். நீர் க்ஷத்திரியர் ஆகையால் துஷ்ட நிக்ரஹம்–சிஷ்ட பரிபாலனம் செய்து வாரும்–சிறியதனால் பெரியது நலியாமல் ஸாது ஜன ரக்ஷணம் செய்து வருக" என்றார். அதன்படியே அரசாண்டு வருகையில் – பாரததேசத்தின் தென்பகுதியிலிருந்து மாரீச – ராவணாதி ராக்ஷசர்களால் – யாகங்களுக்கு ஹிம்சை ஏற்படுவதாக செய்திகள் வரவே, உடனே அரசன் தனது ராஜாங்கத்தை மந்திரிகளிடம் தற்காலிகமாக ஒப்படைத்துவிட்டு, தானே சகலவிதமான சேனா வீரர்களுடன் தென்திசை நோக்கி சென்றான். அது சமயம் 'நீலிவனம்' என்னும் ரமணீயமான தோட்டத்தின் அருகேயுள்ள ச்வேதகிரியில் முகாம் இட்டு படைகளுடன் தங்கி இளைப்பாறினான். அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அன்றைய இரவில் என்றும்; கண்டிராத ஒரு பெரிய ச்வேதவராஹம் (வெள்ளை பன்றி) சேனையின் முன் தோற்றுவதும் மறைவதுமாக இரவு முழுவதும் தொல்லை கொடுத்து சேனா வீரர்களை அலைக்கழித்தது – களைத்து சோர்ந்து போன வீரர்கள் சக்ரவர்த்தியிடம் தாங்கள் கண்ட அதிசயத்தை சொல்ல, அரசன் உடனே தானே சென்று அதைப் பிடிப்பதாகக் கூறினான். பொழுது புலரும் வேளையில் அதனை தொடர்ந்தான் – அப்போது வராகம் சுவேதகிரியை அடைந்து குன்றின் மீது ஏறி தன் உருவத்தை சுருக்கிக் கொண்டு உச்சியில் உள்ள ஒரு புற்றில் நுழைந்து விட்டது. இவ்விடத்தில் ஏதாவது விசேஷம் அவசியம் இருக்க வேண்டும் என்று நினைத்த அரசன் படையுடன் மலையை சுற்றி வந்தான். அங்கே ஒரு குகையில் 'மார்க்கண்டேயமுனிவர்' தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு நமஸ்காரங்கள் செய்து தான் கண்ட விஷயத்தை சொன்னான்.

'நீர் மஹாபுண்யசாலி – ஆதிவராஹமான ஸ்ரீமத்நாராயணனை கண்டாய். தவம் செய்யும் எனக்குப் புலப்படவில்லை. சீக்கிரமே அவர் எனக்கும் உனக்கும் ஸ்ரீதேவிக்கும் பிரத்யட்சமாக காட்சி தரப்போகிறார். நீர் பசுவின் (காமதேனு) பாலை கொண்டு புற்றுக்கு திருமஞ்சனம் செய்யும் என்றார். அவ்விதமே அரசன் செய்ய உடன் பகவான் – ஸ்ரீமந் நாராயணன் அங்கே பிரத்யட்சமாக அனைவருக்கும் காட்சி அளித்தார். ஸ்ரீதேவியும் அங்கே வந்தார். உடனே ப்ரும ருத்ராதி தேவர்களும் மற்றும் உள்ள சகல தேவர்களும் புஷ்பமாரி பொழிந்தனர். பெருமாளையும் – பிராட்டியையும் சேவித்தனர். அப்போது பெருமாள்– ஸ்ரீதேவியை பார்த்து

'நீர் விரும்பியபடியே, எனக்கு மிகவும் பிடித்தமான இந்த பூலோகத்தில் சுவேதிகிரியில் உமக்கு ஸகல ஆதிபத்யத்தையும் தந்தேன் நான் அர்சாரூபமாக இங்கு இருந்து கொண்டு எல்லாருக்கும் சேவைதர போகிறேன் என்று வரம் அருளினார்.

(இந்த புராண வரலாறு இன்றும் ப்ரும்மோத்ஸவத்தில் பத்தாம் திருநாள் அன்று 'எங்களாழ்வான்' வமிசத்தினரால் இன்றும் ஸ்லோக ரூபமாக மணிப் பிரவாள நடையில் படிக்கப்படுகிறது) இதற்கு தேவஸ் தானத்தில் மான்யம் உண்டு – நவராத்திரியிலும் விஜயதசமி அன்றும் மணிப்பிரவாள நடையில் 'எங்களாழ்வான்' வமிசத்தை சேர்ந்தவர்களால் தாயார் ஸன்னதியில் படிக்கப்படுகிறது). பிறகு மார்கண்டேய முனிவரிடம் சிபி சக்ரவர்த்தி தான் தென்திசை வந்த நோக்கத்தை சொல்லி – தெற்கே சென்று ராவணாதி ராக்ஷஸர்களையும் வதம் செய்யப் போவதாகச் சொன்னான். அதற்கு முனிவர் அரசே, நீர் செய்ய உத்தேசித்த காரியம் இப்போது நடைபெற முடியாது. பகவான் ஸ்ரீராமசந்திர மூர்த்தியாக அவதாரம் செய்து அதை நிறைவேற்ற திருவுள்ளம் கொண்டு உள்ளார். உமது இக்ஷ்வாகு வமிசத்தில் தான் நடக்கப்போகிறது. ஆகவே நீர் இப்போது அயோத்திக்குத் திரும்பச் செல்வீராக என்றார்.

ஆலய நிர்மாணமும்-கிராம நிர்மாணமும்

அரசன் மனக்குறையுடன் நின்றான். மார்கண்டேயர் அரசனை தேற்றினார். நமக்கு ஸேவைஸாதித்த புண்டரீகாக்ஷனுக்கு கோவிலும் மதிலும், குடியேற்றமும் செய்வீராக இதனால் உமக்கு ஸகல விதமான புண்யமும் வந்து சேரும் என்றார். அதைக் கேட்டு அரசன் கோவில் கட்டி வைத்தான். மூவாயிரத்து எழுநூறு அந்தணசிரேஷ்டர்களை குடும்ப ஸமேதராக வரவழைத்தான். வழியில் ஒருவர் இறந்துவிடவே பகவான் சக்ரவர்த்தியிடம் 'நீர் துக்கப்பட வேண்டாம். நாமே இறந்த வருக்கு பதிலாக இருந்து நீர் உத்தேசித்த மூவாயிரத்து எழுநூறு குடும்பக் கணக்கு குறைவு ஏற்படாமல் செய்துவிட்டோம், என்று கூறினார். இதைக்கேட்டு சிபி மனம் மகிழ்ந்து வரவழைத்த வேதியர்களுக்கு க்ருஹங்கள் முதலியன நிர்மாணம் செய்து பெருமாளுடன் 3700 குடும்பப் பிரதிஷ்டை செய்தார். உத்ஸவங்களை நடத்தி வைத்தார்.

இவ்விதம் ஸகலவிதமான ஏற்பாடுகளையும் – குறைவு இல்லாமல் செய்து முடித்து ஸ்ரீஸ்வேதகிரி நாதன் என்றும் குன்றின்மேல் விளக்காக பிரகாசித்துக் கொண்டு இருக்கும்படி செய்து அயோத்தி போய் சேர்ந்தான்.

பகவான் அளித்த வரத்தின் படி திருவெள்ளறையில் ஸகல ஆதிக்யமும் பங்கய செல்வியின் ஒவ்வொரு புறப்பாட்டிலும் பெருமாளுக்கு முன் தாயார் பல்லக்கில் எழுந்தருளுகிறாள். கோவிலின் கிராமமும்–நிலங்களும் பங்கய செல்வியின் பேரிலேயே 'பட்டா' முதலானவற்றில் ஏற்பட்டுள்ளன.ஒ

குசர் – அகஸ்தியர் இருவரும் தவம் செய்த இடமும் இதுவே ஆகும். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டு, சில திருப்பதிகள்

விளங்கும் சில திருப்பதிகள் ஆழ்வார் ஆச்சாரியார்கள் அவதரித்த இடமாக பெருமை பெறும்.

இந்த திருவெள்ளரையோ எனில் இருவிதமாகப் பெருமை படைத்தது.

'உய்யக்கொண்டார்' 'எங்களாழ்வான்' என்ற இரு மஹா ஆச்சார்யர்கள் அவதாரம் செய்த இடம்.

'உய்யக்கொண்டார்' அவதாரம் செய்யவில்லை என்றால் தெளியாத மறை நிலங்களை (ஸமஸ்கிருத சாஸ்திரங்களை) தெளிய உதவும் திவ்ய பிரபந்தங்கள் நமக்கு கிடைத்து இருக்காது.

ஸ்ரீமத் நாதமுனிகளிடமிருந்து அவர் சிஷ்யரான குருகை காவலப்பன் பக்தியோகத்தைப் பெற்றி தாம் மட்டும் மோக்ஷலோகம் சென்றார்.

மற்றொரு சிஷ்யரான புண்டரீகாக்ஷர் (உய்யக்கொண்டார்) – உலகே உய்யும்படியான திவ்ய பிரபந்தங்களை உபதேசமாகப் பெற்று உலகுக்கு வழங்கினார்.

அருளி செயல்மூலம் உலகை உய்யக் கொண்டவராகையால் 'உய்யக்கொண்டார்' என்று நாதமுனிகளால் அழைக்கப்பட்டார்.

எங்களாழ்வான்

எங்களாழ்வானுக்கு விஷ்ணுசித்தர் என்பது இயற்பெயர். கூரத்தாழ்வார் கண் இழந்தவுடன் நிறைவு பெறாத ஸ்ரீபாஷ்யத்தை இவரைக் கொண்டு பட்டோலை கொள்ளச் செய்து பூர்த்தி செய்தார் எம்பெருமானார்.

கூரத்தாழ்வாரின் மேதா விலாசத்தை இவரிடம் கண்டதால் எம்பெருமானார் இவரை 'எங்களாழ்வான்' என்று அபிமானித்தார்.

நடாதூர் ஆழ்வான் தமது பேரரான நடாதூர் அம்மாளிடம் 'தினவு கெட சொல்வான் திருவெள்ளரையான்' ஆகையால் நீ திருவெள்ளரை சென்று எங்களாழ்வானிடம் ஸ்ரீ பாஷ்யார் தங்களை கேட்டுவா என்றார்.

ஸகல சாஸ்திரார்த்தங்களும் கோருவதும் பிள்ளை எங்களாழ்வானுக் காய்த்து என்று நம்பிகளை கொண்டாடினார்.

நடாதூர் அம்மாளுக்கு ஆச்சார்யரான எங்களாழ்வானுடைய பரம்பரைக்கு 'அம்மாளாச்சாரியார்' என்ற விருது உண்டானது. இன்றும் அந்த வமிசத்தினர் பரம்பரை கூறுகிறது. திருவெள்ளரை 'கீழ திருமாளிகை மற்றும் மேலத் திருமாளிகை' சேர்ந்த இவர்களுக்கே கோவில் பண்டாரி கைங்கர்யங்களும் – எம்பெருமானார் சந்ததி கோவில் கைங்கர்யமும் உண்டு – உத்ஸவத்தில் ஸ்தலபுராணம் வாசிக்கும் உரிமையும் ஏகாதசி அம்மாவாகை புறப்பாட்டு சமயங்களில் 'வேதவிண்ணப்பம்' செய்யும் உரிமையும் உண்டு.

பெருமாளுக்கு தாயாரைப் போலவே – பாலை சுகோஷ்ணமாக (இதமான சூட்டுடன்) அமுது செய்தமையால் 'அம்மாளை' போன்று என்று பகவானே அபிமானம் கொண்டபடியால் அம்மாள் என்ற விருதும் ஏற்பட்டது.

பெரியாழ்வார்

எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற பெரியாழ்வார் கண்ணனிடத்தில் உள்ள பிரேமையான கனத்தால் அவனுடைய லீலைகள் அனைத்தையும் நேரே அனுபவித்து யசோதையாக பாவித்து – அனுபவித்து பாசுரமிடுகிறார். கண்ணனுக்கு தாய் யசோதையாகவே மாறி நீராட்டி, குழல்வாரி, பூச்சூட்டி முடித்தார். தன் கண்ணால் அவனைப் பார்க்கிறார். தான் காண்பதிலேயே திருஷ்டிதோஷம் வருமோ என்ற அச்சம்! மேலும் அப்போது அந்திப்பொழுது நெருங்குகிறது. இதையெல்லாம் நினைத்து காப்பிட விரும்பி கண்ணனை அழைக்கிறாள். திருவெள்ளரை செந்தாமரை கண்ணனை காப்பிடல் பதிகத்துக்கு விஷயமாக்கிக் கொள்கிறார்! யசோதை வடிவு கொண்ட பெரியாழ்வாரின் இப்பதிகம் நித்யானு ஸந்தானத்தில் உள்ளது.

`திருஷ்டி தோஷம்` வருமோ என்று மிகவும் அஞ்சிய யசோதையான பெரியாழ்வாரின் அச்சம் நீங்கும்படியாக விளங்குவதால் எல்லா திவ்ய தேசத்து ஸ்வாமிகளுடைய மங்களாசாசனம் இப்பெருமாளுக்கு நித்யம் உண்டு.

திருமங்கை ஆழ்வார்

தென்றலின் படிகளையும், மரங்கள், கொடிகள், பொழில்கள் ஆகியவை பற்றி பரக்கப் பேசி உள்ளார். தேசிகரும் தனது ஹம்ஸசந் தேசத்தில் இப்பெருமாள் பற்றி பாசுரமிட்டு உள்ளார்.

இந்த விதமான ஆழ்வார்களால்

``சந்திரன் மாளிகை சேரும் சதுரர்கள் வெள்ளறை``

``மஞ்சுதவழ்மணிமாடம் மதிள் திரு வெள்ளரை``

``முப்போதும் வானவரேத்தும் முனிவர்கள் வெள்ளரை``

``நல்லார்கள் வெள்ளரை``

``எணியுடைச் செம்பொன் மதிள் வெள்ளரை``

என்றெல்லாம் பெரியாழ்வாரால் பாடல் பெற்ற இந்த ஊர் இடையில் பெரிய மணல் வாறிக் காற்றால் பெரும்பகுதி அழிந்து போனதாகக் கூறுகின்றனர். இப்போது உள்ளது கோவிலும் சிறிய கிராமமும்தான்.

சில முக்கிய விசேஷங்கள்

1. இங்கே கோவில் ஒரு கோட்டைபோல அமைக்கப்பட்டுள்ளது. இருபெரிய மதிள்கள் உள்ளன. பெரிய பிரகாரத்தில் தென்பாகத்தில் கல்அறைகள் உள்ளன. அங்கிருந்து ஒலி எழுப்பினால் எதிரொலி தெளிவாகக் கேட்கும்.

2. தக்ஷிணாயன – உத்தராயண வாசல் உள்ளது. தை முதல் – ஆனி முடிய உத்திராயண வாசல் திறந்து இருக்கும். ஆடி முதல் மார்கழி முடிய தக்ஷிணாயன வாசல் திறந்து இருக்கும்.

3. இங்கே மூலவருக்கு தைலகாப்பு திருமஞ்சனம் உத்ஸவ மூர்த்திக்கு –பிரார்த்தனை செய்து திருமஞ்சனம் செய்ய வேண்டு

மென்றால் கோவிலின் எதிரே உள்ள 'பலிபீடத்தில் தான் செய்ய வேண்டும். அதற்கு தான் எண்ணெய், பால், தயிர், தேன் மற்றும் பஞ்சாமிர்த திருமஞ்சனம் செய்து வழிபட வேண்டும். மழை பெய்யாமல் வரண்டு போனால் இங்கே பலிபீடத்திற்குத் திருமஞ்சனம் செய்வார்கள்.

4. ஸ்வஸ்திக் குளம் என்னும் குளம் ஒன்று உண்டு. ஒரு துறையில் குளிப்பவர்களை மறுதுறையில் உள்ளவர்கள் பார்க்க முடியாத வண்ணம் அமைந்த இதை மாமியார் நாட்டுப்பெண் குளம் என்பார்கள். இது அந்த நாளிலேயே ஸ்வஸ்திக் சின்னம் இருந்ததைக் குறிப்பிடுகிறது.

ஸ்ரீ வைஷ்ணம் வளரக் காரணமான திவ்ய ஸ்தலம் என்பதைத் திருவுளத்தில் கொண்டு ஸ்ரீ உடையவர் இங்கே திருவெள்ளரையில் வாசம் செய்தார்.

உடையவர் எழுந்தருளின இடத்திலேயே உடையவருக்கு கோவிலும் உள்ளது. உடையவர் குளமும் உள்ளது.

6. புண்டரீகன் என்ற யோகி திருவெள்ளரையில் ஒரு நந்தவனம் உண்டாக்கி துளசியைப் பயிர் செய்து அந்த துளசியைக் கொண்டு பெருமாளையும் தாயாரையும் பூஜித்து வந்தார். பகவான் யோகியின் பக்தியைக் கண்டு அவருக்குத் தரிசனம் அளிக்க சங்கல்பம் கொண்டு விட்டான்.

ச்வேதகிரிநாதன், புண்டரீகனுக்கும் மற்றுமுள்ள அடியார்களுக்கும் காட்சி அளித்ததுபோல் செந்தாமரை கண்ணனூர ஸேவை கொடுத்தார். அந்த தரிசனத்தை நெஞ்சமென்னும் உட்கண்ணால் கண்டு மகிழ்ந்த புண்டரீகயோகியும் பகவானுடைய கண் அழகில் ஈடுபட்டு ஆனந்தபரவசராகி 'ஜிதம் தே புண்டரீகாஷ'

தாயாய அளிக்கிற தாமரை கண்ணா

என்றும் ஸ்தோத்திரம் செய்தார்.

'புண்டரீகாக்ஷ' என்று புண்டரீகன் அழைத்தால் சுவேதகிரி நாதனுக்கு 'புண்டரீகாக்ஷன்' என்று பெயர் ஏற்பட்டது.

2. இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவரெல்லாம் என்ற பெரியாழ்வார் மங்களாசாசனத்துக்குச் சேர. தேவதா—பிம்பங்கள் காணப்படுகின்றன.

8. குருக்ஷேத்திர யுத்தத்தில் பகவான் கண்ணனுடைய தேரில் கொடியாக அமர்ந்த சிறிய திருவடிபோல திருவெள்ளரைக்கு செல்லும் பாதையின் ஆரம்பத்தில் சிறிய திருவடியின் கோவில் அமைந்துள்ளது ஆச்சர்யமே.

9. 18 படிகள் ஏறி கோவிலுக்குள் செல்ல வேண்டும். மேலே கண்ணன் கோவில் உள்ளது.

10. கோவில் உள்ளே காரிசித்தி ஆஞ்சநேயர். சக்கரத்தாழ்வார். ஆண்டாள் மற்றும் ஆழ்வார்கள் சன்னதிகள் உள்ளன.

3ம் திருநாள் அன்று ஸ்ரீரங்கம் வடதிரு காவிரிக்கு (கொள்ளிடம்) வருகிறார். திருவெள்ளரையிலிருந்து ஸ்ரீரங்கம் வரையிலும் 'ஸ்ரீபாதம் தாங்கிகள்' என்று அழைக்கப்படும் பிராமணர்கள் பல்லக்குகள்

தோளில் சுமந்து கொண்டு வருவது (சுமார் 12 கி.மி) தனிச் சிறப்பு.

இக்கோவில் ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. திருவெள்ளரை சென்றுவர திருச்சி பேருந்து நிலையத்திலிருந்து டவுன் பஸ்வசதி உண்டு. திருச்சி – துறையூர் நேர்வழி பஸ்ஸிலும் வரலாம்.

இப்படி மேன்மை வாய்ந்த – ஸ்ரீரங்கத்துக்கும் முன்னதானாலும் 108 திவ்ய தேசங்களில் ஆதியில் உண்டானதும் – புராண இதிகாச வரலாறு சிறப்புடன் கூடியதுமான திருவெள்ளரைக்கு வருகைதந்து சேவித்து அருள்பெற திருவுள்ளங்களை வேண்டுகிறோம்.

ஸ்ரீ ராமாநுசர் நியமித்த 74 சிம்மாசனாதிபதிகளில் ஒருவரான 'எங்களாழ்வான் காலம்' கி.பி. 1097 –1197. 100 வருடங்கள் வாழ்ந்தார்.

உய்யக்கொண்டார் – கி.பி. 886 – 975. 89 ஆண்டுகள் வாழ்ந்தார்.

I ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருக்கோயில்
உறையூர், திருச்சி வட்டம்.

1. பெயர்	..	திரு உறையர் நிசுளாபுரி 'கோழியூர்'
2. பெருமாள்	..	அழகிய மணவாளன் நின்ற திருக்கோலம் 'ப்ரயோக சக்ரம்'
3. தாயார்	..	மூலவர் வாஸலக்ஷ்மி
4. உத்ஸவர்	..	உறையூர் வல்லி–கமலவல்லி
5. விமானம்	..	கல்யாண விமானம்
6. தீர்த்தம்	..	கல்யாண தீர்த்தம் (கமல புஷ்கரணி)
7. தீர்த்தம்	..	காவேரி நதி, குடமுருட்டி

8. வடக்கே திருமுக மண்டலம் – ஸந்நதி வடக்கு நோக்கி

9. ப்ரத்யக்ஷம்	..	முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் ரவிதர்மராஜா நந்த சோழனுக்கும் ப்ரத்யக்ஷம்
10. திருப்பாணாழ்வார்		அவதார ஸ்தலம்.
11. தேவஸ்தானம்		அருள்திரு அரங்கநாதஸ்வாமி தேவஸ்தானத்திற்கு உட்பட்டது.

நந்த சோழ ராஜாவுக்கு குழந்தை இல்லாத குறையைத் தீர்த்து இலட்சுமி கமல மலரில் அவதரித்து இவ்விடம் உறைந்த காரணம் பற்றி திரு உறையூர் என்றும் உறந்தை என்றும் பெயர் ஏற்பட்டது.

முன்னொரு காலத்தில் இவ்வூரில் ஒரு கோழி ஒரு யானையை போரில் வென்றபடியால் 'கோழியூர்' என்ற பொருளும் ஏற்பட்டது.

12. மங்களாசாஸனம் .. திருமங்கையாழ்வார்.

13. பதிகம் .. பெரிய திருமொழி 9ம் பத்து–2ம் திருமொழி 5ம் பாட்டு 'கோழியும் கூடலும்'

நந்த சோழ ராஜனும் உறையூர் கமலவல்லி நாச்சியாரை ஸ்ரீ அரங்கனுக்குத் திருமணம் செய்து வைக்கிறார். மூலஸ்தானத்தில் அழகிய மணவாளன் நின்ற, திருக்கோலத்திலும் மூலவர் நாச்சியார் கல்யாண அவசரத்தில் வீற்றிருந்த திருக்கோலத்திலும் விளங்குகிறார். இந்த ஸந்நிதி ஸ்ரீரங்கம் நம்பெருமாளை நோக்கி வடக்கு திசை பார்த்து அமைந்துள்ளது. ஸ்ந்நிதி ராஜகோபுரத்தில் மேற்குப் புறத்தில் உறையூர் நாச்சியார் கல்யாணத் திருக்கோலத்திலும். கோபுரத்தின் கிழக்குப் பக்கத்தில் கல்பக விருக்ஷத்தின் அடியில் ஸ்ரீரங்கநாதனும், கமலவல்லியும் பாணிக்ரஹணம் செய்து கொண்டு, முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு காட்சிதரும் சிற்பங்கள் இன்றும் காணலாம்.

14. நாச்சியார் திருநட்சத்திரம் ஆயில்யம் –பங்குனி மாதம் ஆயில்யத்தில் ஸ்ரீரெங்கநாதர் உறையூர் எழுந்தருளி பெருமாளும் தாயாரும் ஏக ஸிம்மாசனத்தில் சேர்த்தியில் காட்சி கொடுக்கிறார். ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்த கன்னிகைகளுக்கு விவாஹத்தை தாயார் அருள்பாலிக்கிறார். இது ஒரு பிரார்த்தனை ஸ்தலம். இத்திருக் கோயிலில் ஸேனை முதல்வர் சந்நிதி, கருடன் ஸந்நிதி, ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீதிருப்பாணாழ்வார், ஸ்ரீஉடையவர் ஸந்நிதிகள் இருக்கின்றன. ஸந்நிதிக் குள் கல்யாண "கமல" புஷ்கரணியும் உள்ளது. இதில் தெப்ப உத்ஸவத்தி லும், திருஅத்யயன உத்ஸவத்திலும் தாயார் தீர்த்தம் ஸாதிக்கிறார். தாயாருக்கு பரமபத வாசலும் அமைந்துள்ளது. பகல் பத்து உத்ஸவத்தில் அறையர்களால் "முத்துக்குறி" (பெருமாள் தாயார் கல்யாணச்சேர்த்தி) அபிநய வியாக்யானத்தின் மூலமும், இராப்பத்தில் இரணியவத நாடகமும் நடைபெறுகிறது. இராப்பத்தில் 4 நாட்களும், கோடை உத்ஸவத்தில் 4 நாட்களும் வீணை ஏகாந்தம் நடைபெறுகிறது. இந்த திருத்தாயார் கோடை உத்ஸவம், வஸந்த உற்சவம், ஜேஷ்டாபிஷேகம், நவராத்திரி உத்ஸவம், ஊஞ்சல் உத்ஸவம், திரு அத்யயன உத்ஸவம், தெப்ப உத்ஸவம் முதலியவைகள் கண்டருளுகிறார். தெப்பத்தன்றும், மறு தினம் பந்தக்காட்சி யன்றும் தாயார் புஷ்பப் பல்லக்கில் திரு வீதி உலா எழுந்தருளுகிறார். இந்த க்ஷேத்திரத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தாயார் புறப்பாடு நடை பெறுகிறது. ஊஞ்சல் சாற்றுமுறையன்று புஷ்பப் பல்லக்கில் உள் பிரதட்சிணம் எழுந்தருளுகிறார். இந்த ஸந்நிதியின் மேற்கு பிரகாரத்தில் யாகசாலை அமைந்துள்ளது. இதில் ரக்ஷாபந்தன உத்ஸவங்களில் ஹோமங்கள் நடைபெறுகின்றன. இத்திருக்கோயிலில் கருவறையைச் சுற்றி திருவுண்ணாழிப் பிரதட்சிணம் அமைந்துள்ளது. மஹா மண்டபமும், அர்த்த மண்டமும் உள்ளது.

இங்குள்ள ஸ்ரீநம்மாழ்வார் சந்நிதியிளல் மத்ஸ்ய கூர்ம நரசிம்ம அவதாரங்களும் ஆழ்வார் ஆசார்ய வைபவங்கள் நீதிகளைப் போதிக்கும் கதைகளும். யமதண்டனைகளும் வெகு அழகாக சித்திர ரூபமாய் எழுதப்பட்டுள்ளது. இது அவசியம் பார்க்கத் தகுந்தது.

நம்மாழ்வார் ஸந்நதிக்கு அடுத்தாற்போல் தேவஸ்தான ஆபிஸும், உக்கிராண அறையும். புஷ்கரணிக்குத் தெற்கில் மடைப்பள்ளியும் அமைந் திருக்கிறது.

திருப்பாணாழ்வார் உறையூரில் அவதரித்தபடியால் "மெய் ஞானத் துறையூரான்" என்று பெயர் பெற்றார். இந்த ஸந்நிதியில் ஸ்ரீநம்பெருமாள் ஸ்ரீரங்கத்தில் தென்திருக்காவேரி படித்துறையிலிருந்து லோக சாரங்க மஹாமுனிகள் தோளில் திருப்பாணாழ்வார் எழுந்தருளி அறையர் இசையுடன் ஸ்ரீரங்கநாதன் கர்ப்பக்ருஹம் அடைந்து ஐக்யமான விபரம் சித்ர ரூபமாக இன்றும் இங்கு காணலாம்.

சிறப்பு அம்சங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூரில் நாச்சியார் திருமாளிகையான ஸ்ரீஆண்டாள் ஸந்நிதியில் ஸ்ரீஆண்டாள் ஸ்ரீரங்கமன்னார், கருடன் மூவரும் ஏகஸிம்மாஸனத்தில் எழுந்தருளி "முப்புரியூட்டின ஸ்தலம்" என்றும் பெயர். திரு உறையூர் நாச்சியார் திருக்கோயிலிலும் அழகிய மணவாளன் கமலவல்லி நாச்சியார், திருப்பாணாழ்வார் எழுந்தருளியிருப்பதால் பொருந்தும்.

மூவர் அனுபவம்

1. கருவறையியல் அழகிய மணவாளன் மூலவர், கமலவல்லி நாச்சியார் மூலவர், உத்ஸவர் ஆக 3 பேர்கள் ஸேவை சாதிக்கிறார்கள்.

2. பகல் பத்து மண்டபத்தில் ஒரே தூணில்

1. திருமங்கை யாழ்வார். 2. திருப்பாணாழ்வார்
3. ஸ்ரீஇராமானுஜர் மூவரும் காட்சி தருகிறார்கள்.

3. இத்திருக்கோயிலில் ஸ்ரீநம்மாழ்வார் ஸ்ரீதிருப்பாணாழ்வார். ஸ்ரீஇராமானுஜர் மூன்று ஸந்நதிகளே உள்ளது.

4. ஸ்ரீராமானுஜர் ஸந்நிதியில் அவருடைய ஆராதன எம்பெருமான் "படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்றும் பக்தி வெள்ளம்" பாசுரப்படி இராமர். இலக்ஷ்மணர், சீதை மூவரும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

5. ஸ்ரீ திருப்பாணாழ்வார் ஸந்நிதியில் ஸ்ரீதிருப்பாணாழ்வார் உத்ஸவர் பாதங்களில் "பாண் பெருமாள் சணம் பதுமத்திராமானுசன் என்கிற பாசுரப்படி இராமானுஜரும், பக்கத்தில் மணவாளமாமுனிகளும் அர்ச்சாவிக்ரஹமாக எழுந்தருளியிருக்கிறார்கள். பிரதி ரோகிணி அன்று ஆழ்வார் கண்ணாடி அறையில் இந்த மூவரையும் ஸேவிக்கலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக உறையூர் குடமூட்டி சமீபம் உள்ள கழனியில் திருப்பாணாழ்வார் அவதரித்த இடம். அவர் ஜன்ம பூமியில் ஸ்ரீரெங்கநாதன் திருவடிகள் படும்படியாக பங்குனி ப்ரும்மோத்ஸவம் 6ம் திருநாள் உறையூருக்கு ஸ்ரீரெங்கநாதர் எழுந்தருளுவது கண்கொள்ளக்காட்சியே.

அழகிய மணவாளனுக்கும், ஸ்ரீகமலவல்லி நாச்சியாருக்கும் ஸ்ரீரங்கத்தில் உள்ளது போலவே பொங்கல், பெரிய வசரம், சீராண்ணம், சம்பா, அரவணைத்தளிகை முதலியன குறைவின்றி நடைபெற்று வருகிறது.

முப்புரியூட்டின ஸ்தலம் அகாரம்–உகாரம்–மகாரம்–"பெருமாள்–தாயார்–சேதனன்" மூன்றும் சேர்ந்து "ஓம்" என்று ஆகும்.

தாயாருடைய ஒவ்வொரு புறப்பாட்டிலும் ஸேனை முதலியாருக்கு மரியாதையுடன் திருப்பாணாழ்வாருக்கு சரமும் ஸ்ரீசடகோபனும்

ஸாதிக்கப்படுகிறது. வருஷ திருநட்சத்திரத்தன்று ஸ்ரீநம்மாழ்வாருக்கு ஸ்ரீஉடையவருக்கும் வருஷ திருநட்சத்திரம் உஸ்தவம் பத்து நாட்களும் ஸ்ரீதிருப்பாணாழ்வாருக்கும் தாயார் ஸந்நிதியில் மங்களாசாசனம் மரியாதைகள் செய்விக்கப்படுகின்றன.

இன்றும் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரெங்கநாதருக்கு அர்ச்சனை நாமாவளிகள் 108ஒன்றாக "நிசுளாபுரவல்லிசாய நம: ஓம் என்பது பெருமையுடன் விளங்குகிறது.

அருள்மிகு பிரும்மபுரீஸ்வரர் திருக்கோயில் கீழ அன்பில், இலால்குடி வட்டம்

இத்திருக்கோயிலில் இறைவன் சத்யவாகீஸ்வரர் ஆகவும் இறைவிசௌந்தர நாயகியாகவும் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர். இத்தலம் பிரும்மனாலும், வாகீஸ்வர முனிவராலும் பூஜை செய்து வழிபட்ட தலம். கொள்ளிடத்திற்கு தென்கரையில் நின்ற சம்பந்தர், அப்பர் இவர்களது பாடல்கள் செவிமடுத்த "செவி சாய்த்த விநாயகர்" திருவுருவம் இத்திருக் கோயிலினுள் தென்மேற்கு திசையில் பிரகாரத்தில் அமைந்துள்ளது.

அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில் அன்பில், லால்குடி வட்டம்

எம்பெருமாள் ஸ்ரீமன்நாராயணன் பஞ்சவ்யூக மூர்த்திகளாக அவதாரம் செய்து உலகத்தில் உள்ள சகல ஜீவராசிகளையும் சிருஷ்டித்து காப்பாற்றுகிறான். அந்த விமான பஞ்சவ்யூக மூர்த்தி ஸ்தலங்களில் ஒன்றான இத்திருத்தலத்தில் நான்காவது மூர்த்தியான அணிருத்த மூர்த்தியாக அவதாரம் செய்து ஸ்ரீசுந்தரராஜன் என்ற திருப் பெயருடன் விளங்குகின்றார். தன்னுடைய திருநாபிக்கமலத்தில் நின்று பிரும்மதேவர் தோன்ற அவருக்கு திருமந்திரங்களை உபதேசித்து உலகை சிருஷ்ட்டி செய்கின்றார். பாற்கடலில் பள்ளி கொண்ட திருக்கோலம். அதை திருமழிசை ஆழ்வார் "பாற்கடலில் பள்ளி கொண்ட" என்று பாடியுள்ளார். "நாகத்தனைக் குடந்தை, வெஃகா, திருவெவ்வுள் நாகத்தினை அரங்கம், பேர், அன்பில் நாகத்தனைப் பாற்கடல் கிடக்கும் ஆதிநெடுமால் அணைப்பார் கருத்தன் ஆவான்".

(நாலாயிர திவ்ய பிரபந்தம் நான்காம் திருவந்தாதி திருமழிசை ஆழ்வார் பாடியது)

தலத்தின் பெருமை

இத்திருத்தலம் லால்குடியிலிருந்து கிழக்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பொன்னிநதி என்று ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய நதியான கொள்ளிடம் நதியின் வடபால் உள்ள மண்டுகபுஷ்கரணிக்கு மேல்பாகத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. வால்மீகி தபசிருந்து க்ஷ தபசிற்கு சந்துஷ்ட்டராகி எம்பெருமான் ஸ்ரீசுந்தரராஜன் வால்மீகி மகரிஷிக்கு தரிசனம் தந்து பிரும்மரிஷியான அவருக்கு அருள் பாலித்தார்.

எனவே இந்த க்ஷேத்திரம் வால்மீகி க்ஷேத்திரம் என்றும் வால்மீகி ரிஷியின் அன்பிற்குக் கட்டுப்பட்டு பகவான் ஸ்ரீசுந்தரராஜன் காட்சியருளிய

தால் அன்பில் என்றும் அழைக்கப்படுகிறது. ஆழ்வார் மங்களசாசனத்தில் "அன்பில்" என்றே குறிப்பிடுகின்றார். ஆழ்வார் மங்களாசாசனம் செய்தபடியால் 108 வைஷ்ணவத் தலங்களில் ஒன்றாக விளங்குகிறது.

தீர்த்த மகிமை

பிரும்ம தேவரின் அசுவமேதயாகத்திற்கு உறுதுணையாக இருந்த சப்த ரிஷிகளில் ஒருவரான குத்சர் என்ற மகரிஷி வேத மந்திரம் ஓதும் பொழுது உச்சரிப்பில் தப்பாக சொல்லியதால் வேத புருஷனின் சாபம் கிடைத்தது. அந்த சாபம் பலிதமாகி மண்டூக உருவம் (தவளை உருவம்) அடைய, மகரிஷியானவர் வேதபுருஷனிடம் "சாபம்" நீங்க செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்க, வேதபுருவின் வால்மீகி க்ஷேத்திரம் (அன்பில்) சென்று அங்குள்ள புஷ்கரணியில் ஸ்நானம் செய்து 48 தினங்கள் பரந்தாமன் ஸ்ரீசுந்தரராஜனை சேவை செய்தால் ஸ்ரீசுந்தரராஜன் திருவருளால் சாபம் நீங்கும் என்று சொல்லிவிட்டார். வை யாரும் அவ்வாறு செய்ய, சாபம் நீங்கி அவருக்குப் பழைய உருவம் கிடைத்தது. எனவே இப்புஷ் கரணிக்கு "மண்டூக தீர்த்தம்" எனப் பெயர் வந்தது. அவர் அன்பிற்கு இணங்கி ஸ்ரீசுந்தரராஜன் சாபம் நீக்கியதால் வைகுண்ட ஏகாதசி இராப்பக்கத்தில் ஆழ்வார் மோக்ஷத்தன்று அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் வை புஷ்கரணிக்கு எழுந்தருளி தீர்த்தவாரி கண்டருளுகிறார். சேவார்த்திகளும் உடன் தீர்த்தமாடி ஆரோக்கியம் அடைகிறார்கள் என்பது ஐதீகம்.

இதர மகிமைகள்

இத்திருத்தலத்தை தஞ்சையை ஆண்ட சோழ மன்னர் சுந்தரசோழர் திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தியுள்ளார் என்பது கல்வெட்டு வாயிலாக தெரிய வருகிறது.

விமானம்

இத்திருக்கோயில் விமானம் தாரக விமானம் எனப் பெயர் பெற்று விளங்குகிறது. இத்திருத்தலத்தில் தாயார் ஸ்ரீசுந்தரவல்லித் தாயார் தனிக்கோயில் தாயாராக எழுந்தருளி அருள் பாலிக்கிறார்.

பெருமாள் சந்நதி எழில் தோற்றம்

அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் மூலவர் சயனத் திருக்கோலத்தில் ஸ்ரீதேவி, பூமிதேவி, பிரும்மதேவர் சேஷயனத்துடனும் உற்சவர் வடிவழகிய நம்பி ஸ்ரீதேவி, பூமிதேவியுடனும் காட்சியளித்து அருள் பாலிக்கின்றனர்.

இத்திருக்கோயில் திருச்சி கல்லணைப் பேருந்து தடத்தில் இலால்குடியை அடுத்து 8 கிலோ மீட்டர் தூரத்திலும் திருச்சி விழுப்புரம் காட்லைனில் இலால்குடி இரயில் நிலையத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,
கீழன்பில் இலால்குடி வட்டம்

திருச்சி மாவட்டம். இலால்குடி வட்டம், இலால்குடியிலிருந்து கல்லணை கும்பகோணம் சாலையில் சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் கீழன்பில் என்னும் கிராமத்தில் அருள்மிகு மாரியம்மன்

கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். அம்மன் முதலில் சுயம்புவாக அவதரித்து அதன் பின்னர் மூலவர் அம்மன் சுதை வடிவிலும் உற்சவர் உலோகத்தாலும் அமையப் பெற்றுள்ளது. அம்பாள் "ஸ்ரீதளாபரமேஸ்வரி" என்ற திருநாமத்துடன் விளங்குகின்றது. அம்பாள் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் சகோதரி என்றழைக்கப்படுவதுண்டு. இவ்வாலயத்தில் சுயம்பு அம்பாளுக்கு முதலில் அபிஷேகமும் அதன் பின்னர் உற்சவருக்கு அபிஷேகம் நடைபெறுவதும் வழக்கம். மூலவர் சுதை ஆகையால் அபிஷேகம் கிடையாது. அம்மை மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள் இங்கு வந்து தங்கி அம்பாள் சுற்றுப் பிரகார நீர்த்தொட்டியில் நீர் நிரப்பி அபிஷேக தீர்த்தத்தை அர்ச்சகர் மூலம் உடல் மீது தெளித்துக் கொண்டு குணம் பெற்று வருவது கண்கூடாக நடக்கின்றது. பால்காவடி மற்றும் காவடிகள் அக்னி சட்டி போன்ற வேண்டுதல்களும் இங்கு நடைபெறுவது வழக்கம். கண்நோயால் பாதிக்கப்படுபவர்கள் இங்கு அம்மனிடம் வந்து பூசாரி மூலம் பச்சிலை சாறு பிழிந்து குணமடைகிறார்கள். அதன் காரணமாக அம்மனுக்கு வெள்ளிக்கண்மலர்களை காணிக்கையாக வழங்குகின்றனர். அம்பாள், பக்தர்களுக்கு அருள்பாலித்து இத்தலம் பிரார்த்தனை தலமாக விளங்குகிறது.

இந்த அம்மனுக்கு பங்குனி மாதம் முதல் ஞாயிறு அன்று ஆண்டுதோறும் "பூச்சொரிதல்" விழா வெகுசிறப்பாக நடைபெறுகிறது. திரளான சேவார்த்திகள் அது சமயம் வந்து அம்மனை தரிசித்து தங்களது பல்வேறு வகையான காணிக்கைகளை சமர்ப்பித்துச் செல்கின்றனர். பூச்சொரிந்த அன்று முதல் அம்மன் விரதம் இருந்து மாப்பட்டினியாக திணைமாவையே ஆகாரமாகவும் பானகம், நீர்மோர், இளநீருடன் அருந்தி பங்குனி இறுதி செவ்வாய் அன்று விரதம் பூர்த்தியடைந்து திருத்தேரில் ஏறி அம்மன் பவனி வருவது கண்கொள்ள காட்சியாகும்.

அம்மன் திருத்தேர் காண திரளாக பக்தர் கூட்டம் பல வகையான பிரார்த்தனைகளுடன் வந்து கூடி "ஆயி மகமாயி" என உணர்ச்சி பெருக்கோடு அம்மனை அழைத்து வழிபடுவார்கள்.

இத்திருக்கோயிலில் முடிக்காணிக்கை செலுத்த தனி இடவசதியும் பக்தர்கள் தங்க விடுதியும் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் கொள்ளிடக்கரையில் அமைந்துள்ளது.

அம்மனுக்கு வைகாசி மாதம் பஞ்சப்பிரகார உற்சவம் நடைபெறும். அம்மன் அதுபோது உற்சவர். சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் செய்வித்து பவனி வருவது வெகுசிறப்பாக நடைபெறுகிறது.

அமி காட்டழகிய சிங்கர் கோயில் ஸ்ரீரங்கம்
க்ஷேத்திரம்: கஜாரண்ய க்ஷேத்திரம்

பெருமாள் சுமார் எட்டு அடி உயரமுள்ள சிலாரூபியான லக்ஷ்மி நரசிம்மன் தனது இடது திருத்தொடையின் பேரில் ஸ்ரீமஹாலக்ஷ்மியை உட்கார வைத்துக்கொண்டு அவர் இடது கையால் அணைத்துக்

கொண்டும், வலது கையால் அபய ப்ரதானம் பண்ணிக் கொண்டும் உட்கார்ந்த திருக்கோலத்தில் ஸேவை அளிக்கிறார்.

சந்நதி மேற்குப் பார்த்து உள்ளது உத்ஸவ பிம்பம் இல்லை. இது புராண ஸ்தலம்.

காடு மண்டிய இப்பிரதேசத்தில் யானைகள் சஞ்சாரம் செய்து தொந்திரவு செய்வதை நீக்கும் பொருட்டு இந்த சந்நிதியில் நரஸிம்மன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கோயில் சுற்று மதில்களோடு கூடிய பிரகாரம் ஒன்று உள்ளது.

ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கிலுள்ள ரயில்வே கேட்டுக்கு கீழ்புறத்தில் இந்த சந்நதி உள்ளது. ஒவ்வொரு மாதம் ஸ்வாதி திருநட்சத்திரம் அன்று திருமஞ்சனம் செய்யப்படுகிறது. இது ஒரு பிரார்த்தனை ஸ்தலம். பக்தர் வேண்டுதலுக்கு இணங்கி அவர்கள் குறிப்பிட்ட நாட்களிலும் ஸ்ரீரங்கநாதஸ்வாமி தேவஸ்தானம் மூலம் திருமஞ்சனம் நடத்திக் கொடுக்கிறார்கள்.

ஆனி மாதம் ஸ்வாதி நட்சத்திரத்திலும் ஆடி மாதம் ஜ்யேஷ்டா பிஷேகத்தன்றும் காவேரியிலிருந்து யானையின் மேல் திருமஞ்சனம் வெகுவிமரிசையாகக் கொண்டு வந்து திருமஞ்சனம் நடத்தப்படுகிறது.

வைகாசியில் நரஸிம்ம ஜெயந்தி, ஆனி மாதம் ஸ்வாதி, ஆடி ஜ்யேஷ்டாபிஷேகம் பங்குனி யுகாதிப் பண்டிகை நான்கு நாட்களிலும் பெரிய சந்நிதி ஸ்ரீரெங்கநாதனிடமிருந்து தைலக்காப்பு திருப்பணி யாரங்கள் அனுப்பப்பட்டு நிவேதனம் நடைபெறுகிறது. இந்த நான்கு நாட்களிலும் அறையர் சேவை உண்டு.

பக்தர்கள் கல்யாணங்களை இந்த ஸந்நிதியில் பிராத்தித்து வருகிறார்கள். எல்லோருக்கும் வசதியாக ஸ்ரீரெங்கம் தேவஸ்தானம் மூலம் கல்யாண மண்டபம் கட்டப்பட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலுக்கு வெளியில் உள்ள பெரிய மண்டபத்தில் ப்ரதி விஜயதசமி காலை புறப்பட்டு ஸ்ரீரெங்கநாதர் நாட்பூராவும் இந்த மண்டபத்தில் எழுந்தருளி காட்சி தருகிறார். சாயங்காலம் இங்கிருந்து தங்கக் குதிரை வாகனத்தில் புறப்பட்டு வாசலில் உள்ள நாலுகால் மண்டபத்தில் நின்று கொண்டு எதிரில் உள்ள வன்னி மரத்தை நோக்கி அம்பு போட்டு விட்டு ஸ்ரீரெங்கம் கருவறைக்கு எழுந்தருளுகிறார்.

புரட்டாசி மாதம் எல்லா சனிக்கிழமைகளும் விசேஷ நாட்கள் ஆழ்வார்கள் 'அழகியான் தானே அரியுருவேன் தானே' என்று பாடியிருக்கிறார்கள்.

இராமானுஜருடைய சீடரும் ஸ்ரீரெங்கத்தில் பிறந்தவருமான ஸ்ரீபிள்ளைலோகாச்சாரியார் என்னும் மகான் ஏகாந்த இடமான காட்டழகிய சிங்கர் சன்னதியில் உட்கார்ந்து கொண்டு 'ஸ்ரீவசநபூஷனம்' முதலிய 18 ரஹஸ்ய கிரந்தங்களை இயற்றியுள்ள பெருமை இந்த சந்நிதியைச் சேரும்.

ஸ்ரீ காட்டழகிய சிங்கர் ஆலயம் ஸ்ரீரங்கம் இரயில் நிலையத்திற்கு கீழ்ப்புறம் அமைந்துள்ளது.

அரங்கனின் பால் ஆழ்வார்கள் அமுத மொழிகளில் சில

1, ஸ்ரீபெரியாழ்வார், முதலாயிரம்– பெரியாழ்வார் திருமொழி 4ம் பத்து–9ம் திருமொழி 10வது பாட்டு மரவடியை

கைந்நாகத்திடர்கடிந்த கனலாழிப்படையுடையான் கருதுங்கோயில்
தென்னாடும் வடநாடு நீதொழநின்ற திருவரங்கம் திருப்பதியின் மேல்
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டு சித்தன் விரித்த தமிழுரைக்கவல்லர்
எஞ்ஞான்று மெம் பெருமானிணையடிக்கீழ் இணைபிரியாதிருப்பர்தாமே

2. ஸ்ரீ ஆண்டாள், முதலாயிரம்–நாச்சியார் திருமொழி 11 ம் பத்து திருமொழி 3ம் பாட்டு தாமுகக்கும்

பொங்கோதம்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதுஞ்சோராமே ஆள்கின்றவெம் பெருமான்
செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்
எங்கோல்வளையால் இடர்தீர்வராகாதே.

3. ஸ்ரீகுலசேகரழ்வார், முதலாயிரம்–பெருமாள் திருமொழி முதல் பதிகம் 10ம் பாட்டு இருளிரிய

வன் பெருவானகமுய்ய, மரருய்யமண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய
துன்ப மிகு துயர கலவயர்வொன்றில்லாச்சுகம்வளர அகமகிழுந்
தொண்டர் வாழ

அன்பொடுதென் திசை நோக்கிப்பள்ளி கொள்ளும் அணியரங்கன்
திருமுற்றத் தடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுகண்டு யானுமிசைந்துடனேயென்று கொலோ
இருக்கும்நாளே.

4. ஸ்ரீ தொண்டரப் பொடியாழ்வார், முதலாயிரம்–திருமாலை காவலில் புலனை வைத்து 2ம் பாட்டு

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதாவ மரரேறே ஆயர்தம் கொழுந்தேயென்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

5. ஸ்ரீ திருப்பணாழ்வார், முதலாயிரம்– 'அமலாதிபிரான்' 10 வது பாட்டு கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெய்

உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணவே.

6. ஸ்ரீ திருமங்கையாழ்வார் பெரிய திரு மொழி 5ம் பத்து 8ம் திருமொழி 'ஏழையேதலன்' 9ம் பாட்டு

துளங்கு நீண்முடியரசர்தங்குரி சில் தொண்டைமன்னவன்
திண்திறலொருவற்கு
உளங்கொளன்பினோடின்னருள்சுரந்து அங்கோடுநாழிகை வேமுடனிப்ப

வளங்கொள்மந்திரம் மற்றவற்கருளிச் செய்தவாறு அடியேனறிந்து உலக
மளந்தபொன்னடியே யடைந்துய்ந்தேன் அணிபொழில்
திருவரங்கத்தம்மானே.

7. ஸ்ரீநம்மாழ்வார் – திருவாய்மொழி 7ம் பத்து 2ஆம் திருவாய்மொழிப்பதிகம்.

கங்குலும்பலும் கண்டுயிலறியாள் கண்ணநீர்கை களாலிறைக்கும்
சங்கு சக்கரங்களென்றுகைகூப்பும் தாமரைக் கண்ணென்றே தளரும்
எங்ஙனெதரிக்கேனுன்னைவிட்டென்னும் இருநிலம் கைதுழாவிருக்கும்
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய் இவள் திறத்தென் செய்கின்றாயே.

8. ஸ்ரீ பொய்கையாழ்வார், "இயற்பா" முதல்திருவெந்தாதி 9ம் பாட்டு

ஒன்று மறந்தறியேன் ஓதநீர்வண்ணனை நான்
இன்று மறப்பனோவேழைகாள்
அன்று கருவரங்கத்துட்கிடந்த கைதொழு தேன்கண்டேன்
திருவங்கமே யான்திசை.

9. ஸ்ரீபூதத்தாழ்வார் – "இயற்பா" இரண்டாம் திருவெந்தாதி 88ம்பாட்டு.

திறம்பிற்றினிய றிந்தேன் தென்னரங்கத்தெந்தை
திறம்பாவழிசென்றார்க் கல்லால்
திறம்பாச் செடிநரகை நீக்கித் தாம்செல்வதன்முன்
வானோர் கடிநகரவா சற்கதவு.

10. ஸ்ரீபேயாழ்வார் "இயற்பா" மூன்றாம் திருவெந்தாதி 62ம் பாட்டு.

விண்ணகரம்வெஃகா விரிதிரை நீர் வேங்கடம்
மண்ணகரம்மாமாடவேளுக்கை மண்ணகத்த
தென்குடந்தை தேனார்திருவரங்கம் தென்கோட்டி
தன்குடங்கைநீரேற்றான் தாழ்வு.

11. ஸ்ரீதிருமழிசையாழ்வார் "இயற்பா" நான்முகன் திருவெந்தாதி 3ம்பாட்டு.

பாலிற்கிடந்ததுவும் பண்டரங்கமேயதுவும்
ஆலில்துயின்றதுவு மாரறிவார்? ஞாலத்
தொருபொருளை வானவர்தம்மெய்பொருளை அப்பி
லருபொருளை யானறிந்தவாறு.

12. ஸ்ரீதொண்டரடிப் பொடியாழ்வார் முதலாயிரம் "திருமாலை" 19 வது பாட்டு.

குடதிசைமுடியவைத்துக் குணதிசைபாதம் நீட்டி
வடதிசைபின்பு காட்டித் தென்திசையிலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுளெந்தை அரவணைத்துயிலுமாகண்டு
உடலெனக்குருமாலோ என்செய்கேனுலகத்தீரே.

இத்திருக்கோயிலைப் பற்றிய சில தகவல்கள்..........

திருக்கோயிலின் பரப்பளவு : 156 ஏக்கர்

கோபுரங்கள் 21 (மொட்டைகோபுரங்கள் உள்பட)

பிரகாரங்கள் 7 (ஏழு)	தீர்த்தங்கள் 9 (ஒன்பது)
1. திருவெண்ணாழி பிரகாரம்	1. சந்திரபுஷ்கரணி.
2. ராஜமகேந்திரன் திருச்சுற்று	2. வில்வதீர்த்தம்.
3. குலசேகரன் திருச்சுற்று.	3. சம்பு தீர்த்தம்
4. ஆலிநாடன் திருச்சுற்று.	4. பகுள தீர்த்தம்
5. அகலங்கன் திருவீதி.	5. பலாச தீர்த்தம்
6. திருவிக்ரமன் திருவீதி (உத்திரவீதி)	6. அசுவத்த தீர்த்தம்
	7. ஆம்ர தீர்த்தம்
7. கலியுகராமன் திருவீதி (சித்திரை வீதி)	8. கதம்ப தீர்த்தம்
	9. விருட்சி தீர்த்தம்.

ஸ்தல விருட்சம் : புன்னை விருட்சம்

ஆகமம் : பாஞ்சராத்ரம்

மங்களாசாசனம் : ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பபெற்றது.

ராஜகோபுரம் : 236 அடி உயர ராய கோபுரம்

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு நாயக்க மன்னர்களால் ஆரம்பிக்கப்பட்டு முற்றுப்பெறாதிருந்த தெற்கு ராயகோபுரம் அகோபிலமடம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகளின் பெரு முயற்சியால் தென்கிழக்கு ஆசியாவிலேயே உயரமானதாக 236 அடி உயரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ராஜகோபுரத்தின் மொத்த உயரம் : 236 அடி

மொத்த நிலைகள். 13

மொத்த கலசங்ள் : 13

உபகோயில்கள்

1. அருள்மிகு புண்டரீகாட்சப் பெருமாள் திருக்கோயில், திருவெள்ளறை.
2. அருள்மிகு வடஜம்புநாதர் திருக்கோயில், திருவெள்ளறை.
3. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், அன்பில்.
4. அருள்மிகு சுந்தரராஜபெருமாள் திருக்கோயில், அன்பில்.
5. அருள்மிகு பிரும்மபுரீஸ்வார் திருக்கோயில், அன்பில்.
6. அருள்மிகு கமலவல்லி நாச்சியார் திருக்கோயில், உறையூர்.
7. அருள்மிகு முனீஸ்வரி திருக்கோயில், ராஜகோபுரம்.
8. அருள்மிகு காட்டழகிய சிங்கர் திருக்கோயில், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ நம்பெருமாள் முத்துக்கொண்டை சேவை

ஸ்ரீ நம்பெருமாள் ராஜமுடி சேவை

ஸ்ரீ வேணுகோபாலன் சன்னதி ஹொய்சல சிற்பம் ஒரு பகுதி



சேஷராயர் மண்டப ஒரே கல்லில் ஆன தூணின் ஒரு பகுதி தோற்றம்

ஸ்ரீமந் நாதமுனிகள் சன்னதி:

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் பிரதான வாயிலின் ஸ்ரீரெங்கா கோபுரத்தின் அருகாமையில் ஸ்ரீரெங்கவிலாச மண்டபத்தில் அமைந்துள்ளது "ஸ்ரீமந்நாதமுனிகள் சன்னதி" ஆழ்வார்களின் ஞானத்தமிழ் இடைக்காலத்தில் மறைந்து சில நூற்றாண்டுகள் இருளில் கழிந்தன. யோக நெறியோடு தேவ கான நெறியும் வல்ல நாதமுனிகள் காட்டுமன்னார் கோயில் பிறந்து, "ஆராவமுதே" என்ற நம்மாழ்வார் பாசுரத்தின் சுவை உணர்ந்து ஆழ்வார்கள் பாடல்களைத் தேடி அலைந்தார். பின் யோகத்தில் அமர்ந்து நம்மாழ்வாரைக் கண்டு, அவர்பால் மந்திரோபதேசம் பெற்று, தமிழ்மறையை தொகுத்து, முறைப்படுத்தி, இன்னிசை சேர்த்து, தாளம் அமைத்து, அபிநயத்துடன் ஆடிப்பாடி, தொண்டர்க்கு அமுதென அளித்தவர் ஸ்ரீ மந்நாதமுனிகள். இவர் ஆச்சார்ய பரம்பரையில் இரண்டாவது இடம் பெற்றவர். சொட்டைகுல பிராமண குலத்தில் ஈஸ்வர பட்டாழ்வாருக்கு மகனாக பிறந்தவர். இவர் ஈஸ்வர முனிகளின் தந்தையாவார். இவருக்கு உய்யக் கொண்டார். குருகை காவலப்பன் முதலான எட்டு பிரதம சீடர்கள் தோன்றி வைணவத்தை வளர்த்தனர்.

திருக்கச்சி நம்பிகள் சன்னதி:

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் கருட மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது "ஸ்ரீதிருக்கச்சி நம்பிகள் சன்னதி" பூவிருந்தவல்லியில் (சென்னை) வீரராகவ செட்டியாருக்கும் கமலையாருக்கும் மகனாக அவதரித்தவர். தனக்கு கிடைத்த செல்வத்தைக் கொண்டு திருநந்தவனம் அமைத்து, பூக்கள் உண்டாக்கி மாலை தொடுத்து பெருமாளுக்கு அணிவித்து வாழ்ந்தவர். இவர் ஆளவந்தாரின் அருமை சீடராவார். திருக்கோட்டியூர் நம்பிக்கு மாட்டுகாரனாக பணிசெய்தவர். ஏழரை ஆண்டு சனியின் ஆக்கிரமிப்பை ஏழரை நாழிகையாக்கி நம்பிக்கு நலம் செய்தார் ஸ்ரீமந்நாராயணன். இவர் "தேவராஜாஷ்டகம்" என்னும் பிரபந்தத்தை அருளினார். இத்திருக்கோயிலில் உள்ள ஸ்ரீதிருக்கச்சி நம்பிகள் சன்னதியில் உள்ள கல்தூணில் நவநரசிம்மர் (ஒன்பது வகையான நரசிம்மர் தோற்றம்) வடிவமைக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

பிள்ளைலோகாச்சாரியார் சன்னதி:

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் வளாகத்தினுள் சேஷராயர் மண்டபத்திற்கும் ஸ்ரீராமானுஜர் சன்னதிக்கும் இடையே உள்ள மணல்வெளியில் அமைந்துள்ளது. "அருள்மிகு பிள்ளைலோகாச்சாரியார் சன்னதி". இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை மகனாக அவதரித்தவர். வரதராஜப் பெருமாளின் அம்சமாகவும், சிறந்த கல்விமானாகவும் திகழ்ந்த இவர் முமுட்சுப்படி, யாத்ருச்சிப்படி போன்ற நூல்களை இயற்றியவர். உலகில் பிறவி எடுத்து ஆன்மாக்கள் இறுதியில் பெறவேண்டியது முக்திப்பேறு. முக்தியில் இச்சையுடையவர் (முமுட்சு) அறிந்து கொள்ள வேண்டிய ரகசியங்கள் மூன்று. அவை திருமந்திரம், த்வயம், சரமஸ்லோகம் ஆகும். இவற்றை "சாஸ்திர தாத்பர்யம்" என்பர். எம்பெருமான் பத்ரியில் நரனுக்கு திருமந்திரத்தையும், திவ்ய விபூதியில் மஹாலஷ்மிக்கு த்வயத்தையும்,

பாரதப்போருக்கு முன் தேர்த்தட்டில் அர்ச்சுனனுக்கு சரம ஸ்லோகத்தை அருளினார். இந்த மூன்று மறைப் பொருள்களை எளிதாகவும், தெளிவாக உணரும் வண்ணம் "முமுட்சுப்படி" என்ற நூலினை பிள்ளைலோகாச்சாரியார் இயற்றினார்.

அன்னதான கூடம்:

இத்திருக்கோயிலுக்கு வரும் சேவார்த்திகளும் மதியம் 12.0 மணியளவில் உணவு வழங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வ அவர்களால் துவக்கப்பட்ட "அன்னதான திட்டம்" மிகச்சிறப்புடன் நடைபெற்று வருகிறது. நாள் ஒன்றுக்கு 200 நபர்களுக்கு காய்கறிகளுடன் கூடிய உணவு வழங்குவதற்காக புதியதாக அன்னதான கூடம் ரூ.18.. லட்சம் செலவில் கட்டப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது சேஷராயர் மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ள புதிய அன்னதான கூடத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும், அமர்ந்து உண்ணுவதற்கு கடப்பா கல்லினால் ஆன மேஜை மற்றும் பெஞ்ச் வசதி செய்யப்பட்டுள்ளது நாள் ஒன்றுக்கு 200 நபர்களுக்கு அன்னதானம் வழங்க தொகை ரூ.2,500/ நிர்ணயம் செய்யப்பட்டு நன்கொடையாளர்கள் மூலமாகவும், இதற்கென பிரத்யேக உண்டியல் வருவாயின் மூலமாகவும் சிறப்புடன் அன்னதான திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் இத்திருக்கோயிலின் உபகோயில்களான திருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்சப்பெருமாள் திருக்கோயில், அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், உறையூ அருள்மிகு கமலவல்லிநாச்சியார் திருக்கோயில் ஆகியவைகளில் நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு அன்னதானம் சிறப்புடன் வழங்கப்பட்டு வருகிறது.

பேட்டரி கார்:

இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வா அவர்களால் திருக்கோயிலுக்கு காணிக்கையாக வழங்கப்பட்ட பேட்டரி கா ஒன்றும், திருக்கோயிலால் கொள்முதல் செய்யப்பட்ட பேட்டரி கார் ஒன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெருமாள், தாயார் மற்றும் சக்கரத்தாழ்வா சன்னதிகளுக்கு சேவார்த்திகள் எளிதாக சென்றுவர பாதை அமைக்கப்பட்டு இலவசமாக பேட்டரி கார்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

பயணியர் தங்கும் விடுதி:

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான திருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்சப்பெருமாள் திருக்கோயிலின் வெளிப்புறம் அமைந்துள்ள தேரோடும் வீதியின் மேற்குபுற மூலையில் இத்திருக்கோயிலின் சார்பில் சுமார் ரூ.23.70 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக பயணியர் தங்கும்விடுதி கட்டப்பட்டு சேவார்த்திகளின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டு வருகிறது. வெளியூரிலிருந்து வரும் சேவார்த்திகள் மேற்படி ஆலய கண்காணிப்பாளரிடம் முன் அனுமதி பெற்று தங்கும் விடுதியினை இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.



ஸ்ரீ தொண்டரடிப் பொடிஆழ்வார் முதலாயிரம் திருமாலை 19வது பாட்டு.

* * குடதிசைமுடியை வைத்துக் குணதிசைபாதம் நீட்டி
வடதிசைபின்பு காட்டித் தென்திசையிலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுளெந்தை அரவணைத்துயிலுமாகண்டு
உடலெனக்குருமாலோ என்செய்கேனுலகத்தீரே.

ஸ்ரீ ராஜா பிரஸ், மதுரை. போன் : 2327025